# திருக்கோயில்

ஜூலை 1975 (95) ரூ. 1



# அருள்திரு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்

## பழனி

பழனி ஞானதண்டாயுதபாணியைப் பணிந்திட வாரீர் !
அழகான திருமுருகன் அருள் பெறவே திரண்டு வாரீர் !
செந்தேனும் பாலும் மணக்கும் சேயோனை வழிபட வாரீர் !
சந்தன விபூதி மணக்கும் திருமேனி கண்டு மகிழ வாரீர் !

முடிகாணிக்கை தரத் தனியிடம் !
தங்குவதற்கேற்ற வசதிகள் !
முதியவரும் முடியாதோரும் முருகன் அருகே செல்ல இழுவை ரயில் வசதி !
பொங்கியெழும் பேரழகினைத் தாங்கிவரும் தங்கரதம் காண வசதிகள்!
தங்கமயில் மீது பவனி வரும் முருகனுக்கு அர்ச்சனை, அபிஷேகத்தின் விசேஷ கவனம்.

1. அருள்மிகு பழனியாண்டவர் கலைக்கல்லூரி
2. அருள்மிகு பழனியாண்டவர் இந்தியப் பண்பாட்டுக்கல்லூரி
3. அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலைக்கல்லூரி
4. அருள்மிகு பழனியாண்டவர் செந்தமிழ்க் கல்லூரி
5. பழனியாண்டவர் செந்தமிழ் கல்லூரி
6. செவிடர் பள்ளி
7. நாதசுரக் கல்லூரி
8. வேத ஆகமப்பாடசாலை
9. அன்பு இல்லம்
10. முதியோர் இல்லம்.
11. குழந்தைகள் காப்பகம்.
12. மருத்துவமனை
13. சித்த வைத்தியசாலை
14. நடமாடும் வைத்தியசாலை.

பழனித்திருமலையில் நாளும் பெருகிவரும் பக்தர்கட்குப் போதிய வசதிகள் செய்து தருவதற்காக ஒருகோடியே ஐந்து லட்ச ரூபாய் செலவில் மாபெரும் திருப்பணி திட்டம் செயல்பட உள்ளது. இந்த ஆலயத்திருப்பணிகளுக்குத் தாங்கள் கொடுக்கும் நன்கொடைகள் மத்திய அரசின் வருமானவரி இலாகாவில் வரி விலக்குக்கு உட்பட்டது. எனவே இம்மாபெரும் திருப்பணித் திட்டத்தின் வெற்றிக்குத் தங்களால் இயன்ற அளவு நன்கொடை வழங்கியருளி அருள்மிகு ஞான தண்டாயுதபாணி சுவாமியின் பேரருளுக்குப் பாத்திரராகி நல்வாழ்வு பெறுமாறு அனைவரையும் வேண்டிக் கொள்கின்றோம்.

**திரு. என். நாச்சிமுத்து**, எம். எல். ஏ.,
**திரு. புலவர். சி. பழனிச்சாமி**, எம். எல். ஏ.,
**திரு. பச்சையப்ப கவுண்டர், ஏ.**
அறங்காவலர்கள்.

**இரா. அர்ச்சுனன்**, பி.ஏ.,
துணை ஆணையர், நிர்வாக அதிகாரி.

# திருக்கோயில்

மாலை 17
இராக்கத, ஆனி
சூலை, 1975
மணி 10

முகப்பு :

மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலின் தேர்த் திருவிழாக் காட்சி.

வண்ணப்படம் உதவியவர் :

திரு. கே. இராமச்சந்திரன், பி. காம்., மதுரை.

## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள் !

* 'திருக்கோயில்' திங்கள் இதழின் 'சந்தாதாரர்கள்' ஆகச் சேர விருப்பமுள்ளவர்கள் ''திரு. ஆணையர், அறநிலைய ஆட்சித் துறை, சென்னை-600034'' என்னும் முகவரிக்கு ரூபாய் பன்னிரண்டு அனுப்பி எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

* அந்தந்த வட்டார அறநிலைய உதவி ஆணையர்களின் அலுவலகங்களிலும் சந்தாவைச் செலுத்திச் சந்தாதாரராகப் பதிவு செய்து கொள்ளலாம்.

* இதழ்கள் தவறாது கிடைத்திடச் சந்தாதாரர்கள் முழு முகவரியைத் தெரிவிக்க வேண்டும். முகவரி மாற்றத்தை உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.

* எல்லா ஊர்களுக்கும் முன் பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை.

ஆண்டுச் சந்தா ரூ. 12/- தனி இதழ் ரூ. 1/-

## பொருளடக்கம் (95)

அருள்மிகு கருணை இல்லம்
மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர்
திருமுருகாற்றுப் படையின் சிறப்பு
ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.
தொடக்கத்தில் அடக்கம்
—கே. எஸ். ஜெகன்னாதன்
திருமுருகாற்றுப்படை கருத்துச் சுருக்கம்
—ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.
யானை எழுதிய ஓலை
—ம. அ. முருகேசன், பி.ஏ., பி.எல்.,
பஞ்சாமிர்தம்
—டி. என். சுசிசுப்பிரமணியன்
திருப்புகழ் அமிழ்தம்
திருக்கச்சூர்த் திருக்கோயில்
கே. எஸ். நரசிம்மன், பி.ஏ., பி.எல்., ஐ.ஏ.எஸ்.,
இன்றையத் தேவைக்கு இராமலிங்கர் நெறி
—தவத்திரு ஊரன் அடிகள்
இராமபிரானின் இணையிலா அழகு
—மகாவித்வான் பி. ப. அண்ணங்கராசாரியர்
அம்பிகையின் அழகு வெள்ளம்
—சக்திதாசன்
கோயில்களில் வற்கடப்பணி
—கீ. சீதரன், எம்.ஏ.,
திருஞான சம்பந்தர்
—மனசை ப. கீரன், பி.ஏ., பி.டி.
வடதிருமுல்லைவாயில் கல்வெட்டுகள்
—ஏகாம்பரநாதன், எம். ஏ.
திருவித்துவக்கோட்டு அம்மான்
—ந. சுப்புரெட்டியார், எம்.ஏ., பிஎச்.டி.,

ஆசிரியர்
ந. ரா. முருகவேள்
எம்.ஏ., எம்.ஓ.எல்.

''என் கடன் பணிசெய்து கிடப்பதே''

துணை ஆசிரியர் :
கே. எஸ். ஜெகன்னாதன்

# அருள்மிகு கருணை இல்லம்

## முதல்வர் டாக்டர் கலைஞர்

75-12-10

ஏறத்தாழ 25 ஆண்டுக் காலமாகச் சென்னையில் நான் வாழ்ந்து வருகிறேன் என்ருலும் இன்று முதன் முதலாக கபாலீசுவரர்ஆலயத்தில் நுழைந்திருக்கின்றேன்.

ஆண்டவன், அனுதை ரட்சகன் என்பதோடு 25 ஆண்டுக் காலத்திற்கு முன்பு ஆண்டவனைப் பாராட்டுவதோடு காரியம் முடிந்தது. உண்மையிலேயே ஆண்டவனுடைய ஆலயங்கள் அனுதைகளை ரட்சிக்கின்ற இடங்களாக அமைய வேண்டும் என்கிற சமரச உடன்பாட்டின் காரணமாகத்தான், இன்றைக்கு இந்த விழாவில் அடிகளாரும், வாரியாரும் கலந்து கொள்கிருர்கள்.

158604

அவர்கள் வந்து இந்தக் காரியத்தை வாழ்த்த வேண்டும் என்று நாங்கள் கேட்டுக் கொண்டோம். அவர்கள் வந்து இதற்குத் தேவையான முத்திரையைக் குத்தி விடுவார்களானுல், பிறகு மறுபடி எங்கேயிருந்தாவது எழுந்தாலும், அதற்கு மதிப்பு இருக்காது என்பது எங்களுக்குத் தெரியும். ஆலயங்களில் இருக்கிற வருமானத்தை, தொகையை, பொருளை இப்படி அனுதைகளுக்காக நடத்தப்படுகிற இல்லங்களுக்காகச் செலவழிக்கலாமா,ஆண்டவனின் காரியங்கள் தடைபட்டு விடாதா, இது தேவைதானு என்ற மறுப்பு, அனுதைச் சிறுவர்களின் மீது அவர்களுக்கு எழுகின்ற எரிச்சலின் காரணமாக உருவாகிறதோ, இல்லையோ இந்தக் காரியங்களைச் செய்கிற எங்கள் மீது ஏற்படுகின்ற இயல்பான எரிச்சலின் காரணமாக அனுதைப் பிள்ளைகள் கேடுற நேருமே என்கிற அச்சத்தின் காரணமாகத்தான் வாரியாரை, அடிகளாரைப் போன்றவர்கள் இந்த விழாவிற்கு வருகை தந்து இதற்குத் தங்களுடைய முத்திரையைக் குத்த வேண்டும் என்று நாங்கள் விரும்பினேம். அவர்களுக்கு மேல் ஆண்டவனிடம் அதிக பக்தி உள்ளவர்களோ, ஆண்டவனைக் காப்பாற்றக் கூடியவர்களோ வேறு யாரும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆகவே அவர்களே வந்து நற்சான்றிதழ்களை வழங்கிவிட்டபிறகுநாங்கள்தொடர்ந்து துணிந்து இந்தக் காரியங்களை ஒவ்வொரு ஆலயத்திலும் செய்து கொண்டேயிருப்போம்.

வாரியார் பேசும்போது, ஆண்டவனே அனுதை, அந்த அனுதையின் ஆலயத்தில் அனுதைக் குழந்தைகளுக்கும் இல்லம் அமைப்பது பொருத்தமுடையது என்று குறிப்பிட்டார். நான் இன்னென்றையும் சொல்ல வேண்டுமேயானுல், என்னுடைய தந்தையே ஓர் அனுதை. என் தந்தை முத்துவேலர் பிறந்த ஏழாவது நாளில் தன் தாயாரையும், அடுத்த ஓரிரு திங்களில் தன் தந்தையையும் இழந்தார். திருக்குவளை என்ற சிறு கிராமத்தில் தனித்து அனுதையாக விடப்பட்ட அந்தக் குழந்தையைத் தில்லையம்மாள், சர்க்கரையம்மாள் என்கிற இரண்டு பெண்மணிகள் எடுத்து வளர்த்த காரணத்தால்தான் அவர் வளர்ந்தார், வாழ்ந்தார்; என்னையும் பெற்ருர்; இன்று அனுதைகளுக்கான இல்லங்களை அமைக்கின்ற பணி நடைபெறுகிறது. ஆக அனுதைகளிடம் எனக்கு அன்பு ஏற்பட அதுவும் ஒரு காரணம் ஆகும். என் தந்தையை யாருமே எடுத்து வளர்க்காமல் இருந்திருந்தால், அந்த அனுதைகளிடமிருந்தும் ஏதாவது நல்லவைகள் தோன்ற இயலும்; பத்து அனுதைகளில் ஒன்றிலிருந்தாவது பத்து நல்ல காரியங்கள் தொடங்கிட முடியும்.

இன்றைக்குத் தமிழகத்தில் ஜூன் 3-ஆம் தேதியன்று மூவாயிரம் அனுதைப் பிள்ளைகளை 52 இல்லங்களில் நாம் சேர்க்கிருேம். அவர்கள் தங்களுடைய படிப்பு முடிகின்ற வரையில் இதிலே சேர்ந்து வளரலாம். படிப்பு முடிந்த பிறகு வேலை வாய்ப்புகளில் அந்த அனுதைச் செல்வங்களுக்கு நாம் முன்னுரிமை வழங்க முடியும் என்ற அறிவிப்போடு திட்டம் தொடங்கப்பட்டிருக்கிறது.

அனுதை இல்லங்களுக்குச் செல்வம் மிகுந்தவர்கள் உதவி செய்ய வேண்டும். யாரோ டெல்லியில் இருப்பவர்கள் வரியாக எடுத்துக் கொண்டு போவதை இங்கே இருப்பவர்களுக்கு வாரி வழங்கக் கூடாதா என்று வாரியார் கேட்டார். பெயரே வாரியார் என்று இருப்பதால், வாரி வாரி வழங்கக் கூடாதா என்று கேட்டார்.

நான் ஒரு வேடிக்கையான கதையைச் சொல்வேன். ஒரு செல்வந்தரிடம் ஒருஅனுதை ஆசிரமம் நடத்துகின்றவர் சென்று, ''நான் அனுதை ஆசிரமம் நடத்துகின்றேன்; அதற்கு நீங்கள் ஏதாவது உதவி செய்ய வேண்டும்'' என்று கேட்டார். உடனே, செல்வந்தர், ''அப்படியா, நான் இந்தத் தெருவிலிருந்து இரண்டு மூன்று அனுதைக்குழந்தைகளை அனுப்பி வைத்து உதவி செய்கிறேன்'' என்று சொன்னதாக ஒரு வேடிக்கைக் கதை உண்டு. அப்படி இல்லாமல் பொருள் நிறைந்தவர்கள் பொருள் உதவி செய்ய வேண்டும். இப்படிப்பட்ட காரியங்கள் பொது மக்களுடைய ஒத்துழைப்போடு நடைபெற்ருக வேண்டும். அரசின் சார்பில் பரந்த அளவில் நாம்இன்றைக்குஇத்திட்டத்தை மேற்கொண்டிருக்கிருேம் என்ருலும் பொது மக்களையும் ஈர்க்கத்தக்க வகையிலே அவர்களும் இதில் பங்கு பெற வேண்டும் என்ற நிலைமையில் அவர்கள் தொடர்பு கொண்டிருக்கிற ஆலயங்கள் இதிலே ஒரு விகிதாசாரத்தைச் செலவில் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று முறைப்படுத்தி, ஆகிய செலவில் 75 சதவிகிதத்தை

அறநிலையத் துறையும், 25 சதவிகிதத்தை அரசும் மேற்கொள்ள வேண்டுமென்றும், தொடக்கத்தில் இதற்காகக் கட்டப்படுகின்ற கட்டடங்களுக்கான செலவு முழுவதையும் — அதாவது இப்போது முதலில் தொடங்கப்படுகின்ற 52 இல்லங்களைக் கட்டுவதற்கான செலவு முப்பது இலட்சம் ரூபாயை அரசாங்கமே செய்வது என்றும் திட்டமிட்டு இன்றைக்கு இதனை நாம் அறிவித்திருக்கின்றோம்.

இதிலே ஆண்டவனுக்கு விரோதமான காரியம் எதுவும் இல்லை; இது ஆண்டவனுக்கு உடன்பாடான காரியம் என்பதையும் அவர்கள் விளக்கமாக இங்கே குறிப்பிட்டார்கள். வாரியார் ஆரம்பத்தில் நெருப்பை எடுத்துக் காட்டி, நெருப்பு சிவம்; அதிலே இருக்கிற சூடு சக்தி; செம்மை கணபதி; ஒளி முருகன் என்று சொன்னார். இந்த நான்கும் சேர்ந்த நெருப்பே கடவுளாக இருந்தால், அந்த ஒரு கடவுளையே வணங்கலாகாதா என்ற என்னுடைய கேள்விக்கு அவர்கள் பதில் அளிக்கும் வகையில்தான் ஒரு கட்டடத்திற்கான பிளானைப் பலரும் போடுவதைப் போல, பல கடவுள்கள் சொல்லப்படுகிறது என்று குறிப்பிட்டார்கள். நாங்கள் எல்லாம் பிளான் எல்லாம் போடப்பட்டு வீடுகளைக் கட்டிய பிறகு குடி ஏறலாம் என்று கருதுகிறோம். பிளான் போடும் போதே குடியேறி விட்டால் வீடு கட்டி முடியாது என்பதற்காகத்தான் வாரியார் போன்றவர்கள், அடிகளார் போன்றவர்கள், தெய்வீகப் பேரவையில் உள்ளவர்கள் அத்தனை பேரும் சேர்ந்து இது தான் கடவுள் என்ற ஒரே கடவுளைக் காட்டி விடுவீர்களானால், சங்கடங்கள் இல்லாமல் போய்விடும்.

அவர்கள் சொன்ன நெருப்பு சிவனாக; சூடு சக்தியாக, செம்மை கணபதியாக, ஒளி முருகனாக இங்கே ஒருமித்துச் சொல்லப்பட்ட நேரத்தில் நான் நினைத்துக் கொண்டேன்.

இன்றைய குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்திற்கு வாரியார் எவ்வளவு அருமையான உதாரணத்தைச் சொல்கிறார் என்று நினைத்துக் கொண்டேன். கணவன், மனைவி, இரண்டு குழந்தைகள் என்று சொன்னார்கள். இரண்டுக்கு மேல் இப்போது வேண்டாம் என்றுதான் இன்றைக்கு அரசாங்கம் சொல்லிக் கொண்டிருக்கிறது. அப்படி ஆண்டவனே அந்தக் காலத்தில் நடத்திக் காட்டியிருக்கின்றான்; அதற்குப் பிறகும் இது ஆண்டவனுக்கு விரோதமான காரியம் என்று இன்றைக்கு இருக்கிற மதத்தினர் கருதுகிறார்களே, அந்த அச்சத்தை விட வேண்டும். இந்த நான்கும் சேர்ந்த நெருப்பு கூட வெறும் நெருப்பாக இருந்தால் அது அணைந்துவிடக் கூடும். அணையாத நெருப்புக் கோளமாக — என்றைக்காவது ஒரு நாள் அணைந்தால், அண்ட சராசரங்கள் எல்லாம் அழிந்துவிடும் என்று சொல்லத் தக்க சூரியன்தான் பெரும் நெருப்பு; அணையாத நெருப்பு; அந்தச் சூரியனைத்தான் நாங்கள் தேர்ந்தெடுத்திருக்கிறோம். இது ஏதோ தேர்தல் பிரச்சாரம் என்று வாரியார் கருதிவிடக் கூடாது.

தை மாதத்தில் தமிழர்கள் கதிரவனைத் தான் வணங்குகிறார்கள்; ஏன் என்றால் அந்தக் கதிர்தான் உலகத்தை வாழ வைக்கிறது; அந்தக் கதிரவனைக் கடவுள் என்பதும், நிலவைக் கடவுள் என்பதும், நிலத்தைக் கடவுள் என்பதும் அவரவர்களுடைய மனப் போக்கு, மன வளம், இயற்கைச் சூழ்நிலை இதற்கேற்ப அமைகிறது. நான் இந்த ஆராய்ச்சியில் அதிகமாக இறங்க விரும்பவில்லை.

ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்கிற அந்தக் கருத்தை நாங்கள் ஏற்றுக் கொண்டவர்கள் என்பதை அடிகளார் இங்கே சொன்னார். நாம் கடவுளை ஏற்றுக் கொள்கிறோமா இல்லையா என்பதல்ல வாதம்; கடவுள் நம்மை ஏற்றுக் கொள்கிறாரா இல்லையா என்பதுதான் வாதம். நெருங்கிப் பழகி ஒருவரோடு ஒருவர் உரையாடாத காரணத்தால், வேறுபாடுகள், முரண்பாடுகள் நம்மிடையே காணப்படுகின்றன. பத்து, பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் மாயவரம் பயணியர் விடுதியில், நாங்கள் இப்படிப்பட்ட பொறுப்புக்களுக்கு வராத காலத்தில் —அடிகளார் அவர்கள் தமிழகத்தில் ஆற்றல் மிகுந்த பேச்சாளர், அறிவார்ந்த கருத்துக்களை நாட்டுக்குத் தருகிறவர் என்ற வகையில் ஒளிவிட்டுக் கொண்டிருந்த காலத்தில் நானும் அவரும் சந்தித்து நீண்ட நேரம் பேசினோம். அப்போது என்ன கருத்துக்களை நாங்கள் பரிமாறிக் கொண்டோம் என்பது எனக்கும் அவருக்கும்தான் தெரியும்.

நெருங்கிப் பழகுகின்ற நேரத்திலே நாம் ஒரு மொத்தச் சமுதாயத்தை அழைத்துச் செல்வதற்கு நாம் எந்த வகையிலே அவர்களைப் பயிற்றுவிக்க வேண்டும் என்ற நல்ல நடைமுறைகளை எல்லாம் வகுக்க முடியும். அண்மையில் கூட தெய்வீகப் பேரவை மாநாட்டை நாகர் கோவிலில் அடிகளார் போன்றவர்கள் கூட்டினார்கள். அவர்களும் சரி, வாரியார் போன்றவர்களும் சரி, அவர்கள் எல்லாம் கலந்து பேசி, சமயங்களை இணைத்து, ஆலயங்கள், வழிபாட்டு முறைகள், வணங்குகின்ற முறைகள் எப்படி எல்லாம் இருந்திட வேண்டும் என்பதை ஒரு நிலைப்படுத்திட ஒரு நல்ல முடிவை அவர்கள் எல்லாம் சேர்ந்து எடுத்திட வேண்டும் என்ற ஒரு கருத்தும் இருக்கிறது.

நாங்கள் எல்லாம் கூட அந்தக் குழுவில் இருக்கத் தேவையில்லை; இருந்தால் எங்களுடைய கருத்து மிகுந்து விட்டதாகச் சொல்லப்படும். ஆகவே வாரியார், அடிகளார் போன்றவர்கள் முயற்சி எடுத்து, ஒரு நிலைத்த — ஒரு முனைப்பட்ட கருத்தைத் தெரிவிக்க வேண்டும். இன்றைக்குக் கிறித்தவ சமுதாயம் வளர்ந்திருக்கிறதென்றால் என்ன காரணம் என்பதைச் சிந்தித்து, இஸ்லாமிய சமுதாயத்திற்கு அகில உலகத்திலும் இன்றைக்கு புகழ் இருக்கிறது. ஒரு நிலையில் இருக்கிறார்கள்; ஒற்றுமையாக இருக்கிறார்கள் என்றால் அதற்கு என்ன காரணம் என்பதைச் சிந்தித்து, நான் இந்து மதம் என்று கூடச் சொல்ல மாட்டேன், ஏனென்றால் இந்து என்ற சொல் ஆராய்ச்சிக்கு உரியது. ஆகவே இந்து மதம் என்று உண்டா இல்லையா என்பது வாதத்திற்கு உரியது. சைவ சமயம், வைணவ சமயம் என்றெல்லாம் சொல்லப்படுகிற இந்தச் சமயங்களுக்கிடையே ஓர் ஒற்றுமை உணர்வை

ஏற்படுத்த அடிகளார், வாரியார் போன்றவர்கள், தமிழகத்தில் இருக்கிற பல்வேறு மடாலயங்களைச் சேர்ந்தவர்கள் எல்லாம் கூடி யோசித்து ஒரு நல்ல முடிவை அணுக வேண்டும்.

இன்றைக்கு ஆரம்பிக்கப்படுகிற இந்தத் திட்டத்தின்படி முதற் கட்டமாக இப்போது மூவாயிரம் பேர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள் என்றாலும் மொத்தமாக வந்திருக்கிற விண்ணப்பங்கள் சுமார் ஏழாயிரத்தைத் தாண்டுகிறது. 3,000 பேர் அதிலே இன்றைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, இப்போது தொடங்குகிற 52 இல்லங்களோடு இல்லாமல் விரைவில் நூற்றுக்கணக்கான இல்லங்களை அமைக்க வேண்டிய அவசியமும் ஏற்படுகிறது.

அப்படி அவசியம் ஏற்படுகிற நேரத்தில் நம்முடைய தமிழகத்தின் பொருளாதாரச் சூழ்நிலைகள் சீர்பட, திட்டங்கள் நிறைவேற, அனாதை இல்லங்கள்தான் நிறைய இருக்கின்றனவே, ஆகவே குழந்தை பெறுவதால் ஆபத்து இல்லை என்று கருதாமல் எதிலும் அளவோடு பெறுகின்ற காரியத்தை நம்முடைய சமுதாயம் பின்பற்ற வேண்டும். அனாதைகளை ரட்சிக்கக் கருணை இல்லங்கள் உருவாகின்றன. ஒவ்வொரு ஆலயத்திலும் இனிமேல் அனாதைகள் வளர்க்கப்படுவார்கள் என்கிற தைரியத்தில் குடும்பங்கள் பெருகினால் பிறகு அரசாங்கமே அனாதையாகி அந்த அரசாங்கத்தைக் காப்பற்ற ஏதாவது கருணை இல்லத்தை யாராவது ஏற்படுத்த மாட்டார்களா என்ற சூழ்நிலை ஏற்பட்டுவிடும்.

இதை வேடிக்கைக்காகச் சொல்லவில்லை. குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் என்பது ஒரு நாட்டை வாழ வைக்கத் தக்க மகத்தான திட்டம். அந்தத் திட்டம் சரிவரச் செயல்படுத்தப்பட வேண்டும். அப்படிச் செயல்படுத்தப்படாத காரணத்தால் முழத் துண்டும் இல்லாமல், கிழிந்த சட்டையோடு, தெருவிலே உலவிக் கொண்டிருக்கிற நாய்களை விடக் கேவலமாக, மனிதர்கள் பெற்ற செல்வங்கள் இந்த மண் மீது நடமாடுகின்ற கோரமான காட்சியை நாம் கண்டு கொண்டிருக்கிறோம். அவர்களுடைய வாழ்வில் விளக்கேற்றி வைக்கத்தான் இந்த முயற்சியில் நாம் ஈடுபட்டிருக்கிறோம். அந்த விளக்கை யாரும் ஊதி அணைத்து விடாமல் இருக்க வேண்டும். இந்த விளக்கை ஏற்றி வைப்பது தவறு என்று யாராவது சொல்வார்களானால் இதுதான் உண்மையான விளக்கு, ஆண்டவனுக்குப் பிடித்தமான விளக்கு, இந்த விளக்கைத்தான் கடவுள் விரும்புவார் என்று வாதிட வல்லவர்களான வாரியார் அவர்களும், அடிகளார் அவர்களும் இன்று நல்ல காரியத்தை ஆரம்பிக்கத் துணை புரிந்ததற்காக நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த இல்லங்கள் பொது மக்களுடைய ஒத்துழைப்போடு மேலும் மேலும் நல்ல முறையில் நடைபெற எல்லா வகையிலும் நீங்கள் துணை புரிய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**[மயிலாப்பூர் கபாலீசுவரர் ஆலயத்தில் 4-6-75 அன்று கருணை இல்லத் திறப்பு விழாவில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை. —ஆசிரியர்]**



மாணவர் அணி சார்பில் சென்னை பச்சையப்பன் கல்லூரி, சென்னை லயோலா கல்லூரி மாணவர்கள் சென்னை மயிலாப்பூர் கபாலீஸ்வரர் திருகோயிலின் குளத்தில் தூர் எடுக்கும் காட்சி.

திருமயிலைக் கபாலீசுவரர் திருக் கோயிலில் ''கருணை இல்லம்'' திறப்பு விழாவில், (2-6-75) தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டக் கலைஞர், அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன், தவத்திரு. குன்றக்குடி அடிகளார், அருண்மொழியரசு திருமுருக கிருபானந்த வாரியார் முதலிய பெருமக்கள் கலந்துகொண்டு சிறப்பித்தல்



திருமயிலைக் கபாலீசுவரர் திருக் கோயிலின் ''கருணை இல்லம்'' திறப்பு விழாவில், தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களுக்கு, அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் அவர்கள், பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தல் (2-6-75)



திருமயிலைக் கபாலீசுவரர் திருக் கோயிற் ''கருணை இல்லம்'' திறப்பு விழாவில், அருண்மொழியரசரும், மாண்புமிகு அறநிலைய அமைச்சரும்



# திருமுருகாற்றுப்படையின் சிறப்பு!

ந. ரா. முருகவேள் எம்.ஏ., எம்.ஓ.எல்.,

**முன்னுரை :**

திருமுருகாற்றுப்படை, தமிழ்த் தெய்வமாகிய முருகப் பெருமானின் துதி நூல்கள் பலவற்றுள், மிகவும் முதன்மையும், தொன்மையும் வாய்ந்தது. முருகன் அடியார்கள் அனைவருமே இதனைத் தொன்றுதொட்டுப் போற்றிப் பாராயணம் செய்து வருகின்றனர்.

**கச்சியப்பர் :**

இற்றைக்குச் சற்றேறழத்தாழ ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டு வாழ்ந்திருந்தவரும், முருகனின் வரலாறு கூறும் கந்தபுராணம் என்னும் செந்தமிழ்ப் பெரு நூலைப் பாடியருளியவரும் ஆகிய கச்சியப்ப சிவாசாரியர், திருமுருகாற்றுப் படையினைப் பெரிதும் மதித்துப் போற்றி நாடோறும் பாராயணம் செய்து வந்தவர். திருமுருகாற்றுப்படையினை அருளிய ஆசிரியர் நக்கீரனார்பால் கச்சியப்ப சிவாசாரியர் பெருமதிப்பும், பெரும்பக்தியும் கொண்டிருந்தார். கந்தபுராணத்தின் தொடக்கத்தில் முருகனைப் பற்றித் துதிக்குங்கால், முருகனின் ஆறு படை வீடுகளின் பெயர்களைப் பெரிதும் போற்றி, அப்பெயர்கள் எதுகைத் தொடையில் அழகுற அமையும்படி, சிறந்த துதிச் செய்யுட்களை அவர் அருளிச் செய்திருக்கின்றார். திருமுருகாற்றுப்படையினைப் பின்பற்றியே, கச்சியப்ப சிவாசாரியர் தமது கந்தபுராணத்தில், முருகனின் ஆறுபடை வீட்டுத் தலங்களைப் பற்றிய துதிப் பாடல்களை அமைத்தருளினார் என்பது தெளிவு.

மேலும், கந்தபுராண நூலின் முடிவில் தமது பணிவுடைமை தோன்றக் கச்சியப்ப சிவாசாரியர் அருளிச் செய்திருக்கும் பின்வரும் கருத்தமைந்த பாடலும், இங்கு நாம் அறிந்து இன்புறுதற்குரியது. ''சிவபெருமான், பிரமன் திருமால் உமை ஆகியோர் செய்கின்ற பூசைகளை ஏற்றுக் கொள்ளுவது போலவே, அவர்களை நோக்க மிகவும் இழிந்தவர்களாகிய இவ்வுலக மக்களின், எளிய வழிபாட்டையும் வெறுக்காமல் விரும்பி ஏற்றுக் கொண்டு அருள் புரிகின்றார். அதுபோன்று, பொய்யற்ற ஆசிரியர் நக்கீரனார் போன்ற மாபெரும் புலவர்களின் துதிப் பாடல்களையெல்லாம் ஏற்றுக் கொண்டு அருளிய முருகன், மிகவும் எளியவனாகிய என்னுடைய புலமையற்ற சிறு சொல்லாகிய இக் கந்தபுராண நூலையும், வெறுக்காமல் விரும்பி ஏற்றுக்கொண்டு அருள் புரிவான்'' என்னும் கருத்தமைய,

''பொய்யற்ற கீரன் முதலாம் புலவோர் புகழ்ந்த
ஐயற்கு எனது சிறுசொல்லும் ஒப்பாகும்; இப்பார்
செய்யுற்றவன் மால்உமை பூசைகொள் தேவதேவன்
வையத்தவர் செய் வழிபாடு மகிழும் அன்றே''

என்று அழகுறப் பாடித் துதிக்கின்றார். இப்பாடலால், பெருங் கவிஞராகிய கச்சியப்ப சிவாசாரியர்க்குத் திருமுருகாற்றுப்படை பாடிய நக்கீரரிடம் எத்துணைப் பெருமதிப்பும் பக்தியும் இருந்தன என்று நாம் எண்ணி உணரலாம்.

**அருணகிரிநாதர் :**

இங்ஙனமே முருகன் அடியார்களுள் பெரு முதன்மை வாய்ந்தவரும், இற்றைக்குச் சற்றேறத்தாழ 600 ஆண்டுகட்கு முன்னர் விளங்கியிருந்தவரும் ஆகிய அருணகிரிநாதரும், திருமுருகாற்றுப்படையினை வியந்து புகழ்ந்து தமது திருப்புகழில் பல இடங்களில் குறிப்பிட்டு அருளியுள்ளார்.

''வளவாய்மை சொற்ப்ரபந்தம்
உள கீரனுக்கு உகந்து
மலர்வாய் இலக்கணங்கள் இயல்போதி
அடிமோனை சொற்குஇணங்க
உலகாம் உவப்ப என்றுஉன்
அருளால் அளித்துகந்த பெரியோனே'' (1)

''நக்கீரர் ஓதிய வளமைசேர்
தமிழுக் காகநீடிய கரவோனே.'' (2)

''கீதஇசை கூட்டி வேதமொழி சூட்டு
கீரர்இயல் கேட்ட க்ருபைவேளே.'' (3)

—திருப்புகழ்

நக்கீரர் சொல் தித்தித்ததே (4)

—கந்தர் அந்தாதி, 54.

'வாக்கிற்கு அருணகிரி' என்னும் மாபெரும் புகழ் பெற்ற அருணகிரிநாத சுவாமிகள் அவர்களே, தமது ஒப்புயர்வற்ற சந்த நலம் செறிந்த செந்தமிழ்த் திருப்புகழ்ப் பாடல்களில் திருமுருகாற்றுப்படையினை, 'வளவாய்மை சொற்பிரபந்தம்'' என்றும், 'வளமைசேர் தமிழ்' என்றும்

'வேதமொழி' என்றும் மிகவுயர்த்துப் புகழ்ந்து, ''நக்கீரர் சொல் தித்தித்ததே'' என்றும் அருளிச் செய்வாராயின், இந்நூலின் பெருமையை அளவிட்டுக் கூறுதல் நம்மால் இயலுமோ ?

**சிவப்பிரகாசர் :**

இவ்வாறே வாழையடி வாழையாகத் தொன்று தொட்டு வந்த பெருஞ் சான்றோர்கள் ஆகிய முருகன் அடியார்கள் அனைவருமே, திருமுருகாற்றுப்படையினைத் தலைசிறந்த தெய்வத்திரு நூலாகக் கொண்டு, ஓதி ஓதி உவந்தனர் என்பதில் ஐயமில்லை. முருகனைப் பற்றிய நூல்கள் எல்லாவற்றுள்ளும் பழமையும், பெருமையும் முதன்மையும் வாய்ந்து விளங்குவது திருமுருகாற்றுப்படையே. இது பற்றித்தான் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் ''பாவுள் முன்னுற வந்து நிற்கும் முருகாற்றுப் படை'' என இதனைச் சிறந்தெடுத்துப் பாராட்டியுள்ளார். அதற்கேற்ப, இந்நூல் ''பத்துப் பாட்டு'' என்னும் சங்கத் தொகை நூலில் முதலாவதாக அமைந்துள்ளமையும், இங்கு நாம் நினைவு கூரத்தக்கது.

மேலும் அவர், திருமுருகாற்றுப்படையின் சிறப்பைப் பின் வருமாறு குறிப்பிடுகின்றார் : ''முருகன் தணியா அதிகமோக தயாபரனாய், பணியா? என வள்ளி பதம் பணிந்து'', அவ்வள்ளியம்மையின் இனிய மொழிகளைச் செவிமடுப்பதில் அளவிலா ஆர்வம் கொண்டு திகழ்கின்றான். எனினும், யாரேனும் அன்பர் ஒருவர்எங்கேனும் இருந்து திருமுருகாற்றுப் படையினை ஓத முற்படுவாராயின், முருகப்பெருமான் வள்ளியம்மையின் இனிய சொற்களையும் புறக்கணித்துவிட்டு, தன்னுடைய பன்னிரண்டு செவிகளையுமே ஒரு சேரக் குவித்து, அவ்வன்பரின் திருமுருகாற்றுப் படைப் பாராயணத்தினைக் கேட்டு மகிழ்ந்து அருள் புரிகின்றான். முருகனின் பன்னிரு செவிகளும் பருகும் அமுதமாகத் திருமுருகாற்றுப் படை திகழ்கின்றது. அதனை ஓதி வழிபடும் அடியவர்கள் விரும்பி நினைப்பவற்றை யெல்லாம் அவர்கள் நினைத்தபடியே, முருகன் விரும்பி நிறைவேற்றி யருளுகின்றான்'' எனச் சிவப்பிரகாசர் பாடுகின்றார்.

இன்னன நினைந்து கீரன்,
இலங்கிலை நெடுவேற் செம்மல்
பன்னிரு செவியும் ஆரப்
பருகு அமுதாகி, ஓதின்
உன்னிய உன்னி யாங்கு, இங்கு
உதவுவ தாகிப், பாவுள்
முன்னுற வந்து நிற்கும்
முருகாற்றுப் படை, மொழிந்தான். (1)

பொன்அவிர் சுணங்கு பூத்த
புணர்முலைக் கருங்கண் வள்ளி
கன்னலும் அமுதும் தேனும்
கைக்கும்இன் தீஞ்சொல் மாற்றித்
தன்நிகர் புலவன் கூறும்
தமிழ், செவி தாழ்த்துக் கேளா,
அந்நிலை மனம் களித்தான்;
அறுமுகம் படைத்த கோமான்.

—சீகாளத்திப் புராணம்.

**ஆற்றுப்படை :**

தமிழிலுள்ள பிரபந்தங்கள் என்னும் சிற்றிலக்கிய வகைகள், தொண்ணூற்றாறு வகைப் படும் என்பர். அவற்றுள் ஆற்றுப்படை என்பதும் ஒன்று. ஆற்றுப்படை என்னும் சொல், வழிப்படுத்துதல், வழி கூறி அனுப்பி வைத்தல் எனப் பொருள்படும். (ஆறு + படு + ஐ). சிறு பான்மை வருவித்தல் எனவும் அதற்குப் பொருள் உண்டு. 'முருகு ஆற்றுப்படுத்த உரு கெழு வியன் நகர்' என்னும் வரி, முருகனை வருமாறு வழிப்படுத்தின அச்சம் பொருந்திய அகன்ற நகரம் (கோயில்), எனப் பொருள் படுதல் காணலாம்.

ஆற்றுப்படை என்னும் நூல்வகையானது, புலவர் ஆற்றுப்படை, பாணர் ஆற்றுப்படை, பொருநர் ஆற்றுப்படை, விறலி ஆற்றுப்படை என நான்கு வகைப்படும். ஓர் அரசன் அல்லது வள்ளலிடம் சென்று பரிசு பெற்றுத் திரும்பி வரும் புலவன் ஒருவன், வழியில் தன்னை ஒத்த மற்றொரு புலவனைச் சந்தித்து, 'யான் இன்ன வள்ளலிடம் சென்றேன்; இன்ன இடத்தில் அவனைக் கண்டேன்; அவனை இவ்விவ்வாறு பாடினேன்; அவனுடைய இயல்புகள் இத்தகையவை; இத்துணைப் பொருள்களை அவன் எனக்குப் பரிசிலாக வழங்கினான்; நீயும் அவனிடத்துச் சென்று பாடினால், பரிசில் வழங்கப் பெறுவாய்' என்று, அவ்வள்ளலைச் சென்று காண்பதற்கு உரிய வழி முதலிய விவரங்களை யெல்லாம் விளக்கமாகக் கூறி அனுப்புவதாகப் பாடப் பெறுவது, புலவர் ஆற்றுப்படை எனப்படும். இவ்வாறே பாணர், பொருநர், விறலியர் என்பவரும், தமக்குள் ஒருவர் மற்றொருவரை ஆற்றுப் படுத்திக் கொள்ளும் முறையில் பாடப் பெறும் நூல்கள், அவரவர்களின் பெயர்களால் வழங்கும்.

''கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்
சென்றுபயன் எதிரச் சொன்ன பக்கம்...''

என்பது, ஆற்றுப்படை நூல்களுக்குத் தொல் காப்பியப் புறத்திணை இயல் வகுக்கும் இலக்கணம் ஆகும்.

**முருகாற்றுப்படை :**

ஆற்றுப்படை நூல்கள் பலவற்றுள்ளும் தலைசிறந்தது திருமுருகாற்றுப்படை எனலாம். ஆதல் பற்றியே, பத்துப்பாட்டு என்னும் சங்கத் தொகை நூலில், பிற எல்லாப் பாடல்களுக்கும் முன்னதாக, முதற்கண் திருமுருகாற்றுப்படை அமைக்கப்பட்டுள்ளது. இது புலவர் ஆற்றுப் படை என்றே பெயர் வழங்குதற்குரியது. ஆயினும், பொருளின் முதன்மையும், சிறப்பும் பற்றி முருகாற்றுப்படை யெனவே தொன்றுதொட்டு

வழங்கிவருகின்றது. நம்மை அனைய அரசனோ அல்லது வள்ளலோ ஆகிய மனிதரிடத்து ஆற்றுப்படுத்தும் முறையில் பாடாமல், எல்லாம் வல்ல இறைவனிடத்தில் ஆற்றுப்படுத்தும் நிலையில், இதனை முதன் முதலாகப் பாடியருளிய ஆசிரியர் நக்கீரர் பெருமானின் கவிதைத் திறம், ஒரு சிறந்த புரட்சிப் புதுமைச் செயல் எனப் போற்றிப் புகழ்தற் குரியதாகும். சங்கத்தமிழ்த் தலைமைப் புலவராகிய நக்கீரரின் தமிழ்ப் புலமைக்கும், தலைசிறந்த சமய உணர்வுக்கும், இந் நூல் ஒப்புயர்வற்ற சான்றாக இலங்குகின்றது.

முருகன் அருளைப் பெற்ற அருளாளன் ஒருவன், அதனைப் பெறாத அடியவன் ஒருவனுக்கு முருகனின் சிறப்பும், அவன் எழுந்தருளியிருக்கும் தலங்களும், அவற்றின் பெருமைகளும், அத்தலங்களில் ஒன்றற்குச் சென்று முருகனை வழிபடும் முறையும் கூறி, அவனை முருகனிடத்து வழிப்படுத்தும் முறையில், இந் நூல் பாடப்பெற்றுள்ளது.

**பழம்பாடல் :**

ஆசிரியர் நக்கீரர் அருளிய திருமுருகாற்றுப் படையினை நாடோறும் ஓதி முருகனை வழிபடுதலால், நாம் எல்லா நலங்களும் பெறலாம்; நம்முடைய கவலைகள் எல்லாம் நீங்கும்; முருகன் நமக்கு இரங்கி நம்முன் வந்து தோன்றிக் காட்சி தந்து அருள் புரிவான். இது பெரியோர்கள் பலரும் தம்முடைய வாழ்வில் கண்ட அனுபவ உண்மை. இதனை ஒரு பழம் பாடல் இனிது தெளிவுறக் குறிப்பிடுகின்றது.

நக்கீரர் தாம்உரைத்த நன்முருகாற் றுப்படையைத்
தற்கோல நாடோறும் சாற்றினால்,—முற்கோல
மாமுருகன் வந்த மனக்கவலை தீர்த்தருளித்
தான்நினைத்த எல்லாம் தரும்.

**முடிவுரை :**

எனவே இத்தகைய அரும் பெரும் சிறப்பு வாய்ந்த திருமுருகாற்றுப்படையினை, நாம் அனைவரும் நாடோறும் ஓதி, முருகனை வழிபட்டு, அவன் அருளைப் பெற்று உய்ய முயலுவோமாக.


உ
சிவமயம்

## அருள்மிகு பிரமபுரீசுவரர் திருக்கோயில், திருஅம்பர்.

அம்பர் என்னும் இத்தலம் சோழவள நாட்டில் நன்னிலம் கூற்றத்தில் பூந்தோட்டம் எனும் புகை வண்டி நிலையத்தினின்று கிழக்கே 3 கல் தொலைவில் அரிசிலாற்றின் வடகரையில் உள்ளது. பேருந்து வசதி உண்டு.

பிரமபுரேசர் வம்புவனப் பூங்குழலாளுடன் இயைந்து அருள் பொழியும் திருத்தலம்.

திருஞான சம்பந்தப் பெருமானின் பாமாலை கொண்டது. சோமாசிமாற நாயனார் அவதரித்த திருத்தலம். கோச்செங்கணான் இவ்வாலயத்தை மாடக் கோயிலாக எடுப்பித்து உய்ந்தான்.

பிரமன் பூசித்துச் சாப விமோசனம் பெற்றதாகப் புராணச் செய்தி.

திரிசிரபுரம் மகாவித்துவான் திரு. சி. மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் அம்பர்ப் புராணம் இயற்றியுள்ளார்.

இத்திருக்கோயிலில் கல்வெட்டுக்கள் உள்ளன. இயற்கை எழில் சூழலிடையே இலங்கும் இத்தலத்தின் இறைவனையும் இறைவியையும் வணங்குவோர் மன அமைதியும் மேன்மையும் பெறுதல் திண்ணம். இது வரை தரிசியாதவர்கள் இத்திருக்கோயிலுக்கு வந்து பயன்பெற வேண்டப்படுகிறது.

**சுவாமி. வேங்கடாசலம்,**
செயல் அலுவலர்.

# தொடக்கத்தில் அடக்கம்!

கே.எஸ். ஜெகன்னாதன்

முதல் என்று சொன்னாலே அதற்குமுடிவும் இருக்கிறது.

முடிவில்லாத எதற்குமே முதல் இருப்பது இல்லை.

முதலும் முடிவும் இல்லாத எந்தப் பொருளையுமே இறைவன் படைப்பதில்லை.

மரம், செடி, கொடி, ஐந்தறிவு படைத்த ஜீவராசிகள் வீட்டிலே இருந்து விண்ணிலே பறக்கும் குருவி வரையும், ஆறறிவு படைத்த மனிதன் உட்பட அனைத்துமே வகையில் மாறுபட்டிருப்பினும் முதலும் முடிவும் உண்டு.

விதையைப் போடுகிறோம். அது வளர்ந்து மரமாகிப் பூத்துக் காய்த்துக் கனியாகிறது. மரம் பழுதாகிறது.

இங்கே விதை முதலாகிறது. பழுத்து முடிவாகிறது.

மனிதன் பிறக்கிறான். அவன் பிறக்கும் போதும் அழுதுகொண்டே பிறக்கிறான். இறக்கும்போது அழவைத்துப் போகிறான்.

பிறப்பு மனிதனுக்குத் தொடக்கம், இறப்பு அவனது அடக்கம்.

ஆக தொடக்கமும் அடக்கமும் இல்லாத மனிதனே இல்லை.

மனிதன் மட்டுமல்ல உலகில் எந்தப் பொருளுமே இல்லை.

தொடக்கத்தையும் அடக்கத்தையும் புரிந்து கொள்ளாத மனிதன் வாழ்க்கையில் கோட்டைகளைக் கட்டுகிறான்.

சதா சர்வ காலமும் பூர்விகப் பெருமைகளைப் பேசி மகிழ்கிறான்.

சாதாரண மனிதனை உதாசீனப்படுத்துகிறான்.

சத்தியத்திற்குச் சாவு மணி அடித்துவிட்டு அவன் இட்டதே சட்டமெனக் கொட்டமடிக்கிறான்.

பிறர் உள்ளத்திலே ஏற்படும் வேதனைகளைக் கண்டு களிப்படைகிறான்.

இன்றைக்கு இருக்கிறோம். நாளை இறக்கிறோம், நாளை மறுநாள் மூன்றும் நாள். அடுத்த நாள் நம்மைப் பற்றி எண்ணுவாரில்லைஎன்பதை நினைத்துப் பார்க்கவே மறுக்கிறான்.

வாழ்க்கை வாழ்வதற்குத்தான். முடிவை எண்ணி வாழாமல் இருக்க முடியாது. முடிவு வருகிறதே என்று சஞ்சலப்படவும் கூடாது.

வருவது வரட்டும் என்று எண்ணி வாழ வேண்டும். நாம் வாழ்ந்த சிறிது காலத்தில் எவ்வளவு நன்மைகளைச் செய்ய முடியுமோ செய்ய வேண்டும்.

சக்திக்கேற்றபடி அவைகளைச் செயல் படுத்த வேண்டும்.

ஒரு இலட்சியத்திற்காகநாம் வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும்.

இலட்சங்களை எண்ணி வாழ்க்கைப் பாதையில் தடுமாறி நம்மை ஏமாற்றிக் கொள்ளக் கூடாது.

தவறான வாழ்க்கை வாழ்பவர்கள் என்றாலும் அவர்களைத் திருத்தி நல்வழிப்படுத்த முடியுமானால் அதற்காகத் தன்னையே அர்ப்பணித்துக் கொள்வது தவறாகாது.

தவறு செய்யாத மனிதன் உலகிலேயே எவனும் இல்லை.

செய்த தவறை உணர்ந்து திருந்தி மீண்டும் தவறு நேராவண்ணம் மனச்சாட்சிக்குக் கட்டுப்பட்டு வாழ வருபவர்களை வெறுத்து ஒதுக்குவது என்பது பேதைமை.

இங்கே தவறு என்பது முதலாகிறது. வருந்தித் திருந்துவது முடிவாகிறது.

வருந்தித் திருந்துபவன் மறுபிறப்பை எடுக்கிறான். வாழ்க்கையில் அவன் நியாயங்களின் பக்கம் இருக்கத் துடிக்கிறான்.

அவர்களது இதய பூர்வமான துடிப்பை உணர்ந்து கொண்டு இறைவன் அவர்கள் பக்கம் இருக்க வருகிறான்.

திருந்தி வாழ முற்படுபவர்களைப் பார்த்து பழையவர்கள் பரிகசிக்கிறார்கள்.

ஏளனம் செய்கிறார்கள்.

எள்ளி நகையாடுகிறார்கள்.

பைத்தியக்காரப் பட்டத்தைச் சுலபமாகச் சூட்டி விடுகிறார்கள்.

அவர்களெல்லாம் இறைவனால் வழங்கப்பட்ட மனச்சாட்சிக்கு மதிப்பளிக்கத் தயாராக இல்லை.

ஒரு சராசரி மனிதனைப் போல நடந்து கொள்கிறார்கள்.

பிறரைக் கண்டு ஏளனம் செய்து எள்ளி நகையாடுவோர், தமக்கும் இந்நிலை வந்தால்? என்பதை நினைத்துப் பார்க்கத் தவறிவிடுகிறார்கள்.

இவர்களது முடிவு அடக்கத்தில் தானே தவிரத் திருந்தி வாழ்வதில் இல்லை என்று இறைவன் தீர்ப்பு வழங்கி விடுகிறான்.

தவறு செய்பவர்களைத் திருத்தி நல்வழிப் படுத்த முயலும்போது, அதைக் கண்டு பொறுமை கொள்வோரும் உண்டு.

திருந்தி விட்டால் தனக்கு உபயோகமில்லாமல் போவானே என்பதாலோ? திருத்துபவனும் உபயோகமில்லாமல் போவானே என்பதாலோ? இருசாரார் மனத்தையும் புண்படுத்துவதே வேலையாகக் கொள்கிறார்கள்.

பிறர் மனம் புண்படுவதிலே தான் அவர்கள் மகிழ்ச்சி காண்கிறார்கள் என்றால், அவர்களது மகிழ்ச்சிக்காக மனம் புண்படுவதே இறைவனுக்குச் செய்யும் சிறந்த தொண்டாக ஏற்க வேண்டும்.

அவர்கள் மகிழ்ச்சியிலே திளைக்கட்டும்.

அது நிரந்தரமானது அல்ல.

இறைவன் சந்நிதானத்திலே உண்மைகள் என்றும் தோற்பதில்லை.

இந்த நம்பிக்கையில் திருந்தி வாழ வேண்டும்—திருத்தி வாழ வேண்டும்.

ஆடி அடங்குகின்ற வாழ்க்கைதானே இது!

அதற்காக ஒத்திகை பார்க்க வேண்டியதில்லை என்பது உண்மைதான்.

தொடக்கத்தை வைத்த இறைவன் அடக்கத்தையும் வைத்திருக்கிறான்.

இறைவனது சிருஷ்டியில் எல்லாம் மனிதர்களே.

பாகுபாட்டை, பண்பாட்டை நாம் வைத்தோம்.

பகுத்துப் பார்க்கும் உணர்வுகளை இழந்து விட்டோம்.

உணர்வுகள் திரும்பினால் உலகினில் அனைவரும் ஒன்றே!

உணர்வுகள் திரும்ப இறைவனை வழிபடுவோம்.

புண்படுத்தி மகிழ்வோர் வாழட்டும்.

ஏளனம் பேசுவோர் வாழட்டும்.

எள்ளி நகையாடுவோர் வாழட்டும்.

இவர்கள் அனைவரும் இறைவனால் படைக்கப்பட்டவர்களே. இவர்களுள்ளும் இறைவன் இருக்கிறான்.

''புலியினிடத்தும் ஈசுவரன் இருப்பது உண்மையே. ஆனால் அக்காரணத்தைக் கொண்டு நாம் அதன் முன் பக்கம் போய் நிற்கக் கூடாது. கெட்டவர்களிடத்தும் ஈசுவரன் இருப்பது உண்மை ஆயினும் நாம் அவர்களோடு உடன் உறைவது சரியன்று'' என்றார் இராமகிருஷ்ணர்.

இதுபோல வாழக் கற்றுக் கொள்வோம்.

தொடக்கத்தில் அடக்கம் என்பதைப் புரிந்து கொண்டு வாழ்வோம்.

இறைவனிடத்தே நம்மை ஒப்படைப்போம்.



# திருமுருகாற்றுப் படை

## கருத்துச் சுருக்கம்

### (1) திருப்பரங்குன்றம் :

உலகத்திலுள்ள உயிர்த் தொகுதிகள் அனைத்தும் மகிழும்படி எழுந்து, மேருமலையை வலமாகச் சுற்றி வருபவன் சூரியன். அவனைப் பல சமயத்தவர்களும் புகழ்ந்து போற்றுவர். அத்தகைய சூரியன், கடலின்கண் உதயம் செய்தாற்போல, மயிலின் மீது அமர்ந்து விளங்குபவன் முருகன்.

1. நீல நிறம் வாய்ந்தது கடல்; அது போல முருகன் ஏறி வரும் மயில் நீல நிறமுடையதாகத் திகழ்கின்றது. 2. சூரியன் சிவந்த நிறம் உடையவனாக இருக்கின்றான்; அது போல, முருகனும் செந்நிறம் உடையவனாகத் திகழ்கின்றான். 3. சூரியன் உலகின் புற இருளை நீக்குகின்றான்; அது போல, முருகன் தன்னை வழிபடும் அடியவர்களின் அக இருளைப் போக்கியருள்கின்றான். 4. சூரியனுடைய கதிர்கள் ஒளியைத் தந்து உயிர்களுக்கு நலம் செய்கின்றன. அதுபோல முருகனின் திருவருளும் உயிர்களுக்கு நலம் பல விளைத்துப் பாதுகாத்து அருள்கின்றது. 5. சூரியனைப் பல சமயத்தவர்களும் போற்றுதல் போல, முருகனையும் பல் சமயத்தவரும் விரும்பிப் போற்றுவர். இவ்வாற்றால், முருகன் உலகுக்கு ஒரு பெரும் ஞான சூரியனாக, எங்கும் என்றும் நீக்கமின்றிப் பரவிச் சுடர் விடும் ஒப்பற்ற ஒளி வடிவமாய்த் திகழ்கின்றான்.*

அவனுடைய திருவடிகள் அழகும் வலிமையும் உடையவை; தம்மை வந்து புகலடைபவர்களின் தீவினையையும் அறியாமையையும் போக்கிக் காத்தருள்பவை. அவன் திருக்கைகள் இடியைப் போலப் பகைவர்களை அழிக்க வல்லன. அவன் குற்றமற்ற கற்பினையும், ஒளி பொருந்திய நெற்றியினையும் உடைய தெய்வயானையின் கணவன். வெண் கடம்ப மரத்தின் பூவால், தேர்ச் சக்கரம் போலத் தொடுக்கப்பெற்ற குளிர்ந்த உருண்ட மலர் மாலைகள், அவன் மார்பில் அசைந்து கொண்டிருக்கும். பெரிய மூங்கில்கள் ஓங்கி வளரும் வானளாவிய மலையில், ஒரு சோலை உள்ளது. அங்கே தம் தெய்வத் தன்மையால் அச்சத்தை விளைவிக்கின்ற வானுலகப் பெண்கள் பலரும் கூடுவர். அழகு விளங்கும் மலை இடமெல்லாம் எதிரொலி எழும்படியாகப் பாடி ஆடுவர். அவர்கள் கிண்கிணி சூழ்ந்து ஒளி பொருந்திய சிவந்த சிறிய பாதங்களையும், திரண்ட கால்களையும், வளைந்து ஒடுங்கிய இடையையும் உடையவர்கள். அவர்களின் தோள்கள் மூங்கிலைப் போன்றிருக்கும். அவர்களின் மெல்லிய பூந்துகில், இந்திரகோபப் பூச்சியின் நிறத்தைப் போல், இயல்பாகவே சிறந்து விளங்கும். அது செயற்கையாகச் சாயம் தோய்க்கப் பெறாமல், இயற்கையாகவே செந்நிறம் வாய்ந்தது. பல மணிகள் கோத்ததும், ஏழு வடங்கள் கொண்டதும் ஆகிய மேகலையை அவர்கள் அரையில் அணிந்திருப்பார்கள். அவர்களின் அழகு இயற்கையாகவே அமைந்ததாகும். எவருடைய கையினாலும் ஒப்பனையினால் செயற்கையாகச் செய்யப்பட்டதன்று அது. அவர்களால் அணியப் பெற்ற ஒளி மிகுந்த அணிகலன்கள் சாம்பூநதம் என்ற பொன்னால் இயன்றவை. அவர்களின் மேனி குற்றமற்றது. அதன் மினுமினுப்பும் ஒளியும்

---

* ஆசிரியர் நக்கீரனாரின் அறிவாராய்ச்சி மிக்க புலமை உள்ளத்திற்குக் காலைக் கதிரவனின் உதயக் காட்சி, கடவுட் காட்சியையும் உணர்வையும் உண்டாக்கிய செய்தியைத் திருமுருகாற்றுப்படை நமக்குத் தெரிவிக்கின்றது. இங்ஙனமே மேலைநாட்டில் வாழ்ந்திருந்த தத்துவ நூற் பேராசிரியர் ஆகிய ஜீன் ஜேக்ஸ் ரூசோ (1712—1778) என்னும் அறிஞர் ஒருவருக்கும், நீலக் கடலின் மேல் காலைச் செஞ்ஞாயிற்றின் உதயக்காட்சி, கடவுள் உணர்ச்சியை ஊட்டிய திறம்பற்றி, அவரே பின் வருமாறு கூறியிருத்தல் நாம் இங்கு உணர்ந்து மகிழ்தற்குரியது.

‘‘ஆ, பெருமாட்டி! சில சமயங்களில் எனது படிப்பறையில் தனிமையாக, யான் என் கைகளினால் கண்களைப் பொத்திக் கொண்டோ, அல்லது இரவின் இருளிலோ இருக்கும்போது, கடவுள் இல்லை என்று யான் கருதுவது உண்டு. ஆனால், அதோ பாருங்கள்! உலகைக் கவிந்து கொண்டிருக்கும் பனிப் படலங்களைச் சிதறச் செய்து கொண்டும், இயற்கையின் மினுமினுப்பான வியத்தகு காட்சிகளை வெளிப்படுத்திக் கொண்டும், உதய சூரியன் தோன்றுகின்றது. புறத்தே கவிந்துள்ள பனிப் படலங்களை மட்டுமே யல்லாமல், என் உள்ளத்தே சூழ்ந்துள்ள அறியாமையையும் ஐயமுமாகிய மேகங்களையும் கூட, அஃது அஃகி அகன்றொழியுமாறு செய்கின்றது. என்னுடைய பக்தி உணர்வையும், எனது கடவுளையும், அவரிடத்தில் என் நம்பிக்கையையும், யான் மீண்டும் கண்டுணர்கின்றேன். நான் அவரை வியக்கின்றேன்; அவரை வழிபடுகின்றேன்; அவர்தம் முன்னிலையில் யானே அவரது திருவடிகளில் நெடுக விழுந்து பணிந்து வணங்குகின்றேன்.’’

நக்கீரர் கண்ட நற்காட்சியும், ஜீன் ஜேக்ஸ் ரூசோ என்னும் தத்துவ அறிஞரின் உள்ளத்து உணர்ச்சியும், எத்துணைப் பொருத்தமுற ஒன்றி இயைந்து காணப்படுகின்றன!

“Ah, Madame!” Rousseau writes to an aristocratic lady, “Some times in the privacy of my study, with my hands pressed tight over my eyes or in the darkness of the night, I am of opinion that there is no God. But look yonder : the rising of the sun, as it scatters the mists that cover the earth, and lays bare the wondrous glittering scene of nature, disperses at the same moment all cloud from my soul. I find my faith again, and my God, and my belief in Him. I admire and adore Him, and I prostrate myself in His presence.”

—Bertrand Russel, History of Western Philosophy, p.66

நெடுந்தூரத்தைக் கடந்து செல்லும் தன்மை யுடையன.

இச் சூரர மகளிர்க்குத் துணை செய்யும் தோழிப் பெண்கள் சிலருளர். அவர்கள் கோதி வகிர்ந்து கடைகுழன்று பளபளப்பு மிக்க சூரர மகளிரின் கூந்தலில் வெட்சிப் பூக்களை விடு பூவாகத் தூவுகின்றனர்; அதற்குநடுவேகுவளைப் பூவின் இதழ்களைக் கிள்ளி இட்டு முடிக்கின்றனர்; சிதேவி என்னும் தெய்வ உத்தியையும், வலம்புரிச் சங்கு வடிவாகச் செய்த அணிகலனை யும் தலையில் வைத்தற்குரிய இடத்தே வைக்கின்றனர்; நெற்றியிலே மணங் கமழும் திலகம் திட்டுகின்றனர்; அதன்கண் வந்து தங்கும்படி சுறு மீனின் திறந்த வாயைப்போல அணிகலனை வைக்கின்றனர்; நன்றாக முடித்த கொண்டை யில் செண்பகப் பூவைச் செருகுகின்றனர் ; அதன்மேல் மருதமலர்க் கொத்துக்களை இடுகின்றனர்; அதற்கும் மேலே செந்நிற அரும்புகளைச் சேர்த்துக் கட்டிய மாலையை வளைவாகச் சூட்டு கின்றனர்; அசோகம் தளிர்களைத் திருத்திக் காதுகளில் தரிக்கின்றனர்; அத்தளிர்கள் மார்பிற் படிந்து அழகுற அசைந்து விளங்கும் ; அம்மார்பில் சந்தனக் குழம்பை நிறையப் பூசி, அதன் மீது வேங்கை மலரின் மகரந்தத்தை அப்புவர்; விளா மரத்தின் சிறிய தளிரைக் கிள்ளி, ஒருவர் மேல் ஒருவர் தெறித்து அழகுற விளையாடுவர்; முருகனின் கோழிக் கொடி ஓங்கி நிலை பெறுக என்று கூறி வாழ்த்துவர்.

இத்தகைய சூரர மகளிர் விளையாடும் சோலையிலுள்ள காந்தட் பூக்களாலான பெரிய குளிர்ந்த மாலைகளை முருகன் தன் திருமுடியின் கண் அணிந்து கொண்டிருப்பான். அக் காந்தட் பூக்கள், வண்டுகள் மொய்க்கப் பெருத சிறப்பு உடையவை.

முருகனுடைய வேல், ஒளி மிகுந்தது ; இது வலிவானது; கூர்மை மிக்கு நீண்டிருப்பது. முருகனின் இவ்வேற்படை, உலகிற் பழமையாக உள்ள கடலும் நிலைகுலையும்படி, அதனுள்ளே புகுந்து, அங்கே ஒளிந்து கொண்டிருந்த சூர பதுமனை இருகூறாகப் பிளந்தது ; அதனால் குதிரைத் தலையும் மனிதவுடலும் ஆகியஇரண்டு பெரிய வடிவங்கள் ஒன்றாக அமைந்த அச்சூர பதுமனுடைய உடல் அறுபட்டு, வேறு வேறு துண்டங்களாயின. ஆயின பின்னரும், கவிழ்ந்து தலைகீழாகத் தொங்கும் பூங்கொத்துக்களை யுடைய மாமரமாகச் சூரபதுமன் மீண்டும் வடி வெடுத்து வந்தான். அதுபோது முருகன், அவுணர்களின் மிக்க வலிமை அழியும்படியும், அசுரர்களுக்கு அச்சம் தோன்றும்படியும் போர் இட்டு, மாமரமாக நின்ற சூரபதுமனைத் தடிந்தான்.

முருகனின் வேல், மேலும்போரில்முனைந்து சென்று, சூரபதுமனது துணைவர்களாகிய அவுணர்களையெல்லாம் தோல்வியுறச் செய்து அழித்தது. அங்ஙனம் போர் நிகழ்ந்த களத்தில் பேய்கள் பல கூடிப் பிணங்களைத் தின்று களித்துத் துணங்கைக் கூத்து ஆடுகின்றன ; அப்பெண் பேய்கள் காய்ந்த தலைமயிரை உடையன; வரிசையற்றுப் பிறழ்ந்த பற்களை உடையன; அவைகளின் வாய் பெரியதாய்த் திறந்து இருக்கும்; அவற்றின் விழிகள் கழன்று கொண்டு ஊன் வடிந்து, கொடும் பார்வை வாய்ந்திருக்கும்; அவற்றின் காதுகள் நீண்டு மார்பு வரையில் தொங்கியிருக்கும்; அக் காதுகளில்பிதுங்கிய கண்களை உடைய ஆந்தையும், நச்சுத் தன்மை மிக்க பாம்புகளும் தொங்கிக் கொண்டு கிடக்கும்; இரத்தம் படிந்து, வளைந்து கூர்மையான நகங்களை உடைய தம் விரல்களினால், அப்பேய்கள் இறந்துபட்ட அவுணர்களின் பிணத் தலைகளில் உள்ள கண்களைத் தோண்டிப் புசிக்கும் ; பின்னர் அத் தலைகளைத் தம் கைகளில் ஏந்தி அவற்றின் நிணத்தை வழித்துத் தின்னும். அங்ஙனம் தின்ற மகிழ்வால், அச்சமும் அருவருப்பும் தோன்றும்படி, தம் முடைய தோள்களை அசைத்துக் கொண்டு, வெறி மிகுத்துத் துணங்கை என்னும் இழிந்த கூத்தை ஆடி, அப்பேய்கள் இன்புறும்.

இங்ஙனம் பிணம் தின்னும் பேய்கள் மகிழ்ந்து துணங்கைக் கூத்து ஆடும்படி, முருகன் சூரபதுமனைப் போர்க் களத்தில் வென்றான்.

மதுரைக்குக் கூடல் என்று ஒரு பெயர் உண்டு. அக்கூடல் மாநகரம் மதில் சூழப் பெற்றது. அம்மதில்களைச் சேண் உயர்ந்து ஓங்கும் நெடுங் கொடிகள் அணி செய்கின்றன. அக்கொடிகள், போரிற் பெற்ற வெற்றிக்கு அறிகுறியாகவும், போரைப் பெற விரும்புதற்கு அறிகுறியாகவும் எடுக்கப் பெற்றவை. அந்நகரின் மதில் வாயில்களில், போருக்கு வரும் பகைவர்களை ஏளனம் செய்யும் • முறையில், அவர்களைப் பெண்கள் போலக் கோலம் கொள்ளச் செய்து, பெண்களின் நிலையில் அவர்கள் விளையாடும் பொருட்டு, நூலால் செய்யப் பெற்ற பந்தும் பொம்மைகளும் தொங்க விட்டு வைக்கப் பெற்றிருக்கும். எதிர்த்துப் போர் செய்வதற்குத் துணிவுடைய பகைவர்கள் எவரும் கிடைக்காமையினால், போரில்லாத மதில் வாயில்களை யுடையது அக்கூடல் மாநகர். மேலும், அந்நகரில் கடைத் தெருக்கள் பல உண்டு. அக்கடைத் தெருக்களில்களவு, பொய், ஏமாற்றம் முதலிய குற்றங்கள் நிகழமாட்டா. அவைகள் செல்வப் பெருக்கமும், பணப் புழக்கமும் மிகுதிப்பட்டுச் சிறந்து விளங்குகின்றன. அதனால், திருமகளே அரசு வீற்றிருப்பது போன்ற சிறப்பை உடையன. அக்கடைத் தெருக்கள். பல புலவர்கள் கூடித் தமிழை ஆராய்ந்ததனாலும், அந்நகருக்குக் கூடல் என்று பெயர் அமைந்தது. அந்நகரின் தெருக்கள் மிக நீண்டனவாய் விளங்கும். அவற்றில் பெரிய பெரிய மாட மாளிகைகள் நிறைந்திருக்கும்.

இத்தகைய கூடல் மாநகரின் மேற்குத் திசையில் திருப்பரங்குன்றம் உள்ளது. அதனைச் சுற்றிச் சேறு நிறைந்த வயல்கள் உள்ளன. அங்கே தாமரை, நெய்தல், முதலிய மலர்கள் அழகுறப் பூத்துள்ளன. வண்டின் கூட்டங்கள், நாளெல்லாம் தாமரை மலரில் தேனை உண்டு களித்து மயங்குகின்றன. அதனால் மாலைக் காலத்தில் சூரியன் மறையுங்கால் தாமரை மலர்கள் குவியத் தொடங்குவதனை அறியாமல், அவற்றிலேயே மயங்கி விழுந்து கிடக்கும் வண்டு

கள், இரவெல்லாம் அம் மலர்களிலேயே உறங்க நேருகின்றது. மறுநாள் வைகறையில் தாமரை மலர்கள் மீண்டும் மலரத் தொடங்கும்போதே அவ்வண்டுகள் வெளியில் வர முடிகின்றது. அப்போது அவைகள் வெளிவந்து, அவ்வைகறை வேளையில் அருகே உள்ள நெய்தற் பூக்களிலும், சுனைப் பூக்களிலும் சென்று ஊதி இன்புறுகின்றன. இத்தகைய வளப்பம் சான்றது திருப்பரங்குன்றம். அங்கே முருகன் பெரிதும் விரும்பி எழுந்தருளியிருக்கின்றான்.

## (2) திருச்சீரலைவாய் (திருச்செந்தூர்):

முருகன், களிற்றூர்திப் பெருமான் (கஜ வாகனர்) என்னும் நிலையில், பிணி முகம் என்னும் பெயருள்ள யானையை ஊர்தியாகக் கொண்டு, திருச்சீரலைவாய் என்னும் திருச்செந்தூரில் விளங்குகின்றான். அந்த யானையின் நெற்றியானது வரிகளையுடையது. அங்குசத்தால் குத்தப்பெற்று, ஆழ்ந்தவடுக்களைக்கொண்டது. வாடாத பொன்னரிமாலையும், ஓடை என்னும் நெற்றிப் பட்டமும், அதன் மத்தகத்தில் அசைந்து கொண்டிருக்கின்றன. அதன் இருபக்கங்களிலும் மாறி மாறி ஒலிக்கும் மணிகள் தாழ்ந்து கிடக்கின்றன. அது காற்றைப் போன்ற வேகமான நடையை யுடையது. எதிர்க்க முடியாத கூற்றுவனைப் போன்றஆற்றல் வாய்ந்தது. முருகன், அதன்மீது ஏறி அமர்ந்து உலா வருவான். தாமம், மகுடம், பதுமம், கிம்புரி, கோடகம் என்னும் ஐந்து வகையுறுப்புக்களையும், நிரம்பிய சிறந்த வேலைப்பாட்டினையும் உடைய அவனது திருமுடியில், வெவ்வேறு நிறங்களை உடைய அழகிய மணிகள், மின்னலைப் போல ஒளிவிட்டு அழகு செய்யும். அவனுடைய திருமுகம் நிறை வெண்மதியைப் போன்றது. அவனது காதுகளில் அசைந்து ஒளிவிட்டு விளங்கும் பொற்குண்டலங்கள், நிறைவெண்மதியைச் சூழ்ந்து, அதன் அருகில் விளங்கும் விண்மீன்களைப் போன்று திகழ்கின்றன.

வருத்தங்களைப் பொருட்படுத்தாத கொள்கையுடன், தமது தவ ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்கின்ற ஞானிகளின் உள்ளத்திற்பொருந்தி, முருகனது ஒளி மிக்க அழகிய திருமுகங்கள் தோன்றும். 1. அம்முகங்களுள் ஒன்று, இருள் மிக்க இப்பெரிய உலகமானது குற்றமின்றி விளங்கும்படி பல ஒளிக் கதிர்களைத் தோற்றுவிக்கும். 2. ஒரு முகம் அன்பர்கள் துதிக்க, அவர்களுக்கு இணங்கி இனிதாகத் தோன்றி, அவர்கள்பால் உள்ள காதலால் மகிழ்ந்து, அன்போடு வரம் கொடுக்கும். 3. ஒரு முகம், மந்திரங்களை உடைய வேத விதிகளினின்று வழுவாத அந்தணர்களின் வேள்விகளுக்கு இடையூறு நேராதபடி கடைக்கண் நோக்கம் செலுத்தும். 4. ஒரு முகம், மக்களின் அறிவினுள் அகப்படாது எஞ்சி நின்ற பொருள்களைஎல்லாம் உலகம் இன்புறும்படியாக உணர்த்தி, கலை நிரம்பிய முழு வெண் திங்கள் போலத் திசைகளை எல்லாம் ஒளிபெறச் செய்து கொண்டிருக்கும். 5. ஒரு முகம், பகைவர்களை அழித்து, அவர்கள் பிறர் மேற் செய்யும் போரைக் கெடுத்து, நீங்காத கோபம் கொண்ட நெஞ்சத்துடன் போர்க்களத்தை விரும்பும். 6. ஒரு முகம், கொடி போன்ற இடையை உடையவளும், குறவர்களின் அழகிய இளம் பெண்ணும் ஆக உள்ள வள்ளி அம்மையுடன் மகிழ்ச்சியுற்றிருத்தலை விரும்பி இருக்கும். இங்ஙனம், முருகனின் ஆறு திருமுகங்களும், அவ்வவற்றிற்குரிய தொழில்களைமுறைப்படச்செய்துகொண்டு வருகின்றன.

முருகனின் ஆறு திருமுகங்களும் செய்யும் தொழில்களுக்கு ஏற்ப, அவனது பன்னிரண்டு திருக்கைகளும், முறையே இயங்குகின்றன.

மாயிருள் ஞாலம் மறுவின்றி விளங்கப் பல் கதிர் விரிந்த முகத்திற்கு, ஏற்ப, உயிர்களைச் சூரிய வெப்பத்தின் கொடுமையினின்று காப்பதற்காக, வானத்தில் இயங்குகின்ற தெய்வமுனிவர்களுக்குப் பாதுகாவலாக ஏந்தியது ஒரு கை. (1). அதற்கு இணையான கை இடுப்பிலே வைக்கப் பெற்றுள்ளது (2).

ஆர்வலர் ஏத்த அமர்ந்து இனிது ஒழுகிக் காதலின் உவந்து வரம் கொடுத்தற்கு, யானை மேல் வருதல் முருகனின் இயல்பாதலின், யானையைச் செலுத்துவதற்காக அங்குசம் கடாவியது ஒரு கை (3). அதற்கு இணையான திருக்கை செந்நிற ஆடையை யுடுத்துள்ள துடையின் மேலே கிடந்தது (4).

மந்திர விதியின் மரபுளி வழாத அந்தணர் வேள்வியை, அசுரர்கள் வந்து கெடுக்காமல் தடுத்தற் பொருட்டு, ஒரு கை வேலைச் சுழற்றியது (5). மற்றொரு கை கேடயத்தை ஏந்தியது (6).

வேதாகமங்களில் விளங்காத பொருள்களை முனிவர்களுக்குத் தத்துவ நுட்பம் மிகஉணர்த்துங்கால், ஒரு கை மோன முத்திரை தாங்கி, மார்பொடு விளங்குகின்றது (7). ஒரு கை மார்பின் மாலையுடன் சேர்ந்து அழகுறத் திகழ்கின்றது (8).

தீயவர்களை அழித்து நல்லவர்களைக் காத்தற்பொருட்டு, கொடியோடு மேலே சுழன்று களவேள்விக்கு முத்திரை வழங்குகின்றது ஒரு கை (9). மற்றொரு கை, இனிய ஓசையுள்ள மணியை ஒலிக்கின்றது (10).

உலகியலில் உயிர்களுக்கெல்லாம் இல்லற வாழ்க்கை யின்பம் உதவுதற் பொருட்டு வள்ளியம்மையாருடன் நகையமர்ந்த திருமுகத்திற்கேற்ப, ஒரு கை மேகத்தினின்று மழையைப் பொழிவிக்கின்றது (11). மற்றொரு கை தேவமகளிர்க்கு மணமாலையைச் சூட்டுகின்றது (12).

இங்ஙனம் தனது ஆறு திருமுகங்களுக்கு ஏற்பத் தன்னுடைய பன்னிரண்டு கைகளும் ஏற்றபெற்றி தொழில் செய்து இயங்க, அருளே திருவுருவமாக அமர்ந்து விளங்கும் திருமுருகப் பெருமான், வான துந்துபி ஒலிக்கவும், கொம்புகள் இசைக்கவும், வெண்சங்குகள் முழங்கவும், இடியேறு போன்ற முரசம் அதிரவும், மயிலானது வெற்றிக் கொடியின் மீது இருந்து அகவவும், வான வழியாக விரைவாகச்

செல்லுதலை மேற்கொண்டு, சீர் ஓங்கிய அலைவாய் என்னும் திருச்செந்தூரிலே வந்து தங்குவான். இஃது அவனுக்குரிய நிலையான பண்பாகும்.

## (3) திருவாவினன்குடி (பழநி) :

முருகப் பெருமான் சூரபதுமனை வென்று, தேவர்களைச் சிறை விடுவித்து, தேவேந்திரனின் மகளாகிய தெய்வயானையை மணந்து கொண்டு மகிழ்ந்திருந்தபொழுது, தம் கையில் உள்ள வேற்படையை நோக்கி ''நமக்கு எல்லாம் தந்தது இவ்வேல்'' என்று உவகை மீதூரக் குறிப்பிட்டருளினர். அப்போது அருகில் இருந்த பிரமன், ''இவ்வேலுக்கு இத்தகைய சிறப்பினை யான் அளித்தேன்'' என்று இறுமாப்பு மேலிட்டு இயம்பினன். அது கேட்ட முருகப் பெருமான், ''நம் திருக்கை வேலுக்கு ஆற்றல் அளிப்பவன் நீயோ?'' எனச் சினந்து இகழ்ந்து வினவி, ''இங்ஙனம் செருக்குற்றுக் கூறிய நீ மண்ணுலகிற்குச் சென்று பிறந்து வருந்தி மாழ்குக'' என வெஞ்சொல் விடுத்தார். அதனல் பிரமதேவன் படைப்புத் தொழிலை இழந்தான். படைப்புத் தொழில் நிகழாமற் போகவே, முறையே திருமாலுக்கும் உருத்திரனுக்கும் உரிய காத்தற்றொழிலும் ஒடுக்குதற்றொழிலும் கூட நிகழ முடியாமல் நின்று போயின. இத்தீங்குகள்எல்லாம் நீங்குதற் பொருட்டுத் திருவாவினன்குடியில் தேவர்கள் முருகன்பால் குறையிரந்து கொள்ள வருகின்றனர். அவர்கள் முருகன்பால் தாமே முன்னர்ச் செல்ல அஞ்சி, முருகனின் அருளுக்குரிய முனிவர்களை முன்னே விடுத்து, அவர்களின் பின்னர் இசை பாடி முருகனின் முனிவைத் தீர்க்கவல்ல கந்தர்வ மகளிரை, அனுப்புகின்றனர். முனிவர்கள் மரவுரியைத் தைத்து உடையாக அணிந்தவர்கள். வலம்புரிச் சங்குபோல அழகாய் முடிக்கப்பட்ட வெண்மையான நரைத்த முடியை உடையவர்கள். மாசற்ற ஒளி மிகுந்த மேனி உடையவர்கள். மான் தோலைப் போர்த்திருப்பவர்கள். தசை இல்லாத மார்பினையும், எலும்புகள் மேலெழுந்து தோன்றுகின்ற உடம்பையும் உடையவர்கள். பகையும் கோபமும் நீங்கிய மனத்தினர். எல்லாவற்றையும் கற்றவரும் அளந்தறிய முறிடியாத பேரறிவை உடையவர்கள். கற்றவர்களுக்கெல்லாம் எல்லையாய் இருக்கும் தலைமைப்பாடு வாய்ந்தவர்கள். காமத்தையும் கடுஞ்சினத்தையும் நீக்கிய தவம் மிக்கவர்கள். எவரையும் எதனையும் வெறுக்காத அருளாளர்கள்.

முனிவர்களுக்குப் பின்னல், அன்பு நிறைந்த நெஞ்சமும் மென்மையான மொழியும் உடைய கந்தர்வர்கள் இனிய யாழை வாசித்துச் சென்றார்கள். அவர்கள் முகையவிழ்ந்த மாலையை மார்பில் அணிந்திருப்பார்கள். செவியினலே சுருதியை அளந்து அமைத்த நரம்புகளையும், வார்க்கட்டினையும் உடையது அவர்களுடைய யாழ். இக் கந்தர்வர்களோடு, கந்தர்வ மகளிரும் விளங்கித் தோன்றினர். அவர்கள் நோய் இன்றி அமைந்த உடலை உடையவர்கள். மாந்தளிரைப் போன்ற நிறமுடையவர்கள். பொன்னிறம் விளங்கும் அடிவயிற்றில் வரிகளை உடையவர்கள். கண்ணுக்கினிய பதினெண்கோவை மேகலையை அணிந்த அரையை உடையவர்கள். மாசற்றவர்கள்.

இவ்வாறு இவர்கள் உடன்வர, கொடிய பாம்புகளை அழிக்கின்ற கருடனைக் கொடியாக உடைய திருமாலும்; வெள்ளேற்றுக் கொடியை உயர்த்தி உமாதேவியை இடப்பாகத்தில் கொண்டு முக்கண்களை யுடையவனும், முப்புரங்களை அழித்த வலிமை மிக்க உருத்திரனும் ; ஆயிரம் கண்களை உடையவனும், நூறு வேள்விகளை முடித்துப் பகைவர்களை யழித்த வெற்றி மிக்கவனும், நான்கு தந்தங்களையுடைய ஐராவதம் என்னும் யானையின் பிடரியில் அமர்ந்து வரும் செல்வம் மிக்க இந்திரனும்; நான்கு திக்குப் பாலகர்களும், வான் வழியாக ஆவினன் குடிக்கு வந்து முருகனை வணங்கி வழிபட்டு அருள்பெற விழைகின்றனர். முப்பத்து முக்கோடி தேவர்களும், பதினெண் வகைத் தேவ கணத்தினரும் புடைசூழ, அவர்கள் தாமே முன் சென்று முருகனைக் காண அஞ்சி, முருகனின் அருளுக்குரிய சிறந்த முனிவர்களை முன்னே செல்லச் செய்தனர். அம்முனிவர்களை அடுத்து அன்பு நிறைந்த நெஞ்சையும் மென் மொழியையும் உடைய கந்தர்வர்கள், இனிய யாழை இசைத்துச் சென்றனர். அவர்களைத்தொடர்ந்து கந்தர்வப் பெண்கள் சென்றனர். இங்ஙனம் சிறந்த முனிவர்களும், கந்தர்வர்களும், கந்தர்வ மகளிரும், முன்னே செல்ல, அவர்களின்பின்னே திருமாலும், உருத்திரனும், இந்திரனும், இந் நிலவுலகிற்கு வந்தார்கள். இங்ஙனம் தேவர்களும் மூவர்களும் வந்து கண்டு வணங்கிக் குறை இரக்கும்படி, முருகன் திருவாவினன்குடியில் தங்கியிருப்பான். அதுவும் அன்றி :—

## (4) திருவேரகம் (சுவாமிமலை) :

திருவேரகம் என்னும் தலத்திலும் எழுந்தருளியிருப்பதற்கு உரியவன் முருகன். திருவேரகத்தில் முருகனை (உபநயனத்திற்கு முன்பு ஒரு பிறப்பும், அதற்குப் பின்பு ஒரு பிறப்பும் ஆக) இருபிறப்பாளராகிய அந்தணர்கள், உரிய காலத்தைத் தேர்ந்து துதிப்பர். அவர்கள் தாய் வழியும் தந்தை வழியும் ஆகிய மரபு இரண்டும் நன்கு மதிக்கப்பட்ட பழம்பெருங் குடிகள் பலவற்றில் தோன்றியவர்கள். ஓதல் ஓதுவித்தல், வேட்டல் வேட்பித்தல், ஈதல் ஏற்றல் என்னும் தமக்குரிய ஆறு தொழில்களிலும் முறை பிறழாது ஒழுகுபவர்கள். நாற்பத்தெட்டு ஆண்டுகள் பிரமசரிய நெறியில் கழித்தவர்கள்.* அறத்தை வளர்க்கும் கொள்கையுடையவர்கள். ஆகவனீயம் தட்சிணுக்கினி காருக

---

* திருமுருகாற்றுப்படை ஒரு துதி நூலாக மட்டும் இல்லாமல், பண்டைக் காலத்துச் செய்திகளையும், பழக்க வழக்கப் பண்பாடுகளையும் கூட, அறிந்து கொள்ளுதற்குரிய ஒரு சிறந்த கருவியாகத் திகழ்கின்றது.

பண்டைக் காலத்தில் ஒரு சில உயர்ந்த பெருமக்களால் பிரமசரிய ஒழுக்கமானது, ''அறுநான்கு இரட்டி'' (48) ஆண்டுகள் வரையில் கூடக் கடைப்பிடிக்கப் பெற்றிருந்ததாகத் தெரிகின்றது.

''அறுநான்கு இரட்டி இளமைநல் யாண்டு
ஆறினிற் கழிப்பிய அறன்நவில் கொள்கை''

பத்தியம் என்னும் சிறந்த முத்தீச் செல்வத்தை வளர்ப்பவர்கள். ஒன்பது இழைகளைக்கொண்டு, முப்புரிகளாக அமைந்த நுண்ணிய பூணூலை உடையவர்கள். இவர்கள் ஈரமான ஆடை, உடம்பிலே கிடந்து உலரும்படி உடுத்திக் கைகளை உச்சியிற் குவித்து, ஆறு எழுத்தாகிய மந்திரத்தை வாய்க்குள்ளே உச்சரித்து, மணம் பொருந்திய நல்ல மலர்களைத் தூவி, முருகனைப் புகழ்ந்து வழிபடுவார்கள். இவ்வந்தணர்களின் வழிபாட்டுக்கு மிகவும் மகிழ்ந்து முருகன் திருவேரகத்தில் தங்கியிருப்பான். அதுவும் அன்றி:

## (5) குன்றுதோருடல் (திருத்தணிகை முதலியன) :

முருகன் குறிஞ்சி நிலமாகிய குன்றுகள் தோறும் வேலனாக நின்று ஆடுதலையும் தனக்குரிய நிலைபெற்ற குணமாகக் கொண்டவன். குன்றுகளில் வேடுவர்கள் வில்லை ஏந்தி, மார்பில் மணமுள்ள சந்தனத்தைப் பூசி, மூங்கிலிலே விளைந்த கள்ளின் தெளிவைத் தங்கள் சுற்றத்தாருடன் கூடி உண்டு மகிழ்ந்து, தொண்டகம் என்னும் பறையைக் கொட்டிக் குரவைக் கூத்து ஆடுவார்கள். இவ் வேடர்களின் பெண் மக்கள் சுனையிற் பூத்த மலர்களைக் கண்ணியாகத் தொடுத்துத் தலையில் அணிந்திருப்பர். அவர்களின் கூந்தல் சேர்த்துக் கொண்டையாகக் கட்டப் பெற்றிருக்கும். மராமரத்தின் வெண் பூங்கொத்துக்களையும், கஞ்சங் குல்லையையும், இடையிடையே சேர்த்துக் கட்டிய தழை ஆடையை அரையில் உடுத்திருப்பார்கள். பல வகை மணி வடங்களையும் அணிந்திருப்பார்கள். இப்பெண்களும் குரவைக் கூத்தில் கலந்து கொண்டு குரவைக் கூத்தாடுவார்கள்.

வேடர்கள் ஆடும் குரவைக் கூத்தில் படிமத்தான் எனவும், தேவராளன் எனவும் கூறப் பெறும் வேலனும் கலந்து கொண்டு ஆடுவான்.

---

என்னும் வரிகள், பிரமசரிய நிலையைக் குறிப்பனவாகத் திருவேரகம் பற்றிய பகுதியில், அந்தணர்களின் இயல்பைக் குறித்து விளக்குங்கால், திருமுருகாற்றுப்படையில் வந்துள்ளன.

இங்ஙனம் பிரமசரிய நிலைக்கு 48 ஆண்டுகள் வரையறுத்தமை எற்றுக்கு? என்பது புலனாகவில்லை. எழுத்து வடிவில் அன்றி ஓதக் கேட்பதன் வாயிலாகவே பயிலப் பெற்று வழங்கி வந்த வேதப் பாடல்களுள், ஒரு வேதத்தினை நன்கினிது ஓதி முழுவதும் பயின்று மனனம் செய்து கொள்ள வல்லனாதற்கு 12 ஆண்டுகள் ஆகும் என்றும்; அங்ஙனம் நான்கு வேதங்களையும் பயின்று புலமை நிறைவும் வித்தகமும் பெறுவதற்கு 48 ஆண்டுகள் ஆகும் என்றும், அவ்வாறு நான்கு வேதமும் பயின்று தேர்ந்த பேரறிஞரே ''சதுர்வேதிகள்'' எனப்படுவர் என்றும், அத்தகையவர்களுக்கு அரசர்களால் முற்றூட்டாக வழங்கப்படுவனவே ''சதுர்வேதி மங்கலங்கள்'' என்றும் பெரியோர்கள் கூறுவர்.

இனி வேத நூல் ஆராய்ச்சிகளில் மிகவும் தலைசிறந்த பேரறிஞராக விளங்கி யிருந்த சுவாமி தயானந்தர் அவர்கள், ''உத்தமம் ஆகிய பிரமசரியம் என்பது 48 வயது வரையிற் கடைப்பிடிக்கப் படும். 48 ஆண்டுகள் எவன் பிரமசரிய ஒழுக்கம் கடைப்பிடிக்கின்றானோ, அவன் ஆற்றல் மிகவும் வாய்ந்து, எல்லாக் கலைஞானத் திறங்களையும் கற்றுணரும் பெரு வல்லமை பெற்றுத் திகழ்வான்'' என்று குறிப்பிட்டிருத்தலும், ஈண்டு நாம் அறிந்து மகிழ்ந்து பயன் கொள்ளத் தக்கது.

" The highest class of Bramacharya, third in number, is upto the age of forty-eight. Just as the Jagati metre consists of forty eight syllables, similarly whoever keeps celibacy upto the age of forty-eight comes to possess his vital airs quite capable of acquiring all knowledge."

—Sathyartha Prakhasigai, Swami Dayanandar

கோயிலில் பூசை செய்து கொண்டு, தெய்வ ஆவேசம் பெற்று, குறி முதலியன சொல்லி ஆடி வருதல், இவ்வேலனின் செயலாகும். வேலைக் கையிற் பிடித்துக் கொண்டு ஆடுவதனால், கோயிற் பூசகனாகிய இவனுக்கு வேலன் எனப் பெயர் ஆயிற்று. மலை நாட்டில் வேலன் என்ற பெயரோடு இன்றும் கோயிற் பூசகன் வழங்கப் படுகின்றான்.

குரவைக் கூத்தாடும் வேலன், பச்சிலைக் கொடியில் சாதிக்காயை இடையிடையே சேர்த்து, தக்கோலக் காயைக் கலந்து, காட்டு மல்லிகையுடன் வெண் தாளியைக் கட்டின கண்ணியை அணிந்திருப்பான். சிவந்தமேனியனாய்ச் செவ்வாடை தரித்திருப்பான். அவன் தன்னுடைய காதுகளில் அசோகம் தளிரைச் செருகியிருப்பான். காலில் கச்சை கட்டிக் கழல் அணிந்திருப்பான். வெட்சி மாலை சூடியிருப்பான். குழலையும் கொம்பையும் ஊதிச் சிறிய இசைகளை உண்டாக்குவான். ஆட்டுக்கிடாயும் மயிலும் அவனுக்கு அருகில் இருக்கும். அவன் கோழிக் கொடியை ஏந்தி இருப்பான். உயரமான வடிவத்தையுடைய அவன், தோளில் கடகத்தை அணிந்து, நிலத்தில் புரளும்படி ஆடை உடுத்தியிருப்பான். நரம்பு ஒலித்தது போன்ற இனிய குரலிலே பாடும் பெண்களுடன், மான் பிணைகளைப் போன்ற இளம் மகளிரை, முழவு போன்ற தன் தோள்களினாலே தழுவி ஆடுவான்.

இங்ஙனம் வேடர்களும், வேட்டுவ மகளிரும், வேலனும் குரவைக் கூத்தாடி மகிழும் குன்றுகள் தோறும், முருகன் தானும் ஆடல் நிகழ்த்தி நிலைபெற்று விளங்குவான். அதுவும் அன்றி :—

## (6) பழமுதிர்சோலை (அழகர்கோயில்) :

முருகன், எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்திருப்பான். அவன் இல்லாத இடம் எதுவுமில்லை. உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற வேறுபாடின்றி, அன்பினால் தன்னை வழிபடும் அடியவர்கள் அனைவருக்கும் ஏற்ற பெற்றி அவன் அருள் புரிந்து உதவுகின்றான். சிறிய தினை அரிசியைப் பூக்களோடு கலந்து பிரப்பரிசியாக வைத்து, ஆட்டை அறுத்துக் கோழிக் கொடியை நிறுத்தி, மலை நிலத்து ஊர்கள் தோறும் எளிய மக்கள் இயற்றும் சிறப்புடைய திருவிழாக்களிலும் அவன் எழுந்தருளியிருப்பான். அன்பர்கள் தன்னைத் துதிப்பதனால், அவர்கள் விரும்பும் இடங்களில் எல்லாம் தங்கி நிலைபெறுவான். படிமத்தான் ஆகிய வேலன் இயற்றும் வெறியாடு களங்களிலும், காடுகளிலும், சோலைகளிலும், ஆறுகளிலும், குளங்களிலும், நாற்சந்தி முச்சந்திகளிலும், புதிய பூக்களையுடைய கடம்ப மரத்திலும், ஊர் நடுவில் உள்ள மரத்தின் அடியிலும், மக்கள் பலரும் கூடும் பொது இடமாகிய அம்பலங்களிலும், பசுக்கள் உராய்ந்து கொள்ளும் நடுதறிகள் உள்ள இடங்களிலும், முருகன் எழுந்தருளி விளங்குவான். அன்றியும் நாத்திகர்கள் அஞ்சுமாறு, தான் வந்து தோன்றும்படி ஆற்றுப் படுத்தப் பட்ட மலைக் கோயில்களிலும் முருகன் உறைவான்.

முருகன் இவ்வாறு ஆங்காங்கே பல இடங்களிலும் தங்கி விளங்கி இருப்பான். அவ்விடங்களுள் பழமுதிர்சோலை என்னும் தலமும் ஒன்று. அங்குள்ள மலையினின்று பெருகும் அருவி, பல நிறம் பொருந்திய ஆடைகளைப் போல ஒடுங்கி அசைந்து வரும்; அகில் மரங்களைச் சுமந்து வரும்; சந்தன மரங்களை உருட்டிக் கொண்டு வரும். மூங்கிற் கிளைகளைப் பறிக்கும் ; மலைமேல் தொடுக்கப்பட்ட தேன் கூடுகளைச் சிதைக்கும்; ஆசினிப் பலாவின் முதிர்ந்த சுளைகளும், சுர புன்னை மரத்துப் பூக்களும், அவ்வருவி நீரில் உதிர்ந்து விழும்; ஆணும் பெண்ணும் ஆகிய கருங் குரங்குகள் நடுங்கவும், யானைகள் குளிரால் ஒடுங்கவும், அவ்வருவி வெள்ளம் அலை வீசிச் செல்லும். பெரிய களிறுகளின் முத்துடைய தந்தங்களை வாரி எடுத்துப் பொன்னும் மணியும் கொழித்துக் கொண்டு, அருவி வெள்ளம் தாவிக் குதித்து ஓடும். அது போது, அருவி நீர்ப்பெருக்கு வாழை மரங்களைச் சாய்க்கும். தெங்கங் குலைகளை உருட்டும். கரடிகளும் பன்றிகளும் கோழிகளை அஞ்சிக் கற்பிளவாகிய குகைகளில் ஒளிந்து கொள்ளச் செய்யும். காட்டெருமைக் கிடாய்கள் கதறும்படி மிக உயரத்திலிருந்து 'இழும்' என்ற ஓசை உண்டாகும்படி மலைமேல் இருந்து அருவிகள் கீழே விழும். இத்தகைய பல அருவிகளை உடைய பழமுதிர் சோலை என்னும் தலத்திற்கு உரிமை உடையவன் முருகன்.

**ஆற்றுப்படை :**

இவ்வாறு திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருஆவினன்குடி, திருவேரகம், குன்றுதோருடல், பழமுதிர்சோலை என்னும் ஆறு தலங்களிலும் முருகன் எழுந்தருளியிருப்பான். அவனுடைய திருவடியை நினைவு கூர்ந்த நின் உள்ளம், செம்மல் உள்ளமாகும். நினைக்கத் தகாதவற்றை விடுத்து நினைக்கத் தக்கதை நினைக்கப் பெற்றதனால், அது சிறப்புடையதாயிற்று. நன்மை பொருந்திய கொள்கையை விரும்பிய சிறந்த உள்ளத்துடன், நீ முருகனிடம் சென்று தங்கும் மெய்ஞ்ஞானப் பேற்றைப் பெற விரும்பினையாயின், நற் பண்புகள் பலவும் சேர்ந்து நன்மை பொருந்திய நின் நெஞ்சகத்தில் உண்டான இனிய விருப்பம் கைகூடி நிறைவேறும். ஆதலின் நீ விரும்பிய அந் நற்பேற்றை அடைய இப்பொழுதே இம் முயற்சியை மேற்கொள்க. மேற்குறித்த ஆறு தலங்களிலோ, அல்லது வேறு பிற இடங்களிலோ சென்று, நீ முருகனை நேரிற் காணலாம். அங்ஙனம் காணும் பொழுது இனிய முகத்துடன் அவனை அன்புடன் துதித்துக் கையினால் தொழுது வாழ்த்தி, அவனது திருவடிகள் உனது தலையில் பொருந்தும்படி வணங்கிப் பின்வருமாறு புகழ்க :—

''நெடிய பெரிய இமய மலையில், சரவணப் பொய்கையில் அக்கினித் தேவன் அங்கையில் ஏற்று விடுப்ப, அங்கே கார்த்திகைப் பெண்டிர் அறுவராலும் பாலூட்டி வளர்க்கப் பெற்று, ஆறு வடிவங்கள் ஒன்றாகச் சேர்ந்த செல்வனே! கல்லால மரத்தின் நிழலில் எழுந்தருளும் சிவபிரானின் மைந்தனே! மலைமகளின் புதல்வனே! பகைவர்களுக்குக் கூற்றுவனைப் போன்றவனே! போரில் வெற்றியைத் தரும் துர்க்கையின் சிறுவனே! அழகிய அணிகலன்கள் பல அணிந்த சிறப்பினையுடைய காடுகிழாளின் குழவியே! தேவர்கள் வணங்குகின்ற விற்படையை உடைய தலைவனே! மாலை யணிந்த மார்பனே! நூல்களை உணர்ந்த புலவனே! போரில் ஒப்பற்றவனே! போரில் வெற்றி மிக்க வீரர் வீரனே! அந்தணர்களுக்குச் செல்வமாக விளங்குபவனே! அறிஞர்கள் புகழ்கின்ற மலை போன்றவனே! வள்ளி தெய்வயானையின் கணவனே! வேலைக் கையில் ஏந்தியவனே, சான்றாண்மைக் குணங்களாகிய செல்வம் மிக்கவனே! கிரவுஞ்சம் என்னும் மலையை அழித்த அழியாத வெற்றிப் புகழை உடையவனே! வானளாவிய பெரிய மலைகளையுடைய குறிஞ்சி நிலத் தலைவனே! புகழ்மிக்க புலவர்களுக்குத் தலைவனே! பெறுதற்கரிய சிறப்பினை உடைய வீடுபேற்றைத் தரும் முருகனே! விரும்பி வழிபடும் அடியவர்களுக்கு எல்லா இன்பங்களையும் நிறையக் கொடுக்கும் புகழ் மிகுந்தவனே! துன்புற்றவர்களுக்கு அருள் புரியும் வேந்தனே! அடியவர்களைத் தாங்குகின்றவனே! பகைவர்களுக்கு அச்சத்தை விளைவிப்பவனே! நெடுவேளே! பெரியவர்கள் எல்லாம் போற்றுகின்ற பெரும் புகழ் மிக்க இறைவனே! சூரபதுமனின் குலத்தை வேரோடு அறுத்த வலிமை மிக்கவனே! மதவலி என்ற பெயருடையவனே ! போர் புரிதலில் எடுத்துக் காட்டானவனே! பெருந் தகையோனே! என்று பலவாறாக யான் கூறிய முறையில் நீ அவனை விடாது புகழ்க. பெருமானே! நின் சிறப்பை முழுதும் அளந்து அறிதல் உயிர்களுக்கு இயலாது. ஆதலின் நின் புகழை முழுவதும் கூறுதற்கு எளியேன் வல்லன் அல்லேன். நினக்கு இணையானவர்கள் இல்லாத புலமை உடையவனே! நின் திருவடிகளை நினைந்து விரும்பி இங்கு வந்தேன்'' என்று முருகன்பால் நின் விண்ணப்பத்தைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்க.

இங்ஙனம் நீ, நின் விண்ணப்பத்தைச் சொல்லி முடிப்பதற்குள், பல்வேறு வடிவம் கொண்ட சிறு பூதங்கள் பல அவ்விடத்தே பெருமை மிகத் தோன்றி ''இவன் தங்கள் அருளைப் பெறுதற்குத் தகுதியுடையவன்; அறிவு முதிர்ந்த சொல்வளமுடைய புலவனாகிய இவ்விரவலன், தங்களின் செழும் புகழை நாடி இங்கே வந்திருக்கின்றான்'' என்று இனிய நல்ல சொற்களால் முருகனைப் பரவும். அப்போது தெய்வத் தன்மை நிரம்பியதாகவும், வலிமை மிக்கதாகவும், வானத்தை அளாவுகின்றதாகவும் உள்ள உயர்ந்த வடிவத்துடன் முருகன் தோன்றுவான். தோன்றி, அச்சம் தரவல்ல தனது பெரு நிலையை உள்ளடக்கி மறைத்துக் கொண்டு, மணம் கமழ்வதும், தெய்வத் தன்மையுடையதும், பழமை வாய்ந்ததுமான தனது இளமை நலத்தைக் காட்டி, 'நினது வரவை யானறிவேன். நீ அஞ்சற்க' என்று அன்புள்ள நல்ல மொழிகளைப் பலகாலும் கூறி அருள்புரிவான். மேலும், உலகத்தில் நினக்கு ஒருவரும் ஒப்பில்லை எனும்படி பெறுதற்குரிய சிறந்த பல பரிசில்களையும் வழங்கி யருள்வான். (என்பது திருமுருகாற்றுப் படையின் கருத்துச் சுருக்கம்).

*



# யானை எழுதிய ஓலை!

திரு. ம. அ. முருகேசன் பி.ஏ., பி.எல்.,

''யானை எழுதிய ஓலை' என்றால் ஆச்சரியமாக இருக்கிறது அல்லவா? எங்காவது யானை ஓலை எழுதுமா? யானை முகத்தையுடைய விநாயகப் பெருமான் தன்னுடைய கொம்புகளில் ஒன்றை ஒடித்து, வியாசர் சொல்லச் சொல்ல மகா பாரதத்தை மேருமலைச் சாரலில் எழுதினார் என்பதும், அதனாலே, விநாயகருக்கு ஒற்றைக் கொம்பன் (ஏக தந்தன்) என்று ஒரு பெயர் உண்டு என்பதும் புராண வழக்கு: சில வேளைகளில் பறவையும், வண்டும் தூது போகும். தலைவனும் தலைவியும் தங்களுக்குள் சேதிகளைப் பரிமாறிக் கொள்ள வண்டையும், தும்பியையும், கிளியையும், அன்னத்தையும், ஏன்? உயிரில்லாத சடப் பொருளாகிய மேகத்தைக் கூடத் தூது அனுப்பியதாகப் புலவர்கள் கற்பனை செய்து, இறவாப் புகழ் படைத்த இலக்கியங்களை இயற்றியிருக்கின்றனர். ஆனால் யானை ஓலை எழுதியதாகக் கற்பனை செய்திருப்பது அருமை தான். அதைத்தான் பார்ப்போமே!

பாண்டியனைப் பகைவர்கள் எதிர்க்கின்றார்கள். இருவரும் வீரத்தில் சளைத்தவர்கள் அல்லர். வலிமை பொருந்திய வேற்படையையும், யானைப்படையையும் உடையவன் பாண்டியன், அவனுடைய பகைவர்களோ வீரத்தை உமிழ்கின்ற வேலைக் கையில் ஏந்தியவர்கள், மாற்றாரும் அஞ்சும் பரந்த மார்பினையுடையவர்கள். அந்த மன்னர்கள் திரளாகக் கூடிப் பாண்டியனை எதிர்க்கின்றனர். பாண்டியன் தன் பட்டத்து யானை மீதேறி அவர்களை எதிர்க்கின்றான். பாண்டியனுடைய யானை பகைவர்கள் மீது பாய்ந்து தாக்கி, இவர்களுடைய அகன்ற மார்பைத் தன்னுடைய வலிய நீண்ட தந்தங்களால் குத்திக் கிழித்துவிட்டது. அது எப்படி இருக்கிறது தெரியுமா? பகைவர்களுடைய அகன்ற மார்பை ஓலையாகவும், தன்னுடைய வலிய கொம்புகளை எழுத்தாணியாகவும் கொண்டு யானை ஓலை எழுதுவது போல இருக்கிறதாம். அப்படி எழுதுவதற்கு ஏதாவது செய்தி வேண்டுமல்லவா? அந்தச் செய்தி பாண்டியனுடைய வீரந்தான். ''செல்வம் நிறைந்திருக்கின்ற உலகமெல்லாம் எமது பாண்டிய மன்னருக்கே'' என்று, அந்த யானை எழுதியதாம். இப்படி முத்தொள்ளாயிரத்திலே ஒரு பாடல் :—

மருப்பூசி யாக மறங்கனல்வேல் மன்னர்
உருத்தகு மார்பு ஓலை யாகத்—திருத்தக்க
வையக மெல்லாம் எமதென் றெழுதுமே,
மொய்யிலைவேல் மாறன் களிறு.

பார்த்தீர்களா? பாண்டியனது நாட்டில் அவனுடைய யானையே கணக்கப்பிள்ளையாக இருந்து ஓலை எழுதியிருக்கிறது.

இம்மாதிரி, யானையின் கொம்புகளால் பகைவர்களுடைய மார்பிலே தன் வெற்றியை எழுதுவது என்ற கருத்தைத் திருத்தக்க தேவர் கூட, சீவக சிந்தாமணியில் சொல்லுகிறார். கட்டியங்காரன், அசனி வேகம் என்ற தன் யானையின் கொம்பினாலே, தன்னுடைய் கீர்த்தியை சீவகனின் மார்பில் எழுதுவதாகச் சூளுரைத்தானாம் :—

''ஆய்களிற்று அசனி வேகம்
அதன்மருப்பு ஊசி யாகச்
சீவகன் அகன்ற மார்பம்
ஓலையாத் திசைகள் கேட்பக்
காய்பவன் கள்வர் என்ன
எழுதுவித் திடுவல், இன்னே
நீபரிவு ஒழிந்து போய்நின்
அகம்புகு, நினையல் என்றான்''

—குணமாலையார் இலம்பகம். 271.

# பஞ்சாமிர்தம்

டி.என். சுகிசுப்பிரமணியன்

## —: எது சுகம் ? :—

ஆண்டவனைத் தொழும்போது, வாடிப் போன மலர்களைக் கொண்டு அர்ச்சனை செய்யாதீர்கள்.

உங்கள் ஆசைகள்

உங்கள் அபிலாஷைகள்

உங்கள் குரோதங்கள்

உங்கள் அற்ப மகிழ்ச்சிகள்

இவைகளை ஆண்டவனுக்கு அர்ச்சனை செய்வது, வாடிப் போன மலர்களுக்குச் சமம்.

அறிவு மயமானவன் ஆண்டவன்.

அவனுக்கு உங்கள் அறிவைக் கொடுத்து வேண்டுதல் செய்யுங்கள்.

இவை மணமுள்ள பூக்கள்.

அன்பு மயமானவன் ஆண்டவன்.

அவனுக்கு உங்கள் அன்பைக் கொடுத்து அர்ச்சனை செய்யுங்கள்.

இவை வாசமுள்ள மலர்கள்.

உங்கள் அறியாமையின் காரணமாக ஆசைகள், அபிலாஷைகள், குரோதங்கள், பணலாபங்களை ஆண்டவனின் முன் வைக்காதீர்கள்.

ஆண்டவனை அறியாமையினால் மூடி விடாதீர்கள்.

உங்கள் விருப்பத்திற்கு ஆண்டவனை மாற்றுவதற்காக அர்ச்சனை செய்கிறீர்களா? இல்லை. ஆண்டவனைப் போல ஒளிமயமாக, அறிவு மயமாக மாற அர்ச்சனை செய்கிறீர்களா?

நீங்கள் ஆண்டவனாக மாற வேண்டும்.

அர்ச்சனையும் பூசை செய்தலும், ஆண்டவனிடம் கேட்பதற்காகப் பிறக்கவில்லை. நமது ஆத்மாவின் தாகத்தைத் தணிக்க அன்பெனும் கருவியை நாம் நாடுவது அர்ச்சனை; அறிவெனும் ஒளியைத் தேடுவது பூசை.

ஆண்டவனை நினைக்கும்போது உங்களைப் பிச்சைக்காரர்களாக நினைத்துப் பிச்சை கேட்காதீர்கள். ஆண்டவன் பிச்சை போடும் பிரபு இல்லை. உங்களை நண்பனாகக் கருதும் தோழன்.

தோழனைப் பிச்சைக்காரனாக எண்ணுவது எவ்வளவு பெரிய அறியாமை.

அருளாளனை இச்சைகளைப் பூர்த்தி செய்யும் வேலைக்காரனாக எண்ணுவது எவ்வளவு பெரிய பேதமை. தொழுகையும், பிரார்த்தனையும் நமது உள்ளத்தின் ஒலி. நமது மௌனத்தின் எதிரொலி.

நமக்கு ஆண்டவன் தொண்டன்; நாம் அவனுக்குத் தொண்டன். ஒருவருக்கொருவர் தொண்டு செய்து தான் உய்ய முடியும்.

தொண்டர் நாதன் என்பது ஆண்டவன் திருநாமங்களில் ஒன்று. நாமும் அவனாக மாற வேண்டும் என்கிறார் தாயுமானவர்.

உண்டு உடுத்துப் பூண்டுஇங்கு
உலகத்தார் போல் திரியும்
தொண்டர்விளை யாட்டே
சுகங்காண் பராபரமே

**மனம்போல் வாழ்வு:**

பணக்காரன் ஒருவன், ஆயிரம் மொகராக்களை எடுத்து ஒரு துணியில் கட்டினான். எதற்காகத் தெரியுமா? ஏழையான ஒருவன், விதி வசத்தால் பிழைக்க முடியாமற் போய் நாஸ்திகன் ஆனால் அவனுக்கு உதவ வேண்டுமென்று எண்ணிப் பொற்கிழி கட்டினான்.

இந்தப் பொற்கிழியுடன் சந்தைக்குப் போனான். அங்கே, சோம்பேறிகள், ஏழைகள், ஊர் சுற்றிகள் எல்லோருந்தான் இருந்தார்கள். பணமுடிச்சைக் காட்டி ''இந்தச் சந்தைக்கு வந்தவரெவராவது, எனக்குக்கடவுள் நம்பிக்கை இல்லையென்று சொன்னால் போதும். அவர்களுக்கு இந்தப் பொற்கிழி கிடைக்கும் என்றார் பணக்காரர்.

''சே! சே! எத்தனை துன்பம் வந்தாலும் ஆண்டவன் இல்லை என்று சொல்ல மாட்டோம். உன் பணம் வேண்டாம்'' என்றனர்.

பிச்சைக்காரர்களை அணுகினன். அவர்களும் ஆண்டவன் இல்லையெனச் சொல்ல மறுத்தனர். அங்கே ஆடைக்குறைவாக, சேறும் சகதியில் ஒரு நோயாளி படுத்துக் கிடந்தான். ''பாவம். நீ ரொம்பக் கஷ்டப்படுகிருய். விதி எப்படி ஆக்கிவிட்டது! உனக்குக் கடவுளிடம் பக்தியோ நம்பிக்கையோ இருக்காது'' என்று ஆரம்பித்தார்.

நோயாளிப் பிச்சைக்காரன் ''நான் விடும் கடைசி மூச்சு வரை ஆண்டவன் இல்லையெனச் சொல்லாதவன். ஆஸ்திகன் நான். போ. போ'' என்று விரட்டி விட்டான்.

''என்ன உலகம் இது. ஏழை, நோயாளி, எவனும் நாஸ்திகம் பேசவில்லை. கடவுளை மறுக்கவில்லை. நான் கொண்டு வந்த நூறு மொகரா தங்க நாணயங்களும் உயிரோடு உள்ளவர்களுக்குக் கிடைக்காது. செத்தவர்கள் அடையட்டும்''.

இடுகாடு சென்று ''செத்தவர்களே! செத்தவர்களே! உங்களில் யாராவது கடவுள் இல்லையென்று சொன்னுல், நம்பினுல் நான் தரும் நூறு மொகராக்களை யெடுத்துப் போங்கள். உங்களுக்காக இங்குள்ள கல்லறை ஒன்றில் பதுக்கி வைக்கிறேன்'' என்ருன்.

வெறும் வாய் திறந்து கேட்காததால் நூறு மொகராக்களைப் பதுக்கி வைத்து விட்டு வீடு திரும்பினுன்.

காலம் ஓடிற்று. பணக்காரனின் அதிருஷ்ட சக்கரம் பின்னுகச் சுழன்றது. பணம் போய் விட்டது. தினம் தினம் சாப்பாட்டிற்கே கஷ்டம். ஒரு நாள் திடுமென்று அவன் நினைவுக்குள் புதைத்து வைத்த பணம் நினைவுக்கு வந்தது. இடுகாட்டிற்குப் போய் மொகராக்களைத் தேடினுன். அச்சமயம் காவலர்கள் வந்து பிடித்துக் கொண்டார்கள். புதைத்த பிரேதங்களின் துணிமணியைத் திருடுகிறவன் எனநினைத்தார்கள். இவனிடம் நூறு தங்க மொகராக்கள் இருப்பதைப் பார்த்ததும் அரசனிடம்இழுத்துப் போய் நிறுத்தினுர்கள்.

''அரசே! நான் திருடன் இல்லை. இது என் பணம். யார் கடவுள் இல்லையென்று நம்புகிருனே அவனுக்காக ஒளித்து வைத்த பணம். எனக்குக் கஷ்டம் வந்தது. நானே எடுத்தேன். இது உண்மை.''

மற்றவர்கள் நம்ப மறுத்தார்கள். அரசன் நம்பினுன். ''இந்த மனிதன் சொல்வது உண்மை. ஆண்டவன் அருள் இருந்தால் இமை மூடித் திறக்கு முன்னதாகச் சம்பத்து வந்து சேரும். இதே மனிதன் சந்தைக்கு வந்து பொற்கிழி வைத்திருந்தபோது நோயாளியாகவும், உடுத்த ஆடை போதுமானதாகவும் இல்லாதபடி இருந்தவன் நான். யாருக்குக் கடவுள் நம்பிக்கை உண்டோ அவனுக்குச் செல்வம் கிடைக்கும்'' என்று அரசர் தீர்ப்புக் கூறினுர்.

காவலாளிகள் அரசனைப் பார்த்தார்கள்.

''அவரை விட்டு விடுங்கள். யாருக்குக் கடவுள் நம்பிக்கை இல்லையோ அவருக்குத்தான் நூறு மொகராக்களும் கிடைக்கவேண்டுமென்று ஆதியில் யார் ஏற்பாடு செய்தாரோ அவருக்கே கிடைத்திருக்கின்றன! எனவே நாஸ்திகனை விட்டுவிடுங்கள்'' என்ருர் அரசர்.

**அறுமுகன் :**

முருகு என்பதின் அடியொற்றிப் பிறந்த சொல் முருகன. முருகு—அழகு, இளமை, தேன், நறுமணம், கடவுள் தன்மை என்னும் பொருள்களைத் தன்னகத்தே கொண்ட சொல். அழியாத அழகு, மாருத இளமை, திகட்டாத தேன், மறையாத நறுமணம் போன்ற பரிபூர்ணக் கடவுள் தன்மை பொருந்தியவன் முருகன்.

முருகன் வேறு, சிவன் வேறு அல்லர். சிவனே முருகனுக அவதாரம் செய்தார்.

சூரபதுமனை—அவனது கொடுமைகளை நீக்கச் சிவபிரானை வேண்டினுர்கள் தேவர்கள்.

''ஓர் குமரன் தன்னை நீதரல் வேண்டும்'' —இது முதல் வேண்டுகோள். அடுத்து அந்தக் குமரன் எப்படி இருக்க வேண்டுமென்று நிபந்தனை போடுகிருர்கள்.

நின்பால் நின்னையே நிகர்க்க, சிவபிரானுக்கு ஈடு இணையுள்ள தன்மையுடன் ஒரு குமாரனை வேண்டினுர்கள் என்பது கந்த புராணப் பாடல்!

சிவபிரானுக்கும் முருகனுக்கும் பேதம் உண்டா? இக் கேள்விக்குக் கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள்,

''ஈசனே அவனு டலால்
மதலை யாகினன் காண்
பேசில் ஆங்கவன்
பரனெடு பேதகன் அல்லன்''

முருகன்—சிவனின் மறு உருவம் என்பது பக்தர்கள் முடிந்த முடிவு.

சிவனுக்கு ஐந்து முகங்கள். முருகனுக்கு ஆறுமுகம். சிவத்துக்கு உண்டான ஐந்து முகமும், சக்திக்குரிய ஒரு முகத்தையும் சேர்த்து ஆறுமுகம் என்று விளக்கம் கூறுவார் உண்டு.

இதுவும் தவிர, நான்கு திசைகளையும், மேலும் கீழும் ஆன திசைகளையும் உணர்த்துவது போன்று ஆறுமுகமாகக் காட்சி தருகிருன் பெம்மான் மகன் முருகன் என்பது மற்ருெரு விளக்கம்.

முருகனுடைய ஆறுமுகங்களுக்கும் ஆறு தன்மைகள் உண்டென்று திருமுருகாற்றுப்படை பேசுகிறது.

உலகத்தின் இருளைப் போக்குவதற்காகப் பிறந்தது, பல கிரணங்களை உடையது முதல் முகம்.

அன்பர்கள் துதித்தால், அவர்கள் குற்றங்களை நீக்கி, குணங்களை அருள் பாலிப்பது அடுத்த முகம்.

மந்திரங்களின் விதியறிந்து ஓதும் மறையவர் வேள்வியைக் காப்பது மூன்றும் முகம்.

வேதாகமங்களில் மறைந்து கிடக்கும் பொருள்களை ரிஷிகள் உரையாடி மகிழும்போது சந்திரனைப் போலக் குளுமையுடன் அருள்பாலிக்கும் நான்காம் முகம்.

பகைவர்களான அசுரர்கள், அசுரத்தன்மைகளைப் போக்கிச் சமத்துவத்தை வேள்வி வல்ல அருள் முகம் ஐந்தாவது முகம்.

ஆறுவது முகம், வள்ளிநாயகியைப் பார்த்துத் தாழ்ந்தவருக்கும் உயர்ந்த நோக்கம் தரவல்லது.

இந்த ஆறுமுகத்தின் இயல்புகளைத் திருமுருகாற்றுப்படையில் பார்க்கலாம்.

மாயிருள் ஞாலம்
 மறுவின்றி விளங்கப்
பல் கதிர் விரித்தன்று
 ஒருமுகம்; ஒருமுகம்
ஆர் வலர் ஒத்த
 அமர்ந்தினிது ஒழுகிக்
காதலி னுவந்து வரங்
 கொடுத் தன் றே; ஒருமுகம்
மந் திர விதியின் மரபுளி
 வழா அது
அந்த ணர் வேள்வி
 ஓர்க்கும் மே; ஒருமுகம்
எஞ்சிய பொருள்களை
 ஏ முற நாடித்
திங்கள் போலத்
 திசைவிளக் கும்மே; ஒருமுகம்
செறுநர்த் தேய்த்துச்
 செல் சம முருக்கிக்
கறுவு கொள் நெஞ்ச மொடு
 களம் வேட்டன்றே; ஒருமுகம்
குறவர் மடமகள்
 கொடி போல் நுசுப்பின்
மட வரல் வள்ளி யொடு
 நகை அமர்ந்தன்றே !

— நக்கீரர்.



இராமேசுவரம் அருள்திரு இராமநாதசுவாமி திருக்கோயிலின் குடமுழுக்கு விழாவின்போது சுவாமிக்கு அணிவிக்கும் அணிகலன்களை மதுரைத் துணை ஆணையர் ம. அ. முருகேசன் பார்வையிடுகிறார். உடன், நிர்வாக எஸ். பி. முனுசாமி, வைரநிபுணர் இராதாகிருஷ்ணன் ஆகியோர்.

# திருப்புகழ் அமிழ்தம்

[செந்தமிழ்ப் பெருந் தெய்வம் எனத் திகழும் முருகன் அடியார்களுள் தலைசிறந்த ஒருவர் அருணகிரிநாதர். **''வாக்கிற்கு அருணகிரி''** எனப் புகழ்ந்து போற்றப்படும் சிறப்புடையவர், அருணகிரிநாதர்! அவர் இற்றைக்கு **600** ஆண்டுகளுக்கு முன்னர்த் தோன்றியருளினர். அவர்தம் **600 ஆம் ஆண்டு விழா**, இவ்வாண்டு முழுவதும் நாடெங்கணும் சிறப்புற நடைபெற இருக்கின்றது. அதனை முன்னிட்டு, அவர்தம் திருப்புகழ்ப் பாடல்களிற் **சிறந்த இனிய சிறுசிறு பாடல்கள்** மட்டும், இங்குத் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. அன்பர்கள் இவற்றை மனப்பாடம் செய்து கொண்டு, ஓதி மகிழ்ந்து உய்யலாம். —ஆசிரியர்.]

விநாயகர் துதி:

உம்பர்தருத் தேனுமணிக் கசிவாகி
    ஒண்கடலிற் றேனமுதத் துணர்வூறி
இன்பரசத் தேபருகிப் பலகாலும்
    என்றனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பிதனக் காகவனத் தணைவோனே
    தந்தைவலத் தாலருள்கைக் கனியோனே
அன்பர்தமக் கானநிலைப் பொருளோனே
    ஐந்துகரத் தானைமுகப் பெருமாளே. (1)

திருப்பரங்குன்றம்:

சந்ததம் பந்தத் தொடராலே
    சஞ்சலந் துஞ்சித் திரியாதே
கந்தனென் றென்றுற் றுனைநாளும்
    கண்டுகொண் டன்புற் றிடுவேனோ
தந்தியின் கொம்பைப் புணர்வோனே
    சங்கரன் பங்கிற் சிவைபாலா
செந்திலங் கண்டிக் கதிர்வேலா
    தென்பரங் குன்றிற் பெருமாளே. (2)

திருச்செந்தூர்:

இயலிசையி லுசித வஞ்சிக் கயர்வாகி
    இரவுபகல் மனது சிந்தித் துழலாதே
உயர்கருணை புரியு மின்பக் கடல்மூழ்கி
    உனையெனது ளறியு மன்பைத் தருவாயே
மயில் தகர்க லிடைய ரந்தத் தினைகாவல்
    வனசகுற மகளை வந்தித் தணைவோனே
கயிலைமலை யனைய செந்திற் பதிவாழ்வே
    கரிமுகவ னிளைய கந்தப் பெருமாளே. (3)

வரியார் கருங்கண் மடமாதர்
    மகவாசை தொந்த மதுவாகி
இருபோது நைந்து மெலியாதே
    இருதாளி னன்பு தருவாயே
பரிபால னஞ்செய் தருள்வோனே
    பரமேசு ரன்ற னருள்பாலா
அரிகேச வன்றன் மருகோனே
    அலைவா யமர்ந்த பெருமாளே. (4)

திருவாவினன்குடி:

அபகார நிந்தைபட் டுழலாதே
    அறியாத வஞ்சரைக் குறியாதே
உபதேச மந்திரப் பொருளாலே
    உனைநான் நினைந்தருட் பெறுவேனோ
இபமாமு கன்தனக் கிளையோனே
    இமவான்ம டந்தையுத் தமிபாலா
செபமாலை தந்தசற் குருநாதா
    திருவாவி னன்குடிப் பெருமாளே. (5)

உலகபசு பாச தொந்த மதுவான
    உறவுகிளை தாயர் தந்தை மனைபாலர்
மலசலசு வாச சஞ்ச லமதாலென்
    மதிநிலைகெ டாமலுன்ற னருள்தாராய்
சலமறுகு பூளை தும்பை யணிசேயே
    சரவணப வாமு குந்தன் மருகோனே
பலகலைசி வாக மங்கள் பயில்வோனே
    பழநிமலை வாழ வந்த பெருமாளே. (6)

அருத்தி வாழ்வொடு தனகிய மனைவியு முறவோரும்
    அடுத்தபேர்களு மிதமுறுமகவொடு வளநாடும்
தரித்த வூருமெ யெனமன நினைவது நினையாதுன்
    தனைப்ப ராவியும் வழிபடுதொழிலது தருவாயே
எருத்தி லேறிய இறையவர் செவிபுக வுபதேசம்
    இசைத்த நாவின இதணுறுகுறமக ளிருபாதம்
பரித்த சேகர மகபதி தரவரு தெய்வயானை
    பதிக்கொ ளாறிருபுயபழ நியிலுறை பெருமாளே. (7)

ஒரு பொழுது மிருசரண நேசத் தேவைத் துணரேனே
    உனதுபழ நிமலையெனு மூரைச் சேவித் தறியேனே
பெருபுவியி லுயர்வரிய வாழ்வைத் தீரக் குறியேனே
    பிறவியற நினைகுவனெ னாசைப்பாடைத் தவிரேனோ
துரிதமிடு நிருதர்புர சூறைக் காரப் பெருமாளே
    தொழுதுவழி படுமடியர் காவற் காரப் பெருமாளே
விருதுகவி விதரணவி நோதக்கா ரப்பெருமாளே
    விறன்மறவர் சிறுமிதிருவேளைக்காரப் பெருமாளே. (8)

திடமிலிசற் குணமிலிநற் றிறமிலியற் புதமான
    செயலிலிமெய்த் தவமிலிநற் செபமிலிசொர்க் கமுமீதே
இடமிலிகைக் கொடையிலி சொற் கியல்பிலிநற் றமிழ்பாட
    இருபதமுற் றிருவினையற் றியல்கதியைப் பெறவேணும்
கெடுமதியுற் றிடுமசுரக் கிளைமடியப் பொரும்வேலா
    கிரணகுறைப் பிறையறுகக்கிதழ்மலர்கொக் கிறகோடே
படர்சடையிற் புனைநடனப் பரமர்தமக் கொருபாலா
    கலவயலிற் றரளநிறைப் பழநிமலைப் பெருமாளே. (9)

வசனமிக வேற்றி மறவாதே
    மனதுதுய ராற்றி லுழலாதே
இசைபயில்ச டாக்ஷ ரமதாலே
    இகபரசௌ பாக்யம் அருள்வாயே
பசுபதிசி வாக்ய முணர்வோனே
    பழநிமலை வீற்ற ருளும்வேலா
அசுரர்கிளை வாட்டி மிகவாழ
    அமரர்சிறை மீட்ட பெருமாளே. (10)

வரதா மணிநீ யெனவோரில்
    வருகா தெதுதா னதில்வாரா
திரதா திகளால் நவலோகம்
    இடவே கரியா மிதிலேது
சரதா மிறையோ தயன்மாலும்
    சகலா கமநூ லறியாத
பரதே வதையாள் தருசேயே
    பழநா புரிவாழ் பெருமாளே. (11)

திருவேரகம்:

காமியத் தழுந்தி யிளையாதே
    காலர்கைப் படிந்து மடியாதே
ஓமெழுத்தி லன்பு மிகவூறி
    ஓவியத்தி லந்த மருள்வாயே
தூமமெய்க் கணிந்த சுகலீலா
    சூரனைக் கடிந்த கதிர்வேலா
ஏமவெற் புயர்ந்த மயில்வீரா
    ஏரகத் தமர்ந்த பெருமாளே. (12)

நிறைமதி முகமெனு மொளியாலே
நெறிவிழி கணையெனு நிகராலே
உறவுகொள் மடவர்க ளுறவாமோ
உனதிரு வடியினி யருள்வாயே
மறைபயி லரிதிரு மருகோனே
மருவல ரசுரர்கள் குலகாலா
குறமகள் தனைமண மருள்வோனே
குருமலை மருவிய பெருமாளே. (13)

## இரசதகிரி:

புமியதனிற் ப்ரபுவான; புகலியிற்வித் தகர்போல
அமிர்தகவித் தொடைபாட; அடிமைதனக் கருள்வாயே
சமரிலெதிர்த் தசுர்மாளத்; தனியயில்விட் டருள்வோனே
நமசிவயப் பொருளானே; ரசதகிரிப் பெருமாளே. (14)

## திருத்தணிகை:

நினைத்த தெத்தனையிற் றவறாமல்
நிலைத்த புத்திதனைப் பிரியாமற்
கனத்த தத்துவமுற் றழியாமற்
கதித்த நித்தியசித் தருள்வாயே
மனித்தர் பத்தர்தமக் கெளியோனே
மதித்த முத்தமிழிற் பெரியோனே
செனித்த புத்திரரிற் சிறியோனே
திருத்த ணிப்பதியிற் பெருமாளே. (15)

## திருக்கழுக்குன்றம்:

வேத வெற்பி லேபு னத்தில் மேவி நிற்கும் அபிராம
வேடு வச்சி பாத பத்ம மீது செச்சை முடிதோய
ஆத ரித்து வேளை புக்க ஆறி ரட்டி புயநேய
ஆத ரத்தொ டாத ரிக்க ஆன புத்தி புகல்வாயே
காது முக்ர வீர பத்ர காளி வெட்க மகுடாமா
காச முட்ட விசி விட்ட காலர் பத்தி யிமையோரை
ஓது வித்த நாதர் கற்க வோது வித்த முனிநாண
ஓரெழுத்தி லாறெ ழுத்தை யோது வித்த பெருமாளே
(16)

## திருச்சிராப்பள்ளி:

பகலிரவினிற் றடுமாறு; பதிகுருவெனத் தெளிபோத
ரகசியமுரைத் தநுபூதி; ரதநிலைதனைத் தருவாயே
இகபரமதற் கிறையோனே; இயலிசையின் முத்தமிழோனே
சகசிரகிரிப் பதிவேளே; சரவணபவப் பெருமாளே. (17)

## இரத்தினகிரி:

பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே. (18)

## குன்றக்குடி:

தவள மதிய மெறிக்குந் தணலாலே
சரச மதனன் விடுக்குங் கணையாலே
கவன மிகவு முரைக்குங் குயிலாலே
கருதி மிகவு மயக்கம் படவோ நான்
பவள நிகரு மிதழ்ப்பைங் குறமானின்
பரிய வரையை நிகர்க்குந் தனமேவுந்
திவளு மணிகள் கிடக்குந் திருமார்பா
திகழு மயிலின் மலைக்கண் பெருமாளே. (19)

## திருச்செங்கோடு:

காலனிடத் தணுகாதே; காசியினிற் பிறவாதே
சீலஅகத் தியஞான; தேனமுதைத் தருவாயே
மாலயனுக் கரியானே; மாதவரைப் பிரியானே
நாலுமறைப் பொருளானே; நாககிரிப் பெருமாளே. (20)

## வள்ளியூர்:

அல்லில் நேருமி னதுதானும்
அல்ல தாகிய உடல்மாயை
கல்லி னேரஅ வழிதோறுங்
கையு நானுமு லையலாமோ
சொல்லி நேர்படு முதுசூரர்
தொய்ய வூர்கெட விடும்வேலா
வல்லி மாரிரு புறமாக
வள்ளி யூருறை பெருமாளே. (21)

## கதிர்காமம்:

எதிரிலாத பத்தி தனைமேவி
இனிய தாள்நி னைப்பை யிருபோதும்
இதய வாரி திக்கு ளுறவாகி
எனது ளேசி றக்க அருள்வாயே
கதிர காம வெற்பி லுறைவோனே
கனக மேரு வொத்த புயவீரா
மதுர வாணி யுற்ற கழலோனே
வழுதி கூனி மிர்த்த பெருமாளே. (22)

மாதர்வச மாயுற் றுழல்வாரும்
மாதவமெ ணுமைற் றிரிவாரும்
தீதகல வோதிப் பணியாரும்
தீநரக மீதிற் றிகழ்வாரே
நாதவொளி யேநற் குணசீலா
நாரியிரு வோரைப் புணர்வேலா
சோதிசிவ ஞானக் குமரேசா
தோமில்கதிர் காமப் பெருமாளே. (23)

## பழமுதிர்சோலை:

காரணம தாக வந்து புவிமீதே
காலனணு காதி சைந்து கதிகாண
நாரணனும் வேதன் முன்பு தெரியாத
ஞானநட மேபு ரிந்து வருவாயே
ஆரமுத மான தந்தி மணவாளா
ஆறுமுக மாறி ரண்டு விழியோனே
சூரர்கிளை மாள வென்ற கதிர்வேலா
சோலைமலை மேவி நின்ற பெருமாளே. (24)

## ஆறு திருப்பதி:

ஈனமிகுத் துளபிறவி யணுகாதே
யானுமுனக் கடிமையென வகையாக
மான அருட் டனையருளி வினைதீர
நாணமகற் றியகருணை புரிவாயே
தானதவத் தினின்மிகுதி பெறுவோனே
சாரதியுத் தமிதுணைவ முருகோனே
ஆனதிருப் பதிகமரு ளிளையோனே
ஆறுதிருப் பதியில்வளர் பெருமாளே. (25)

## காஞ்சிபுரம்:

அற்றைக் கிரைதேடி—அந்தத் திலுமாசை;
பற்றித் தவியாத—பற்றைப் பெறுவேனோ;
வெற்றிக் கதிர்வேலா—வெற்பைத் தொளைசீலா;
கற்றுற் றுணர்போதா—கச்சிப் பெருமாளே. (26)

முட்டுப் பட்டுக் கதிதோறும்—
முற்றச் சுற்றிப் பலநாளும்;
தட்டுப் பட்டுச் சுழல்வேனைச்
சற்றுப் பற்றக் கருதாதோ;
வட்டப் புட்பத் தலமீதே—
வைக்கத் தக்கத் திருபாதா;
கட்டத் தற்றத் தருள்வோனே—
கச்சிச் சொக்கப் பெருமாளே. (27)

கோவைச் சுத்தத் துப்பத ரத்துக் கொடியார்தங்—
கோலக் கச்சுக் கட்டிய முத்தத் தனமேவிப்;
பாவத்துக்குத் தக்கவை பற்றித் திரியாதே—
பாடப் பத்திச் சித்த மெனக்குத் தரவேணும்;
மாவைக் குத்திக் கைத்தற எற்றிப் பொரும்வேலா—
மாணிக் கச்சொர்க் கத்தொரு தத்தைக் கினியோனே;
சேவற் பொற்கைக் கொற்றவ கச்சிப் பதியோனே—
தேவச் சொர்க்கச் சக்கிர வர்த்திப் பெருமாளே. (28)

## திருவானைக்கா:

நாடித் தேடித் தொழுவோர்பால்—
நானத் தாகத் திரிவேனோ;
மாடக் கூடற் பதிஞான—
வாழ்வைச் சேரத் தருவாயே;
பாடற் காதற் புரிவோனே—
பாலைத் தேனொத் தருள்வோனே;
ஆடற் றோகைக் கினியோனே—
ஆனைக் காவிற் பெருமாளே. (29)

## திருவண்ணாமலை:

இமராஜனி லாவதெ றிக்குங் கனலாலே—
இளவாடையு மூருமொ றுக்கும் படியாலே;
சமராகிய மாரனெ டுக்குங் கணையாலே
தனிமானுயிர் சோரும் தற்கொன் றருள்வாயே;

குமராமுரு காசடி லத்தன் குருநாதா—
குறமாமக ளாசைத ணிக்குந் திருமார்பா;
அமராவதி வாழ்வம ரர்க்கன் றருள்வோனே—
அருணாபுரி வீதியி னிற்கும் பெருமாளே. (30)

இரவு பகற் பலகாலும்—இயலிசைமுத் தமிழ்கூறித்;
திரமதனைத் தெளிவாகத்—திருவருளைத் தருவாயே;
பரகருணைப் பெருவாழ்வே—பரசிவதத் துவஞானா;
அரனருள்சற் புதல்வோனே—அருணகிரிப் பெருமாளே.(31)

கடல்பரவு தரங்க மீதெழு திங்களாலே
கருதிமிக மடந்தை மார்சொல்வ தந்தியாலே;
வடவனலை முனிந்து வீசிய தென்றலாலே—
வயலருணையில் வஞ்சி போதந லங்கலாமோ;
இடமுமையை மணந்த நாதரி றைஞ்சும்வீரா
எழுகிரிகள் பிறந்து வீழஎ றிந்தவேலா;
அடலசுரர் கலங்கி யோடமு னிந்தகோவே—
அரிபிரம புரந்த ராதியர் தம்பிரானே. (32)

கீத விநோத மெச்சு குரலாலே—
கீறு மையார் முடித்த குழலாலே;
நீதியிலாத ழித்து முழலாதே—
நீமயி லேறி யுற்று வரவேணும்;
சூதமர் சூர ருட்க பொருசூரா
சோண கிரியி லுற்ற குமரேசா;
ஆதியர் காதொ ருச்சொ லருள்வோனே—
ஆனைமுகார் கனிட்ட பெருமாளே. (33)

கோடான மடவார்கள் முலைமீதே—
கூர்வேலை யிணையான விழியூடே;
ஊடாடி யவரோடு முழலாதே;
ஊராக திகழ்பாத மருள்வாயே;
நீடாழி சுழல்தேசம் வலமாக—
நீடோடி மயில்மீது வருவோனே;
சூடான தொருசோதி மலைமேவு—
சோணாடு புகழ்தேவர் பெருமாளே. (34)

பாண மலரது தைக்கும் படியாலே—
பாவி யிளமதி கக்குங் கனலாலே;
நாண மழிய வுரைக்குங் குயிலாலே—
நானு மயலி லிளைக்குந் தரமோதான்;
சேணி லரிவை யணைக்குந் திருமார்பா—
தேவர் மகுட மணக்குங் கழல்வீரா;
காண அருணையில் நிற்குங் கதிர்வேலா—
காலன் முதுகை விரிக்கும் பெருமாளே. (35

## திருக்காளத்தி:

சிரத்தா னத்திற் பணியாதே—
செகத்தோர் பற்றைக் குறியாதே;
வருத்தா மற்றொப் பிலதான—
மலர்த்தாள் வைத்தெத் தனையாள்வாய்:
நிருத்தா கர்த்தத் துவநேசா—
நினைத்தார் சித்தத் துறைவோனே;
திருத்தாள் முத்தர்க் கருள்வோனே—
திருக்கா ளத்திப் பெருமாளே. (36)

## சிதம்பரம்:

இருவினையின் மதிமயங்கித் திரியாதே—
எழுநரகி லுழலு. நெஞ்சுற் றலையாதே;
பரமகுரு அருள்நி னைந்திட் டுணர்வாலே;
பரவுதரி சனையை யென்றெற் கருள்வாயே;
தெரிதமிழை யுதவு சங்கப் புலவோனே—
சிவனருளு முருக செம்பொற் கழலோனே
கருணைநெறி புரியு மன்பர்க் கெளியோனே—
கனகசபை மருவு கந்தப் பெருமாளே. (37)

செங்கலச முலையார்பால்—சிந்தைபல தடுமாறி;
அங்கமிக மெலியாதே—அன்புருக அருள்வாயே;
செங்கைபிடி கொடியோனே—செஞ்சொல்தெரி புலவோனே;
மங்கையுமை தருசேயே—மன்றுள்வளர் பெருமாளே. (38)

## காசி:

வேழ முண்ட விளாங்கனி யதுபோல—
மேனி கொண்டு வியாபக மயலூறி;
நாளு மிண்டர்கள் போல்மிக அயர்வாகி—
நானு நைந்து விடாதருள் புரிவாயே;
மாள அன்றம ணீசர்கள் கழுவேற—
வாதில் வென்ற சிகாமணி மயில்வீரா;
காள கண்ட னுமாபதி தருபாலா—
காசி கங்கையில் மேவிய பெருமாளே. (39)

## மாயாபுரி:

சிகர மருந்த வாழ்வது சிவஞானம்;
சிதறி யலைந்து போவது செயலாசை;
மகர நெருங்க வீழ்வது மகமாய;
மருவி நினைந்தி டாவருள் புரிவாயே;
அகர நெருங்கி னுமய முறவாகி—
அவச மொடுங் கை யாறொடு முனமேகிக்;
ககன மிசைந்த சூரியர் புக மாயை
கருணை பொழிந்து மேவிய பெருமாளே. (40)

## திருவலிதாயம்:

மருமல்லி யார்குழலின் மடமாதர்
மருளுள்ளி நாயடிய னலையாமல்—
இருநல்ல வாகுமுன தடிபேண—
இனவல்ல மானமன தருளாயோ;
கருநெல்லி மேனியரி மருகோனே—
கனவள்ளி யார்கணவ முருகேசா;
திருவல்லி தாயமதி லுறைவோனே—
திகழ்வல்ல மாதவர்கள் பெருமாளே. (41)

## திருமயிலை:

அயிலொத் தெழுமிரு விழியாலே—
அமுதொத் திடுமரு மொழியாலே;
சயிலத் தெழுதுணை முலையாலே—
தடையுற் றடியனு மடிவேனோ;
கயிலைப் பதியரன் முருகோனே—
கடலக் கரைதிரை யருகேசூழ்;
மயிலைப் பதிதனி லுறைவோனே—
மகிமைக் கடியவர் பெருமாளே. (42)

அறமி லாவதி பாதக வஞ்சத் தொழிலாலே—
அடிய னேன்மெலி வாகிம னஞ்சற் றினையாதே;
திறல்கு லாவிய சேவடி வந்தித் தருள்கூடத்—
தினமு மேமிக வாழ்வுறு மின்பைத் தருவாயே;
விறல்நி சாசரர் சேனைக ளஞ்சப் பொரும்வேலா—
விமல மாதபி ராமித ருஞ்செய்ப் புதல்வோனே;
மறவர் வாணுதல் வேடைகொ ளும்பொற் புயவீரா—
மயிலை மாநகர் மேவிய கந்தப் பெருமாளே. (43)

## கோடைநகர்:

ஞால மெங்கும் வளைத்த ரற்று கடலாலே—
நாளும் வஞ்சி யருற்று ரைக்கும் வசையாலே;
ஆல முந்து மதித்த ழற்கும் அழியாதே—
ஆறி ரண்டு புயத்த ணைக்க வருவாயே;
கோல மொன்று குறத்தி யைத்த ழுவுமார்பா—
கோடை யம்பதி யுற்றுநிற்கு மயில்வீரா;
கால னஞ்ச வரைத்தொ ளைத்த முதல்வானோர்—
கால்வி லங்கு களைத்த றித்த பெருமாளே. (44)

## திருவாமூர்:

சீத மதிய மெறிக்குந் தழலாலே—
சீறி மதனன் வளைக்குஞ் சிலையாலே;
ஓத மருவி யலைக்குங் கடலாலே—
ஊழி யிரவு தொலைக்கும் படியோதான்;
மாது புகழை வளர்க்குந் திருவாமூர்—
வாழு மயிலி லிருக்குங் குமரேசா;
காத லடியர் கருத்தின் பெருவாழ்வே—
காலன் முதுகை விரிக்கும் பெருமாளே. (45)

## சீர்காழி:

சிந்துற்றெழு மாமதி அங்கித் திரளாலே—
தென்றற் றரு வாசமி குந்துற் றெழலாலே;
அந்திப் பொழு தாகிய கங்குற் றிரளாலே—
அன்புற்றெழு பேதைம யங்கித் தனியானாள்;
நந்துற்றிடு வாரியை மங்கத் திகழாயே—
நஞ்சொத்தொளிர் வேலினை யுந்திப் பொருவேளே;
சந்தக்கவி நூலினர் தஞ்சொற் கினியோனே—
சண்பைப்பதி மேவிய கந்தப் பெருமாளே. (46)

## வைத்தீசுவரன் கோயில்:

உரத்துறை போதத் தனியான
உனைச்சிறி தோதத் தெரியாது;
மரத்துறை போலுற் றடியேனும்—
மலத்திருள் மூடிக் கெடலாமோ;
பரத்துறை சீலத் தவர்வாழ்வே—
பணித்தடி வாழ்வுற் றருள்வோனே;
வரத்துறை நீதர்க் கொருசேயே—
வயித்திய நாதப் பெருமாளே. (47)

### திருவிடைக்கழி:

மருக்கு லாவிய மலரணை கொதியாதே—
    வளர்த்த தாய்தமர் வசையது மொழியாதே;
கருக்கு லாவிய அயலவர் பழியாதே—
    கடப்ப மாலையை யினிவர விடவேணும்;
தருக்கு லாவிய கொடியிடை மணவாளா—
    சமர்த்த னேமணி மரகத மயில்வீரா;
திருக்கு ராவடி நிழல்தனி லுறைவோனே—
    திருக்கை வேல்வடி வழகிய பெருமாளே. (48)

### திலதைப்பதி:

இறையத் தனையோ அதுதானும்—
    இலையிட் டுணலேய் தருகாலம்;
அறையிற் பெரிதா மலமாயை—
    அலையப் படுமா றினியாமோ;
மறையத் தனைமா சிறைசாலை—
    வழியுய்த் துயர்வா னுறுதேவர்;
சிறையைத் தவிரா விடும் வேலா—
    திலதைப் பதிவாழ் பெருமாளே.
(49)

### திருவாரூர்:

நீதானெத் தனையாலும்—நீடுழிக் க்ருபையாகி;
மாதானத் தனமாக—மாஞானக் கழல்தாராய்;
வேதாமைத் துனவேளே—வீராசற் குணசீலா;
ஆதாரத் தொளியானே—ஆரூரிற் பெருமாளே. (50)

### எட்டிகுடி:

ஓங்கு மைம்புல னோட நினைத்தின் பயர்வேனை—
    ஓம்பெ றும்ப்ரண வாதி யுரைத்தெந் தனையாள்வாய்;
வாங்கி வெங்கணை சூரர் குலக்கொம் புகடாவி—
    வாங்கி நின்றன ஏவி லுகைக்குங் குமரேசா;
மூங்கி லம்புய வாச மணக்குஞ் சரிமானும்
    மூண்ட பைங்குற மாதும் மணக்குந் திருமார்பா;
காங்கை யங்கறு பாசில் மனத்தன் பர்கள்வாழ்வே—
    காஞ்சி ரங்குடி ஆறு முகத்தெம் பெருமாளே. (51)

### கும்பகோணம்:

பஞ்சுசேர் நிர்த்தப் பதமாதர்—
    பங்கமார் தொக்கிற் படியாமற்;
செஞ்சொல்சேர் சித்ரத் தமிழாலுன்
    செம்பொனூர் வத்தைப் பெறுவேனோ;
பஞ்சபா ணத்தற் பொருதேவர்—
    பங்கில்வாழ் சக்திக் குமரேசா;
குஞ்சரீ வெற்புத் தனநேயா—
    கும்பகோணத்திற் பெருமாளே. (52)

### தஞ்சை:

அஞ்சன வேல்விழி மடமாதர்—
    அங்கவர் மாயையி லலைவேனோ;
விஞ்சுறு மாவுன தடிசேர—
    விம்பம தாயரு ளருளாதோ;
நஞ்சமு தாவுணு மரனூர்தம்
    நன்கும ராவுமை யருள்பாலா;
தஞ்சென வாமடி யவர்வாழத்—
    தஞ்சையில் மேவிய பெருமாளே. (53)

### கருவூர்:

மதியால்வித் தகனாகி—மனதாலுத் தமனாகிப்;
பதிவாகிச் சிவஞான—பரயோகத் தருள்வாயே;
நிதியேநித் தியமேயென்—நினைவேநற் பொருளாயோய்;
கதியேசொற் பரவேளே—கருவூரிற் பெருமாளே. (54)

### திருவெஞ்சமாக்கூடல்:

வண்டுபோற் சாரத் தருள்தேடி—
    மந்திபோற் காலப் பிணிசாடிச்;
செண்டுபோற் பாசத் துடனாடிச்—
    சிந்தைமாய்த் தேசித் தருள்வாயே;
தொண்டராற் காணப் பெறுவோனே—
    துங்கவேற் கானத் துறைவோனே;
மிண்டராற் காணக் கிடையானே—
    வெஞ்சமாக் கூடற் பெருமாளே. (55)

### திருமுருகன்பூண்டி:

அவசிய முன் வேண்டிப் பலகாலும்;
    அறிவினுணர்ந் தாண்டுக் கொருநாளில்;
தவசெபமுந் தீண்டிக் கனிவாகிச்—
    சரணமதும் பூண்டற் கருள்வாயே;
சவதமொடுந் தாண்டித் தகரூர்வாய்;
    சடுசமயங் காண்டற் கரியானே;
சிவகுமரன் பீண்டிற் பெயரானே—
    திருமுருகன் பூண்டிப் பெருமாளே. (56)

### பேரூர்:

தீராப் பிணிதீர—சீவாத் துமஞான;
ஊராட் சியதான—ஓர்வாக் கருள்வாயே;
பாரோர்க் கிறைசேயே பாலாக் கிரிராசே;
பேராற் பெரியோனே பேரூர்ப் பெருமாளே. (57)

### குளந்தைநகர்:

தரங்க வார்குழற் றுநுநுதல் விழியாலம்—
    தகைந்த மாமுலைத் துடியிடை மடமாதர்;
பரந்த மாலிருட் படுகுழி வசமாகிப்—
    பயந்து காலனுக் குயிர்கொடு தவியாமல்;
வரந்த ராவிடிற் பிறரெவர் தருவாரே—
    மகிழ்ந்து தோகையிற் புவிவலம் வருவோனே;
குரும்பை மாமுலைக் குறமகள் மணவாளா—
    குளந்தை மாநகர்த் தளியுறை பெருமாளே. (58)

### திருவாணிகூடல்:

கலைமேவு ஞானப் பிரகாசக்—கடலாடி ஆசைக் கடலேறி;
பலமாய வாதிற் பிறழாதே--பதிஞான வாழ்வைத் தருவாயே;
மலைமேவு மாயக் குறமாதின்—மனமேவு வாலக் குமரேசா;
சிலைவேட சேவற் கொடியோனே—திருவாணி கூடற் பெரு
[மாளே. (59)

நீதத் துவமாகி நேமத் துணையாகிப்;
பூதத் தயவான போதைத் தருவாயே;
நாதத் தொனியோனே—ஞானக் கடலோனே;
கோதற் றமுதானே—கூடற் பெருமாளே. (60)

### திருப்பாண்டிக் கொடுமுடி :

இருவினைப் பிறவிக் கடல்மூழ்கி—
    இடர்கள்பட் டலையப் புகுதாதே;
திருவருட் கருணைப் ப்ரபையாலே—
    திரமெனக் கதியைப் பெறுவேனோ;
அரியயற் கறிதற் கரியானே—
    அடியவர்க் கெளியற் புதநேயா;
குருவெனச் சிவனுக் கருள்போதா—
    கொடுமுடிக் குமரப் பெருமாளே. (61)

**தொடரும்**

# திருக்கச்சூர்த் திருக்கோயில்



திரு. கே. எஸ். நரசிம்மன், B.A., B.L., I.A.S

158604

தேவாரத் திருப்பாடல் பெற்றதொண்டை நாட்டுச் சிவத்தலங்களுள், திருக்கச்சூர்க் கோயில் ஒன்று. இது 'கச்சூர் ஆலக்கோயில்' எனத் தேவாரப் பாடல்களில் குறிக்கப்பெற்று உள்ளது. இந்தத் தலம் செங்கற்பட்டுக்கு அருகேயுள்ள சிங்கப்பெருமாள் கோயில் இருப்புப் பாதை நிலையத்திலிருந்து, வடமேற்கே ஒரு கல் தொலைவில் உள்ளது. செங்கற்பட்டில் இருந்து திருவள்ளூருக்குச் செல்லும் உந்தூர்திகள், திருக்கச்சூர் வழியாகச் செல்கின்றன.

இங்கு மலைமேல் ஒரு கோயிலும், ஊரின் நடுவே ஒரு கோயிலும் ஆக, இரண்டு கோயில்கள் அமைந்துள்ளன. மலைமேல் உள்ள கோயிலில் எழுந்தருளியிருக்கும் சுவாமிக்கு மருந்தீசுவரர் என்றும், அம்பிகைக்கு இருள் நீக்கித் தாயார் என்றும் பெயர்கள் வழங்குகின்றன. தேவ மருத்துவர்கள் ஆகிய அசுவினி தேவர்கள், ஒரு சமயம் தேவேந்திரனுக்கு உற்ற ஒரு பிணியைத் தீர்ப்பதற்காக, இங்கு வந்து இறைவனை வழிபட்டு, இங்குள்ள மலையில் இருந்த மூலிகை மருந்துகளை, இறைவனின் அருளால் கிடைக்கப் பெற்றனர். அதனாலேயே சுவாமிக்கு மலைமருந்தீசர் என்று பெயர் ஏற்பட்டது என்பது தல வரலாறு.

''மேலை விதியே வினையின் பயனே
 விரவார்புரம் மூன்று எரிசெய்தாய்!
காலை எழுந்து தொழுவார் தங்கள்
 கவலை களைவாய் கறைக்கண்டா!
மாலை மதியே! மலைமேல் மருந்தே!
 மறவேன் அடியேன்; வயல்சூழ்ந்த
ஆலைக் கழனிப் பழனக் கச்சூர்
 ஆலக் கோயில் அம்மானே''

எனவரும் சுந்தரர் தேவாரப் பாடலில், ''மலைமேல் மருந்து'' என்னும் பெயர், இத்தல வரலாற்றை யுணர்த்தும் குறிப்பாக அமைந்திருத்தல் காணலாம். இம்மலைக்கோயில் சிறியதாக இருந்தாலும், அழகும் சிறப்பும் உடையதாகத் திகழ்கின்றது.

ஊர் நடுவேயுள்ள கோயில் தியாகராச சுவாமி கோயில் என வழங்குகின்றது. தியாகராச சுவாமி என்பது, இக்கோயிலின் உற்சவ மூர்த்திக்குப் பெயர். சுந்தரரின் தேவாரப் பாடல் பெற்ற தலமாதல் பற்றி, அவருக்கு மிகவும் விருப்பமான திருவாரூர்த் தலத்தில், சோமாஸ்கந்த வடிவத்தில் விளங்குகின்ற தியாகராச சுவாமியே, இங்கும் உற்சவமூர்த்தியாக வைத்து வழிபடப்பெற்று வருகின்றார் எனத் தெரிகின்றது. இக்கோயிலில் மூலத்தானத்தில் உள்ள பெருமான் கச்சபேசுவரர் என வழங்கப் படுகின்றார். தேவர்களும் அசுரர்களும் அமிழ்தம் பெறுவதற்கு விரும்பித் திருப்பாற்கடலைக் கடைந்தபொழுது, மந்தர மலையாகிய மத்து அசையாமல் நிற்கும்பொருட்டுத் திருமால் ஆமையாக வடிவம் எடுத்து, அதனைத்தாங்கினார் என்பது வரலாறு. அங்ஙனம் கச்சபம் என்னும் ஆமை வடிவம் எடுத்த திருமால், இங்குவழிபட்ட காரணத்தினால், இங்குள்ள பெருமானுக்குக் கச்சபேசுவரர் எனப் பெயர் அமைந்தது. இங்கு உள்ள அம்பிகை அஞ்சனாட்சி எனப் போற்றப் பெறுகின்றாள். இக்கோயிலும் பல சந்நிதிகளுடன், நல்ல அமைதியான சூழ்நிலையில் அழகுற அமைந்து திகழ்கின்றது. மலைமேல் மருந்தீசுவரர் விளங்குவதுபோல், இங்கு இரந்தீசுவரர் என்றும், விருந்தீசுவரர் என்றும் இரு பெயர் கொண்டு, சிவபிரான் விளங்குகின்றார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் இத்தலத்திற்கு வந்து தரிசனம் செய்தபொழுது, நண்பகல் நேரமாக இருந்தது. வழி நடந்து வந்ததனால், அவர் பசியாலும் களைப்பாலும் சோர்வுற்று வருந்தினார். அது கண்ட சிவபெருமான், மனித வடிவம் கொண்டு, அவ்வூரில் உள்ள வீடுகள் தோறும் சென்று இரந்து பிச்சை ஏற்று உணவெடுத்து வந்து, சுந்தரருக்கு உணவு கொடுத்து விருந்தளித்தார். அவ்வரலாற்றை யுணர்த்தும் முறையிலேயே, இரந்தீசுவரர், விருந்தீசுவரர் எனச் சிவபெருமான் இங்கு இரு வடிவங்கள் கொண்டு திகழ்கின்றார். இவ்வரலாற்றுக் குறிப்பும்,

''கச்சேர் அரவொன் றரையில் அசைத்துக்
 கழலும் சிலம்பும் கலிக்கப் பலிக்கென்று
உச்சம் போதா ஊர்ஊர் திரியக்
 கண்டால் அடியார் உருகாரே?''

எனவரும் சுந்தரர் தேவாரத் திருப்பாடலில் அமைந்திருத்தல், அறிந்து இன்புறுதற்குரியது.

''படியிலா நின்பாட்டில் ஆரூர!
 நனிவிருப்பன் பரமன் என்பது
அடியேனேன் அறிந்தனன்; வான் தொழும் ஈசன்
 நினைத்தடுத்தாட் கொண்டும், அன்றித்
தொடியுலாம் மென்கைமட மாதர்பால்
 நினக்காகத் தூது சென்றும்,
மிடியிலா மனைகள்தொறும் இரந்திட்டும்
 உழன்றமையால் விளங்குமாறே''

என்று துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் பாடுதற்கு ஏற்ப, இறைவன் தன் அடியவராகிய சுந்தரர் பொருட்டுப் பிச்சை ஏற்றுழன்று, தன் எளிமையையும் அருட் சிறப்பையும் வெளிப்படுத்திய திருக்கச்சூர்த் தலத்தின் பெருமை அளப்பரியது! அன்பர்கள் திருக்கச்சூருக்குச் சென்று வழிபட்டு, நலம் பலவும் பெற்று மகிழ்வார்களாக!

*

With the best compliments from

# Sri Bhagavathi Textiles Limited,

## CHITTUR.

| | | |
|---|---|---|
| Authorised share capital | Rs. | 1,00,00,000/- |
| Issued and subscribed capital | Rs. | 30,00,000/- |
| Paid-up capital | Rs. | 28,75,800/- |

**ALLOTTED SPINDLES 12.360**

**ESTABLISHED IN KERALA**

**BEST QUALITY YARN**

**SPINNING** 20s, 2/20s, 60s, 2/60s, 80s & 2/80s

(INDIAN AND FOREIGN COTTON)

IN HANKS AND CONES

# இன்றையத் தேவைக்கு இராமலிங்கர் நெறி



தவத்திரு ஊரன் அடிகள்

வள்ளலார் தமது நெறியை, பொதுநெறி, பெருநெறி, ஒளிநெறி, சன்மார்க்கம் என்றெல்லாம் கூறினார். ஒரு நாட்டவர்க்கு, ஒரு சமயத்தவருக்கு, ஒரு சாதியாருக்கு, ஒரு இனத்தவருக்கு என்றில்லாமல் உலக மக்கள் அனைவருக்குமே பொதுவாகப் பொருந்தக் கூடியது ஆதலால் பொது நெறி என்றார். சிலருக்கே உரிய் குறுகிய சிறு நெறியாக இல்லாமல் அனைவருக்கும் உரிய அகன்ற பெரிய நெறியாக இருப்பதால் பெருநெறி என்றார். அந்த நெறியில் செல்வோரது வாழ்க்கையிலே ஒளி வீசச் செய்வதாக இருப்பதால் ஒளிநெறி என்றார். நல்ல நெறி, நன்னெறி என்று பொருள்பட சத்—மார்க்கம், சன்மார்க்கம் என்றார்.

தமிழ்ப் பெரியோர்கள் நான்கு மார்க்கங்களை நமக்குக் காட்டியிருக்கிறார்கள். தாச மார்க்கம்—அடிமை நெறி, இறைவனை ஆண்டானாகக் கொண்டு நாம் அவனுக்கு அடிமையாக இருந்து வழிபடுவது, சற்புத்திர மார்க்கம்—மகன்மை நெறி. இறைவனை அப்பனாகக் கொண்டு நாம் அவனுக்கு மகனாக இருந்து வழிபடுவது. சகமார்க்கம்—தோழமை நெறி. இறைவனுக்கு நாம் தோழனாக இருந்து வழிபடுவது. சன்மார்க்கம்—தலைவன் தலைவி நெறி. நாயக நாயகி பாவம். இறைவனும் நாமும் இரு வேறாக இல்லாமல் ஒன்றாகவே இருப்பது, ஒன்றாகவே ஆகிவிடுவது.

ஆண்டான்—அடிமை, அப்பன்—மகன், ஒத்த இரு நண்பர்கள், தலைவன்—தலைவி இந் நான்கும், நான்கு மார்க்கங்களிலும் நமக்கும் இறைவனுக்குமுள்ள சம்பந்தம். இதை நமது பழைய சாத்திர நூல்களும், தோத்திர நூல்களும் சொல்லுகின்றன.

இந்த நான்கு மார்க்கங்களிலும் மனிதனுக்கு மனிதன் சம்பந்தமென்ன? வள்ளலார் அதைப் புதிதாகச் சொல்லுகிறார்.

(1) எல்லோரையும் தன் அடிமையாகப் பாவிப்பது தாசமார்க்கம்.

(2) எல்லோரையும் தன் மகனாகப் பாவிப்பது சற்புத்திரமார்க்கம்.

(3) எல்லோரையும் தன் நண்பனாகப்பாவிப்பது சகமார்க்கம்.

(4) எல்லோரையும் தன்னைப் போல் பாவிப்பது சன்மார்க்கம்.

ஆண்டவனுக்கும் நமக்குமுள்ள சம்பந்தத்தை மட்டும் காட்டின முன்னைய நூல்கள். அத்தோடு மனிதனுக்கு மனிதன் உள்ள சம்பந்தத்தையும் காட்டுகிறார் வள்ளலார். இது வள்ளலார் செய்த புதுமை.

மனிதன் கடவுளோடு ஒன்றுபடுதல்பழைய சன்மார்க்கம். மனிதன் மனிதனோடு ஒன்று படுவது, மனிதனோடு மட்டுமின்றி எல்லா உயிர்களோடும் ஒன்றுபடுவது. அதன் மூலம் ஆண்டவனோடு ஒன்றுபடுவது புதிய சன்மார்க்கம். இப்புதிய சன்மார்க்கத்திற்கு வள்ளலார் இட்ட பெயர் சமரச சன்மார்க்கம். சமரச சுத்த சன்மார்க்கம். இந்த, சமரச சுத்த சன்மார்க்கத்திலே ஒரே கடவுள், ஒரே சமயம், ஒரே சாதி, ஒரே இனம், சமய ஒருமைப்பாடு, சாதி ஒருமைப்பாடு, நல்ல அரசு, நல்ல ஆட்சி, நல்ல அதிகாரிகள், நல்ல குடிமக்கள், வேற்றுமையுள் ஒற்றுமை காணல், இருப்போர் இல்லாதார்க்கு உதவுதல் ஆகிய பலவற்றையும் அழுத்தந்திருத்தமாக ஆணித்தரமாக வள்ளலார் பாட்டாலும் உரையாலும் பறைசாற்றுகிறார்.

''எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும்
தம்உயிர்போல் எண்ணி உள்ளே
ஒத்துரிமை உடையவராய் உவக்கின்றார்
யாவர், அவர்உளந்தான் சுத்த
சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும்
இடம்எனநான் தெரிந்தேன் அந்த
வித்தகர்தம் அடிக்கேவல் புரிந்திடஎன்
சிந்தைமிக விழைந்த தாலோ''

என்பது வள்ளலார் வாக்கு.

மனித சமுதாயத்தை மதங்களும் சமயங்களும் வேறு பிரிக்கின்றன. சைவம் என்றும். வைணவம் என்றும், கிறிஸ்தவம் என்றும், இஸ்லாம் என்றும், சமணம் என்றும், பௌத்தம் என்றும் பல சமயங்கள். எல்லாச் சமயங்களுமே கடவுளை அடைவதற்கான, பேரின்பம் பெறுவதற்கான வழிகள் தான். ஓர் ஊருக்குப் போவதற்குப் பல வழிகள். ஒரே கடவுளை அடைவதற்குப் பல மார்க்கங்கள், பல மதங்கள், பல சமயங்கள்.

...றது பேரூர் வழி ஆறு அதற்குள் — என்று ஆறு சமயங்களையும் பற்றித் திருமூலர் பாடுகிறார்.

ஆறுகளெல்லாம் முடிவிலே கடலில்சென்று கலப்பது போல, சமயங்களெல்லாம் முடிவிலே ஒரே கடவுளிடத்திலே சென்று கலக்கின்றன.

''பொங்குபல சமயமெனும் நதிகளெல்லாம்
புகுந்து கலந்திட நிறைவாய்ப் பொங்கி ஓங்கும்
கங்குகரை காணாத கடலே''

என்று வள்ளலார் இறைவனைப் பாடுகின்றார்.

தலைவியும் தோழியும் தம்முள் பேசிக் கொள்வதாக வள்ளலார் பாடிய பாடல்கள் பல. அவற்றுள் ஒன்று; தோழி தலைவியைப் பார்த்துக் கேட்கிறாள், அம்பலத்தில் நடம்புரிகிறானே உன் நாயகன், அவன் பேர் என்ன? என்று, அதற்குத் தலைவி சொல்லுகிறாள்.

''பெருகியபேர் அருளுடையார் அம்பலத்தே
நடிக்கும் பெருந்தகை என்
கணவர் திருப்பேர்புகல் என்கின்றாய். அருகர்புத்தர்
ஆதியென்பேன், அயன்
என்பேன், நாராயணன் என்பேன், அரன் என்பேன்,
ஆதிசிவன் என்பேன்,
பருகுசதா சிவன் என்பேன், சத்திசிவம் என்பேன்,
பரமம் என்பேன்,
பிரமம் என்பேன் பரப்பிரமம் என்பேன் துருவுசுத்த
பிரமம் என்பேன்
துரியநிறை வென்பேன் சுத்தசிவம் என்பேன் இவை
சித்துவிளையாட்டே''

அயன், நாராயணன் என்பதெல்லாம் தோழிக்குப் புரிந்தது. அருகர், புத்தர் என்றது அவளுக்குப் புரியவில்லை. அருகர் என்பதும் புத்தர் என்பதும் புறச்சமயப் பேர் ஆயிற்றே? நம் நாயகனார்க்கு அப்பெயர்கள் பொருந்துமோ என்று கேட்கிறாள். அதற்குத் தலைவி சொல்லுகிறாள்.

''சிற்சபையில் நடிக்கின்ற நாயகனார் தமக்குச்
சேர்ந்த புறச்
சமயப்பேர் பொருந்துவதோ என்றாய்? பிறசமயத்
தார்பெயரும்
அவர் பெயரே கண்டாய்! பித்தர் என்றே பெயர்
படைத்தார்க்கு
எப்பெயர்தான் ஒவ்வாதோ? அச்சமயத் தேவர்
மட்டோ? நின்
பெயர்என் பெயரும் அவர்பெயரே, எவ்வுயிரின்
பெயரும் அவர் பெயரே''

என்று பாடுகின்றார்.

இறைவன் பித்தனென்று பெயர் படைத்தவன் அல்லவா? பித்தன் என்று பெயர் படைத்தவனுக்கு வேறு எப்பெயர்தான் ஒவ்வாது? அது மட்டுமா? உன் பெயர், என் பெயர், எல்லா உயிர்களின் பெயர் எல்லாம் அவன் பெயரே என்று தலைவி தோழிக்குக் கூறும் கூற்றாகக் கூறி விளக்குகிறார் வள்ளலார்.

ஈசுவரன் என்பதும், அல்லா என்பதும் தேவரீரின் திருநாமங்கள். ''ஈஸ்வர் அல்லா தேரே நாம்'' என்றார் காந்தியடிகள். அருகர் என்பேன், புத்தர் என்பேன் என்று அன்று பாடிய வள்ளலார் இன்று பாடுவாரேயானால் ''பரமண்டலத்திலுள்ள பிதா என்பேன், அல்லா என்பேன், கிறிஸ்து என்பேன்'' என்று அல்லவா பாடுவார்.

இன்று துறைதோறும் துறைதோறும் சாதி முன்னிற்கிறது. சாதிகளைப் பற்றி வள்ளலார் என்ன கூறினார்.

''சாதியிலே மதங்களிலே சமயநெறி களிலே
சாத்திரச்சந் தடிகளிலே கோத்திரச் சண்டை
யிலே
ஆதியிலே அபிமானித் தலைகின்ற உலகீர்
அலைந்தலைந்து வீணேநீர் அழிதல் அழ கலவே''

என்று அறை கூவினார்! ''சாதி சமயங்களிலே வீதிபல வகுத்த சாத்திரக் குப்பைகளெல்லாம் பாத்திரமன்று'' என்று பறையறைந்தார். பாட்டாக மட்டுமா பாடினார், வசனமாகவும் எழுதினார். இதோ! வள்ளலார் இறைவனிடம் செய்து கொண்ட உரைநடை விண்ணப்பம்.

''இது தொடங்கி எக்காலத்திலும் சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய தடைகளாகிய, சமயங்கள், மதங்கள், மார்க்கங்கள் என்பவற்றின் ஆசார சங்கற்ப விகற்பங்களும் எங்கள் மனத்தில் பற்றாத வண்ணம் அருள் செய்தல் வேண்டும். சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய லட்சியமாகிய ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை எங்களுக்குள் எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்விதத்தும் எவ்வளவும் விலகாமல் நிறைந்து விளங்கச் செய்வித்தருளல் வேண்டும். எல்லாமாகிய தனிப்பெருந்தலைமை அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரே! தேவரீர் திருவருட்பெருங் கருணைக்கு வந்தனம்! வந்தனம்!''

சாதி சமயங்களை, சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய தடைகள் என்றார். ஆன்மநேய ஒருமைப் பாட்டுரிமையை, சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய லட்சியம் என்றார். இது தொடங்கி என்று 100 ஆண்டுகளுக்கு முன் அன்று வள்ளலார் வேண்டினார். நம்மைப் பொறுத்த வரை இந்த வேண்டுகோள் அன்று முதல் இன்றுவரை வேண்டுகோளாகவே இருக்கிறது. செயல்படுத்தப் பெறக்காணோம், தடைகள் தவிரக் காணோம், லட்சியம் பரவக்காணோம். சமுதாய நல்வாழ்வுக்குச் சாதிமதங்கள் தடையாக இருப்பதை—சாதாரணத் தடையாக அல்ல—மலைபோன்ற தடையாக இருப்பதை வள்ளலார் கண்டார். மலைபோன்ற அத்தடைகளை வள்ளலார் உளிகொண்டு பிளக்கவில்லை. வெடி வைத்தே தகர்த்தார். தூள் தூளாக்கினார். ஆனால் நாமோ இன்று 100 ஆண்டுகளுக்குப் பின்னுங்கூட சாதி வேருக்கு நீர் பாய்ச்சிக் கொண்டிருக்கிறோம்.

உடையவர்கள் உண்டு கொழுத்திருப்பதையும், அதாவது இல்லாதவர்களுக்குக் கொடுக்காமல் தாமே தமியராக உண்டு கொழுத்திருப்பதையும், இல்லாதவர்கள் பசியால் வாடி வதங்குவதையும் பார்த்து வள்ளலாரால் சகித்துக் கொண்டிருக்க முடியவில்லை. இந்தக் கொடுமையைப் பார்க்கும்போது, பார்க்கும்போது

என்ன? நினைக்கும்போது கூட என் உள்ளம் மட்டுமா எரிகின்றது? உடம்பெல்லாம் எரிகின்றதே என்று பாடினார்.

உள்ளலேன் உடையார் உண்ணவும் வறியார்
உறுபசி உழந்து வெந்துயரால்
வள்ளலே நெஞ்சம் வருந்தவும் படுமோ?
மற்றிதை நினைக்குந் தோறும்
எள்ளலேன் உள்ளம் எரிகின்றது உடம்பும்
எரிகின்ற தென்செய்வேன்? அந்தோ
கொள்ளலேன் உணவும் தரிக்கிலேன் இந்தக்
குறையெலாம் தவிர்த்தருள் எந்தாய்.

தேவைக்கு மேலே வைத்திருப்பவன் திருடன் என்றார் காந்தியடிகள். அத்தகைய திருடர்களை நினைக்கும்போது உள்ளம் மட்டும் அல்ல, உடம்பும் எரிகிறது. உணவும் செல்ல வில்லை. (அந்தோ! கொள்ளலேன் உணவும்) என்றார் வள்ளலார். உடையவர்கள் இல்லாதவர்களுக்குக் கொடுப்பதனால் பற்றாக்குறையை ஒருவாறு நிவர்த்தி செய்யலாமன்றோ? தேவைகளும் பற்றாக்குறையும் மிகுந்துள்ள இக்காலத்தில் வள்ளலார் காட்டும் நெறியை—இருப்போர் இல்லாதவர்க்கு இட்டுண்ணும் நெறியை — கடைப் பிடித்தால் எப்படியிருக்கும்.

வட்டிமேல் வட்டிகொள் மார்க்கத்தில் நின்றீர்
வட்டியை வளர்க்கின்ற மார்க்கத்தை அறியீர்
பெட்டிமேல் பெட்டிவைத் தாள்கின்றீர் வயிற்றுப்
பெட்டியை நிரப்பிக்கொண்டு ஒட்டிஉள்
ளிருந்தீர்
பட்டினி கிடப்பாரைப் பார்க்கவும் நேரீர்
பழங்கஞ்சி ஆயினும் வழங்கவும் நினையீர்
எட்டிபோல் வாழ்கின்றீர் கொட்டிபோல் கிளைத்தீர்
எத்துணை கொள்கின்றீர் பித்துல கீரே.

எங்கு பார்த்தாலும் வட்டிக் கடைகளும், அடகுக் கடைகளும் பெருகியுள்ளன. ''வட்டிமேல் வட்டிகொள் மார்க்கத்தில் நின்றீர், வட்டியை வளர்க்கின்ற மார்க்கத்தை அறியீர்'' என்ற வள்ளலார் பாடலை, அநியாய வட்டி. வட்டிக்கு வட்டி வாங்குபவர்கள் படிக்க வேண்டும்.

திருவாரூரில் முன்னொரு காலத்தில் ஆண்ட மனுநீதிச் சோழன் நீதி வழங்கிய வரலாற்றை எழுதுகிறார்.

மனுச்சோழன் மகன் வீதிவிடங்கனின் தேரில் பசுங்கன்று ஒன்று அடிபட்டு இறந்து விட்டது. இதனையறிந்த மனுச் சோழன் என் ஆட்சியில் இவ்வாறு நேரிட்டதே, என் மகனே இவ்வாறு செய்து விட்டானே, இவ்வாறு நேருவதற்கு நான் செய்த பாவம் என்னவோ? என்று பலவாறு புலம்புகிறான். அவன் புலம்பல் இதுதான்.

''நல்லோர் மனத்தை நடுங்கச் செய்தேனோ!
குடிவரி உயர்த்திக் கொள்ளை கொண்டேனோ!
ஏழைகள் வயிறு எரியச் செய்தேனோ!
தருமம் பாராது தண்டஞ் செய்தேனோ!
மன்றோரம் பேசி வாழ்வழித்தேனோ!
வேலையிட்டுக் கூலி குறைத்தேனோ!
பசித்தோர் முகத்தைப் பாராதிருந்தேனோ!
குருவை வணங்கக் கூசி நின்றேனோ!
கன்றுக்குப் பாலூட்டாது கட்டி வைத்தேனோ!
கல்லும் நெல்லும் கலந்து விற்றேனோ!
வெய்யிலுக் கொதுங்கும் விருட்சம் அழித்தேனோ!
பொது மண்டபத்தைப் போயிடித்தேனோ!''

என்று 43 பாவங்களைச் சொல்லிப் புலம்புகின்றான். புலம்புவதாக வள்ளலார் எழுதுகின்றார். பாவங்கள் இவ்வளவு தான் என்பதில்லை. ஏதோ அப்போதைக்குத் தோன்றியவற்றை வள்ளலார் தொகுத்தெழுதினார். சொல்லிய பாவங்களுள் சில பெரியன, சில சிறியன. சில பாவங்கள் மட்டுமன்றி, அரசாங்கச் சட்டப் படிக் குற்றங்களும் ஆகும்.

எது எதில் எது எதைக் கலந்து விற்கலாம் என்பதையே ஒரு கலையாக வளர்த்திருக்கும் இன்றைய சமுதாயத்திற்கு அன்றே அறிவுரை கூறினார். ''கல்லும் நெல்லும் கலந்து விற்றேனோ'' என்று. ''பொது மண்டபத்தைப் போய் இடித்தேனோ'' என்று அன்று வள்ளலார் கூறியதை, ''பொதுச் சொத்துக்கு நாசம் விளைவித்தேனோ'' என்று இன்று நாம் கொள்ள வேண்டும்.

சமுதாயத்தில் இன்று காணப்படுகிற பல பிரச்சினைகளுக்கும் சுமுகமான தீர்வு வள்ளலாரின் நெறியிலே உண்டு. அன்றாட வாழ்வின் சாதாரண பிரச்சினை முதல் ஆன்மீக வாழ்வின் உயர்ந்த அனுபவ நிலைவரை எதற்கும் எல்லாவற்றிற்குமே வள்ளலார் வழிகாட்டியாக விளங்குகிறார். இன்றைய தேவைகளுக்கு வள்ளலார் நெறி மிகவும் தேவை. அதுவே நமது சேவை.

# இராமபிரானின் இணையிலா அழகு!



மகாவித்வான் திரு பி.ப.அண்ணங்கராசாரிய சுவாமிகள்

உலகில் அழகு மிகுந்த மனிதர்கள்பலரை நாம் பார்ப்பதுண்டு. ஆனால், இரண்டொரு நாள் பார்த்தவாறே பழகிப் போய் வெறுப்புத் தட்டிவிடுவது இயல்பு. இரண்டொரு நாள் மாத்திரமே, விரும்பிப் பார்ப்பது என்கிற அழகும் கவர்ச்சியும் இருக்கும். நாளடைவில் அது மாறிப் போய்விடும். இராமபிரானுடைய எழில் இத்தகையதொன்றன்று.

''எப்பொழுதும் நாள் திங்கள் ஆண்டு
ஊழி ஊழிதொறும்
அப்பொழுதைக்கு அப்பொழுது என்
ஆரா அமுதமே''.

என்று, நம்மாழ்வார் அருளிச் செய்தபடி ஊழி தொறு ஊழி ஓவாது பார்த்துக்கொண்டிருந் தாலும் அபூர்வக் காட்சியாகவே இருக்கும்.

இப்படிப்பட்ட அழகு கொண்டிருந்தது கண்டே, வசிட்ட பகவான் இராமன் என்று திருநாமம் சாத்தினன். இராமன்என்கிறசொல் லானது ரமயதி என்கிற விற்பத்தியினால்தேறும் வடசொல். தன்னுடைய அழகைக் காட்டி ஓவாது களிக்கச் செய்பவன் என்பது தேறின கருத்தாம். இராமனது வடிவழகில் யார் யார் எப்படி ஈடுபட்டிருக்கின்றார்கள், என்பதை, உள்ளவாறு விவரித்துக் காட்டப் புகுந்தால்மிக விரிவாகும். சாரமாகச் சில இடங்களைமட்டுமே எடுத்துக் காட்டுவோம்.

**விசுவாமித்திரர் :**

இனி இராமனது வடிவழகில் ஈடுபட்டவர் களைப் பற்றிச் சிறிது தெரிவிக்கின்றேன். முதலில் விசுவாமித்திர முனிவரை எடுத்துக் கொள் வோம். இவர் தசரத மன்னவர் இடம், இராம லட்சுமணர்களைப் பெற்றுக் கொண்டு போகை யில், சூரியன் மறைந்த அளவில் பிள்ளைகள் உறங்கிப் போயினர். பிறகு பின் மாலையில் இராமனை எழுப்புகின்ற முனிவர் 'கவுசல்யா சுப்ரஜா ராமா'! என்கிறார். இது இராமபிரானை விளிப்பது. இதற்கு ஆசாரியர்கள்பலவிதமாகப் பொருள் பணிக்கின்றனர். இரண்டு விதம் கேண்மின்: கவுசல்யா என்பதைத் தனிப் பத மாகவும் சுப்ரஜா: என்பதைத் தனிப் பதமாக வும் பிரித்து ஒரு பொருள் நிர்வாகம். அவற்றை ஒரே பதமாகவே கூட்டாகக் கொண்டு மற்றொரு நிர்வாகம். ஒரே பதமாகக் கொள்ளுகிற நிர்வா கத்தில் கவுசல்யா தேவியின் நல்ல புதல்வனை இராமனே! என்று அழைத்ததாகத் தேறுகின் றது. தனிப் பதங்களாகப் பிரித்துக் காட்டுகிற நிர்வாகத்தில் 'கவுசல்யா தேவியானவள் நல்ல பிள்ளை பெற்றவள்' என்று சொல் முடிப்பதாக ஆகிறது. மேலோடே தொடர்பு இல்லாமல் தனி வாக்கியமாக நிற்கின்றது, 'இராமா! பொழுது விடிந்தது. எழுந்திரு' என்று சொல்ல வேண்டிய இந்தச் சந்தர்ப்பத்தில் கவுசல் யையைக் கொண்டாடுவது எதற்காக என்று கேள்வி வரும். இங்கே நம்முடைய பூருவாசாரி யர்கள் அருமருந்தன்ன ஒரு விளக்கத்தை அருளிச் செய்கின்றார்கள் காண்மின்: ''முனிவன் உண்ணப்புக்கு வாயை மறப்பாரைப் போலே தான் அதிகரித்த காரியத்தை மறந்து, பெற்ற வயிற்றுக்குப் பட்டம் கட்டுகிறவனாய், ஒரு திருவாட்டி பிள்ளை பெற்றபடி என்னே! என்று கவுசலையாரைக் கொண்டாடுகிறான்; வடிவழகு படுத்தும் பாடு!'' என்று.

இதைச் சிறிது விவரிப்போம். இலையில் பிரசாத பணியாரங்களைப் பரிமாறி இருந்தால் உண்பதற்கு உட்கார்ந்தவன் செய்ய வேண்டிய காரியம் என்ன? அவற்றைத் திரட்டி எடுத்து உட்கொள்ளுவது தானே செய்ய வேண்டும். அது செய்யாமல், இந்தப் பணியாரம் யார் செய்தது? எப்படிச் செய்தது? எது கொண்டு செய்தது? என்று சில விசாரங்கள் செய்து கொண்டு கிடந்தானாகில், அவன் அந்தப் பணி யாரத்தின் அமைப்பிலேயே மிகவும் ஈடுபட்டு விட்டான் என்று தெரிந்து கொள்ளலாம் அன்றோ! அதுபோலவே இங்கு விசுவாமித்திர முனிவன் இராமனை எழுப்பி அழைத்துக் கொண்டு போக வேண்டிய காரியம் முதன்மை யாக இருக்க, அதை விட்டு இப்படி அழகிய பிள்ளையைப் பெற்ற கௌசல்யாதேவி என்ன நோன்பு நோற்றாளோ என்று அவளைக் கொண் டாடத் தொடங்கி விட்டான். இது இராமனது அழகு படுத்தினபாடு என்பது தவிர, வேறு என்ன சொல்ல முடியும்?

**மிதிலை மகளிர் :**

இராமன் மதுராபுரியில் திருவீதி வரும் காலத்து, அவனைக் கண்ட மாதர்களின் தன் மையை வருணிக்கின்ற கம்பர்,

தோள்கண்டார் தோளே கண்டார்;
தொழுகழற் கமலம் அன்ன
தாள்கண்டார் தாளே கண்டார்?
தடக்கை கண்டாரும் அஃதே
வாள்கொண்ட கண்ணார் யாரே
வடிவினை முடியக் கண்டார்?
ஊழ்கண்ட சமயத்து அன்னான்
உருவுகண் டாரை ஒத்தார்.''

என்று கூறுகின்றார். இராமனது ஓர்அவயவத்தின் அழகைக் கண்டவர்கள் மற்றோர் அவயவத்தில்

கண் செலுத்த மாட்டாதவர்கள் ஆயினர் என்று சொன்னதினுல், இராமனின் திவ்விய மங்கள விக்கிரக செளந்தர்யம் ஒப்புயர்வற்றது என்று தெரிவிக்கப்பட்டதாயிற்று.

**குலசேகராழ்வார்:**

இராமனது அழகைத் தசரத மன்னன் அனுபவிக்கும் படியைக் குலசேகர ஆழ்வார் கூறியிருப்பது மிகவும் சிறப்பானது. பெருமாள் திருமொழியில் (9—4) 'வா போகு வா இன்னம் வந்தொருகால் கண்டுபோ' என்றபாசுரம்அமைந்திருக்கும் அழகு பெரிதும் அற்புதம். தசரதன் சுமந்திரன் முதலானேரை அனுப்பி இராமனே வரவழைப்பான். முன்னழகைச் சேவிப்பதில் ஆசையினுல் வா என்பன்; முன்னிலும் பின்னழகிய பெருமாள் ஆகையினுலே இராமனின்பின்னழகைச் சேவிக்கக் கருதிப் போகு என்பன். மறுபடியும் முன்னழகைச் சேவிக்க வேண்டி மீண்டும் வா என்பன். இப்படி மாறி மாறி அழகைச் சேவிக்கப் பெற்றதனுலே பிச்சேறி இன்னம் வந்தொருக்கால் கண்டு போ என்பன். இப்படி எவ்வளவு பார்த்தும் திருப்தியே பிறக்கவில்லை என்பதையே 'ந நதர்ப்ப ஸமாயாந்தம் பச்யமாநோ நரா திப:'' என்று வான்மீகி கூறி முடித்தார்.

**வாலி:**

வாலியும் இராம பாணம் பட்டுத் தான் முடிந்து போகும் தருணத்திலே, இராமனேடு தர்க்கம் செய்யும் போதும் 'ஓவியத்து எழுத ஒண்ணு ஊருவத்தாய்!' என்று விளிக்கின்றுன். நம் விருப்பப்படி அவித்தவித்து அழகுபெற எழுதக் கூடியது ஓவியம்; அவ்வோவியத்திலும் எழுத வொண்ணுததாம் இராமனது திருவுருவம்.

**மாருதி:**

மாருதி இராமனேக் கண்ட காட்சியிலே, அவனது தோளழகிலே நெஞ்சைப் பறிகொடுத்ததாக வான்மீகி முனிவர் பாடுகின்றுர். இராமனின் தாமரை மலர் போன்ற கண்களிலே மாருதி தன் நெஞ்சைப் பறி கொடுத்ததாகக் கம்பர் பாடுகின்றுர்:

''மஞ்செனத் திரண்ட கோல
மேனிய! மகளிர்க் கெல்லாம்
நஞ்செனத் தகைய வாகி
நளிர்இரும் பனிக்குத் தேம்பாக்
கஞ்சம்ஒத்து அலர்ந்த கண்ணை''

என்பது கம்பர் அருளிய கவின்மிகு பாடல்.

**ஆண்டாள்:**

கண்ணபிரானேயே காதலிக்குமவள் ஆன ஆண்டாளும், இராமனுக்கு 'மனத்துக்கினியான்' என்று திருநாமம் சாத்துகின்றுள். திருப்பாவையில் ''சினத்தினுல் தென்னிலங்கைக் கோமானைச் செற்ற மனத்துக்கினியான்'' என்று அருளிச் செய்தது காண்க. ''பொல்லா அரக்கனேக் கிள்ளிக் களைந்தானை'' என்று, அவ்வாண்டாளே அருளிச் செய்துள்ளபடி, அவலீலையாகக் கொன்றெழிக்க வேண்டிய இராவணனே, இராமன் மிகவும் தாமதித்துப் பிரயாசைப்பட்டுக் கொன்றதாகக் கதை காண்கிறது. அதன் காரணத்தையும் விவரிப்பது போன்றுள்ளது, ''சினத்தினுல் தென்னிலங்கைக் கோமானைச் செற்ற மனத்துக்கினியான்'' என்ற ஆண்டாள் பாசுரம். இதன் உட்கருத்து என்னென்னில் ''பஞ்செனச் சிவக்கும் மென்கால் பாவையைப் பிரித்த பாவி'' வஞ்சனுன இராவணனேக் கொன்றெழித்தே விடவேண்டும் என்கிற திருவுள்ளம் இராமனுக்கு இருந்ததாகில், கடலில் அணை கட்டி இலங்கைக்கு வர வேணும் என்பது இல்லை; தன் அழகைக் காட்டியவாறு அவனை வசப்படுத்திக் கொள்ள வேணும் என்கிற திருவுள்ளமே இராமனுக்கு இருந்தது.

''சூதனுய்க் கள்வன் ஆகித்
தூர்த்தரோ டிசைந்த காலம்
மாதரார் கயற்கண் என்னும்
வலையுட்பட் டழுந்து வேனைப்
போதரே என்று சொல்லிப்
புந்தியிற் புகுந்து தன்பால்
ஆதரம் பெருக வைத்த
அழகன்.''

என்றபடி, எப்படிப்பட்ட விமுகர்களையும் தன்பால் ஈடுபடுத்திக் கொள்ளவல்ல அழகு தனக்கு இருப்பதனுல், அவ்வழகைக் காட்டி இவ்வரக்கனேயும் மயக்கி விடலாம் என்கிற மயக்கமே இராமனுக்கு இருந்தது. இவ்வழகை அப் பாவி மதித்திலன். ஆகையாலே சினம் உண்டாயிற்று. அந்தச் சினத்தினுல் இனி இவனை உயிரோடு வைக்கலாகாது என்று செற்றனன்; அவன் தான் மனத்துக் கினியான்; உள்ளங் கவர் கள்வன் ஆன அழகை உடையவன் என்பது ஆழ்ந்த கருத்து.

''வெய்யோன்ஒளி தன்மேனியின்
விரிசோதியின் மறையப்
பொய்யோஎனும் இடையாளொடும்
இளையானெடும் போனுன்
மையோமர கதமோமறி
கடலோமழை முகிலோ
ஐயோ இவன் வடிவென்பதோர்
அழியா அழகுடையான்'' —கம்பர்.

# அருள்மிகு
# வரதராசப் பெருமாள் வகை
# திருக்கோயில்கள்

## வெங்கம்பூர்

## ஈரோடு வட்டம், கோவை மாவட்டம்.

இக்கூட்டமைப்பைச் சார்ந்த அருள்மிகு வரதராஜப் பெருமாள் கோவில், அருள்மிகு சோளீஸ்வரசுவாமி கோயில், அருள்மிகு அங்காளம்மன் கோயில், அருள்மிகு பொங்காளியம்மன் கோயில் ஆகிய திருக்கோயில்கள் வெங்கம்பூர் கிராமத்தில் அமைந்துள்ள மிகப் பழமையான கோயில்கள். இக்கோயில்களின் நிர்வாகம் சுமார் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்பு தான் அறநிலையத் துறையிலிருந்து செயல் அலுவலர் நியமிக்கப்பட்டு நடந்து வருகிறது. மேற்படி கூட்டமைப்பு கோயில்களுக்குச் சுமார் 150 ஏக்கர் நஞ்சை, புஞ்சை நிலங்களுண்டு. தற்காலம் சுமார் 3 இலட்ச ரூபாய் ஆண்டொன்றுக்கு வருவாய் வருகிறது.

1972-ல் அருள்மிகு வரதராசப் பெருமாள் கோயில், அருள்மிகு சோளீஸ்வர சுவாமி கோயில், அருள்மிகு அங்காளம்மன் கோயில் முதலிய கோயில்கள் பழுது பார்க்கப்பட்டுத் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாவும் நடத்தப் பெற்றுள்ளது.

திருக்கோயில் நிதியிலிருந்து சுமார் 4 இலட்ச ரூபாய்ச் செலவில் வெங்கம்பூரில் நவீன வசதிகளுடன் கூடிய ஒரு திருக்கல்யாண மண்டபம் கட்டி முடிக்கப் பெற்று விரைவில் திறப்பு விழா செய்யவிருக்கிறது. தவிர திருக்கோயில் செயல் அலுவலகம், செயல் அலுவலர் குடியிருப்பு, திருக்கோயில் பணியாளர்கள் குடியிருப்பு முதலிய வேலைகளுக்கும் ரூ. 2,00,000 அனுமதி பெறப்பட்டு மேற்படி வேலைகள் தொடங்க இருக்கின்றன.

இக்கிராமக் கோயிலான இக்கூட்டமைப்பைச் சேர்ந்த பொங்காளியம்மன் கோயிலுக்குத் திருப்பணிகள் செய்து திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா நடத்தவும் திட்டங்களிருக்கின்றன.

**வி. சி. முத்துசாமி**
**வி. எஸ். குப்புசாமி**
**எம். குமாரசுவாமி**
**பி. ஆறுமுகம்**
*அறங்காவலர்கள்*

**வி. பி. கணபதி**
*தலைவர், அறங்காவலர் குழு*

**பி. இராமசாமி**
*செயல் அலுவலர்*

# அம்பிகையின் அழகு வெள்ளம்!

சக்திதாசன்

## 26. மங்கல நாண் உறும் திறம் :

சிவபெருமான் ஆதியும் அந்தமும் இல்லாதவர். அவருக்குப் பிறப்பும் இல்லை, இறப்பும் இல்லை. வேதத்தை விளங்கச் செய்பவன் ஆகிய பிரமன், அவனைப் படைத்த திருமால், தேவவுலகத்தை ஆளும் தேவேந்திரன், மிக்க சீற்றத்தையுடைய கூற்றுவன், செல்வத்திற்குத் தலைவன் ஆகிய குபேரன், மற்றும் இவர்கள் முதலாக உள்ள எட்டுத் திக்குப் பாலகர்கள் ஆகிய அனைவரும், என்றேனும் ஒரு நாள் இறந்து அழிந்துபடுவர். இவர்களெல்லாம் இறந்து அழிந்து போயினும், முதலும் முடிவும் இல்லாது ஒப்பற்றவர் ஆகிய சிவபெருமான் ஒருவர் மட்டும், என்றுமே இறப்பதில்லை. இங்ஙனம் சிவபெருமான் ஒருவர் மட்டும் இறவாமல் இருப்பதற்குக் காரணம் யாது? அம்பிகையின் திருக்கழுத்தில் உள்ள மங்கல நாண் பெற்றுள்ள சிறப்பே, அதற்குக் காரணம் ஆகும். ஆதலால், அம்பிகையே! நீ அச்சிவபெருமானைத் திருமணம் செய்து கொள்ளும் சேர்க்கையே, சிறந்த சேர்க்கையாகும். அங்ஙனமாகவும், நின்னை இவ்வுலகத்தோர் நீலி என்று குறிப்பிடுவது பாவமேயாகும்.

''வேத ரஞ்சகன் மால் புரந்தரன்
வேக சண்ட குபேரனோடு
ஆதி எண்திசைப் பாலர் பொன்றவும்,
ஆதி அந்தம் இலாததொர்
நாதர் பொன்றிலர்; ஏது? உன் மங்கல
நாண் உறும்திறம்; ஆதலால்
நீ தழைந்தது யோகம்; அம்பிகை
நீலி என்பது பாவமே''

பிரமன், வேதத்தை ஓதி, அதன் பொருள் விளங்கச் செய்பவன், ஆதலின் 'வேத ரஞ்சகன்' எனப்பட்டான். புரந்தரன்—காப்பாற்றுபவன், அஃது இங்குத் தேவேந்திரனைக் குறித்தது. சண்டன்—இயமன், கூற்றுவன்; உருத்திரன் எனினுமாம். வேகம்—சீற்றம், ''கூற்றொத்தீயே மாற்றருஞ்சீற்றம்'' என்பது புறநானூறு. பொன்றுதல்—அழிதல். 'பொறுத்தார்க்குப் பொன்றுந் துணையும் புகழ்' என்பது திருக்குறள். ஏது—காரணம். உறும்—பெற்றுள்ள. திறம்—சிறப்பு. தழைத்தது—திருமணம் செய்து கொண்டது. யோகம்—சேர்க்கை, நற்பேறு எனினுமாம். 'யோகம்' இன்னார்க்கு எனச் சுட்டிக் கூறாமையின், அம்பிகையை மணந்தது இறைவனுக்கும், இறைவனை மணந்தது அம்பிகைக்கும் நற்பேறு என்க. அம்பிகை நீல நிறம் உடையவளாதலின், நீலி எனப்படுவாள். அவ்வாற்றால் அது பொருந்துமேயாயினும், 'நீலி' என்பது மனத்தின்கண் வைரம் (கறுவு) உடையவள் எனவும் வேறுஒரு பொருள்படும். ஆனால் அஃது உத்தம குணமே யுடைய அம்பிகைக்குப் பொருந்தாது ஆதலின், ''நீலி என்பது பாவமே'' என்றார். பிரமன் திருமால் உருத்திரன் எட்டுத் திக்குப் பாலகர் முதலிய தேவர் அனைவரும் இறந்தொழியினும், சிவபெருமான் என்றும் இறவான்; அதற்குக் காரணம் அம்பிகையினது மங்கல நாணின் சிறப்பே என ஏதுக் கூறினமையால், இச்செய்யுள் ஏதுவணி எனப்படும். இதனால் அம்பிகையின் திருவடிகளில் ஆட்பட்ட அன்பர்களுக்கு, யாது ஓர் இடையூறும் நிகழாது என்பது பெறப்படும். (26)

## 27. அழிவறும் பதம் வைத்தருள் :

பெரிய ஒளியை யுடையவளே! இரக்கம் விளைதற்கு நிலைக்களமானவளே! உயிர்களுக்கெல்லாம் களிப்பு மிகுதற்குக் காரணமாக, நாத தத்துவமாய்விளங்குபவளே! யான் வாயினால் சொல்லும் சொற்களெல்லாம் உன்னுடைய மந்திரம்; யான் கையினால் செய்யும் தொழில்களெல்லாம் உன்னுடைய முத்திரை; யான் எவ்விடத்தேனும் நடக்கும் செயலெல்லாம் உன்னுடைய கோயிலை வலம் வரும் தொழில்; யான் உண்பனவெல்லாம் உனக்குச் செய்யும் ஆகுதி; யான் துயிலும் துயிலெல்லாம் உனக்குச் செய்யும் வணக்கம்; யான் மகிழ்ச்சியுறுவன வெல்லாம், நீ என் நெஞ்சை விட்டு நீங்காமையினால் ஏற்படும் இன்பம்; என்னுடைய செயல்கள் யாவையும், நின்னுடைய நல்ல பூசைக்கு உரிய செயல்; என்று ஆகும்படி, நீ உன்னுடைய திருவடிகளை என்னுடைய தலையின் மீது பதிய வைத்து அருள் புரிக.

மொழிவது உன்செபம்; முத்திரை பாணியின்
முயல்வது; எங்கும் நடப்பன கோயில்சூழ்
தொழில்; அருந்துவ முற்றும் உன் ஆகுதி;
துயில் வணங்கல்; களிப்பன யாவும்நீ;
ஒழிவறும் களி என்செயல் யாவையும்
உனது நன்செய் பரிச்செயல் ஆகவே,
அழிவறும் பதம் வைத்தருள்; பேரொளி
அளி விளைந்து களிப்பெழும் நாதமே

அம்பிகை சோதி வடிவம் உடையவள், கருணை மிக்கவள். உயிர்களுக்கெல்லாம் களிப்பைத் தருபவள், நாத தத்துவமாய் விளங்குபவள். ஆதலின், ''பேரொளி, அளி விளைந்து களிப்பு எழும் நாதமே'' என விளித்தார். அளி—இரக்கம், கருணை. நம்முடைய எல்லாச் செயல்களும், அம்பிகையின் தொடர்புடையனவாய், அவளை வழிபடும் நிலையிலேயே அமைதல் வேண்டும் என்பார், ''மொழிவதுன் செபம்; முத்திரை பாணியின் முயல்வது; நடப்பன கோயில் சூழ் தொழில்; அருந்துவமுற்றும் உன் ஆகுதி; துயில் வணங்கல்; களிப்பன யாவும் நீ; ஒழிவறும் களி; என் செயல் யாவையும் உனது நன்செய் பரிச்செயல் ஆகவே அருள்'' என விதந்துரைந்துப் பணித்தார். நன்செய் பரிச்செயல்—நல்ல செய்கையாகிய பூசை. பரி, என்னும் அடைச்சொல், சிறப்புப் பொருள் உணர்த்தும். அடியவர் முடிமேல் திருவடியை வைத்தல், ஒரு சிறந்த அருளிச் செயல் ஆதலின், 'அருள்(க)' என வாளா கூறுமல் ''பதம் வைத்து அருள்'' என்றார். ''நனைந்தனைய திருவடி என் தலைமேல் வைத்தார்'', ''உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம் என்று அவர்தம் சென்னிமிசைப் பாத மலர் சூட்டினன் சிவபெருமான்'' என வரும் திருமொழிகள், இங்கு நினையத் தகுவன. அம்பிகையின் திருவடிச் சிறப்பையுணர்த்த ''அழிவறும் பதம்'' என்றார். இதற்குப் பதம் அழிவு அற்றதெனல் கருத்தன்று; தன்னை அடைந்த அடியார்களின் அழிவு ஆகிய துன்பம் முதலியன, அறுதற்குக் காரணமான பதம் என்பது கருத்து. பதம் எனினும், பாதம் எனினும் ஒக்கும். உண்ணுவன அவிப்பொருள், உதரம் (வயிறு) ஓமகுண்டம், உதராக்கினி (வயிற்றழல்) ஓமாக்கினி என்று உருவகம் செய்யும் கருத்தில் ''அருந்துவ முற்றும் உன் ஆகுதி'' என்றார். முத்திரைகளாவன, சங்க்ஷேபம், திராவணம், வசியம், உன்மாதம், மகாங்குசம், கேசரி, பீசம், யோனி, திரிகண்டம் என்னும் நவ முத்திரைகளாகும். அன்புமிக்க ஆர்வம் தோன்ற உரைத்தன்மையால், இச்செய்யுள் ஆர்வமொழி என்னும் அணியாகும். இது தேவியை நோக்கி என்னைக் காத்தருளல் வேண்டும் எனப் பணிந்து மொழிந்தது. (27)

## 28. பொன்னோலையின் வாசி :

அம்பிகையே! பிரமன் இந்திரன் முதலியவர்களும், இவரல்லாத ஏனைய பிற தேவர்களும் உண்கின்ற உணவெல்லாம், நரை திரை மூப்புகளைப் போக்குதற்குக் காரணமாகிய நல்ல அரிய அமுதமேயாகும். அங்ஙனம் ஆகவும், இவர்களுள் ஒருவராயினும் நிலைபெற்று இருந்திலர். நின்னுடைய கணவனாகிய சிவபெருமான் உண்ட உணவு, நஞ்சாக இருப்பினும், என்ஞான்றும் இறவாமல் இனிது நிலைபெற்று, வாழ்கின்றார். அதற்குக் காரணம் நின்னுடைய இரண்டு பெரிய காதுகளிலும் இடப்பெற்றுள்ள பொன்னோலையின் சிறப்பேயாகும்.

பிரமன் இந்திரன் முற்பிற
தேவர்கள் ஊண்எலாம்
நரை பெருந்திரை அற்றநல்
ஆரமுதே கொலாம்;
ஒருவர் தங்கிலர்; நின் சிவன்
ஊண்விடம் வாழ்வன்; மாது
இரு பெருங்கழை இட்டபொன்
ஓலையின் வாசியே

அமிழ்தமானது, தன்னை உண்டவர்களுக்கு நரை, திரை, மூப்புக்களை நீக்குதலின் அதனை ''நரை பெரும் திரை அற்ற நல் ஆரமுது'' என விசேடித்தார். தேவர்கள் அமுதம் உண்டும் இறுதியில் என்றேனும் ஒரு நாள் இறந்து ஒழிதலாலும், சிவபெருமான் இறப்பைத் தரும் நஞ்சை உண்டும் இறவாமல் என்றும் நிலை பெறுதலாலும் ''ஒருவர் தங்கிலர்; நின் சிவன் ஊண் விடம் வாழ்வன்'' என்று குறிப்பிட்டருளினர். ''விண்ணோர் அமுதுண்டும் சாவ, ஒருவரும் உண்ணாத நஞ்சுண்டு இருந்து அருள் செய்குவாய்'' எனச் சிலப்பதிகாரத்தில் இளங்கோ வடிகளும்,

''நூறு கோடி பிரமர்களும் நுந்தினர்,
ஆறுகோடி நாராயணர் அங்ஙனே,
ஏறு கங்கை மணல் எண்ணில் இந்திரர்,
ஈறிலா தவன் ஈசன் ஒருவனே.''

எனத் தேவாரத்தில் திருநாவுக்கரசரும் குறிப்பிட்டருளியிருத்தல் இங்கு உணரற்பாலன. ஓலையைப் போன்று பொன்னாற் செய்யப்படுதலின், காதணியைப் 'பொன்னோலை' என்றார்: அது மங்கல நாண் போன்ற மாட்சிமையுடையது. எனவே, கணவனை இழந்தோர் காதணி வாங்கப்படுவர். அம்பிகையின் காதணிகள் என்றும் வாங்கப்படுவதின்மையின், சிவபெருமான் இறவாமல் இருத்தலாகிய காரியத்திற்கு அதனைக் காரணமாக்கிக் கூறினர். ''நம்பா நினக்கு ஓலம் முறையோ எனக்கால நஞ்சுண்டு, பித்துண்டு, நாம் தேவர் என்பார் தம் பாவையருக்கு அன்று காதோலை பாலித்த தயவாளர்'' என மதுரைக் கலம்பகத்திற் குமரகுருபரர் பாடியிருத்தல் காண்க. 'மாது' என்பது அண்மை விளி. வாசி—நன்மை, சிறப்பு. பொன்னோலை—காதணி 'ஒருவரும்' என்புழி உம்மை தொக்கது. ஊண்—உணவு; ஆரமுது—கிடைத்தற்கரிய அமுது. பெருமை இரண்டினுள் முன்னது மிகுதி பற்றியும், பின்னது வளர்ச்சி பற்றியும் வந்தது. சிவபெருமான் இறவாமல் நிலை பெறுதலுக்கு அம்பிகையின் பொன்னோலையின் வாசியே காரணம், என ஏதுக் கூறினமையின் இச்செய்யுள் ஏது என்னும் அணியாகும். அம்பிகையின்பால் ஆட்பட்டவர்க்கு இடையூறு ஏதும் இல்லை யென்பது இதனல் வற்புறுத்தப்பட்டது. (28)

## 29. திருவடி வளமை :

பழமை மிக்க வேதங்களால் புகழப்படுகின்றவளே! எக்காலமும் இளமையோடு கூடிய அழகிய வனிதையே! பிரமனும், திருமாலும், குலிசம் என்னும் படையையுடைய இந்திரனும், விதி முறை வழுவாமல் நின்னுடைய திருமுன்னிலையில் விழுந்து பணிந்து கிடக்கின்றார்கள். அங்ஙனம் அவர்கள் விழுந்து பணிந்து கிடக்கும் வழியின் நடுவே, நின்பாற் கொண்ட காதலினல், நின் இருப்பிடத்தை நோக்கிச் சிவபெரு

மான் வருகின்றூர். அப்போது அவரைக் கண்டு நீ விரைந்தெழுந்து எதிர்கொள்ள முற்படுகின் ருய். அந்நிலையில் நின்னுடைய திருவடியின் வளமையைக் கருதி, ''எம்முடைய தெய்வமே இது பிரமனுடைய திருமுடி; இது திருமாலின் திருமுடி; இது தேவேந்திரனின் திருமுடி; இத் திருமுடிகள் மிகவும் உறுதியும் கடினமும் உடை யவை. அதனுல் இவைகள் மீது படின் நின் இரு தாள்களும் இடறும். விரைந்து நடக்கும் கதி அமர்க, அமர்க, இடருமல் வழி விலகி வருக வருக'' என்று நின்னுடைய குற்றேவல் செய் யும் தெய்வ மகளிர் சொல்லும் மொழிகள் வளர்ந்து ஓங்குவனவாக

முதுமறைசொல் இளவனிதை
அயனெடுஅரி குலிசன்உனை
முறைபணியும் நெறியின் இடையே,
பதறி உனது அருகுவரும் அரனை
எதிர்கொள உனது
பரிசனம் உன்அடி வளமையால்,
இது பிரமன் மகுடம், அரி மகுடம் இது,
குலிசன் முடிஇது,
கடினம், இடருறும், இருதாள்
கதி அமர அமர வழிவிலகி,
வரவர, எமது
கடவுள் எனும்மொழி தழைகவே

அம்பிகையைப் பிரமனும் திருமாலும் இந் திரனும் போன்ற தேவர்களெல்லாரும் பணிந்து வணங்குதலை, இங்ஙனம் சுவை பெருகக் குறிப் பிட்டார். முறை பணிதல்—எட்டுறுப்புகள், ஐந்துறுப்புகள் என்பன தரையிற் படும்படி விழுந்து பணிதல். கணவனைக் கண்டால் விரைந்து எழுந்து வரவேற்க முற்படுதல் பெண் ணின்நல்லார் ஆகிய உத்தமியர்க்கு இயல்பாத லால் ''பதறி எதிர்கொள'' என்றும்; சிவப்பும் அழகும் மேன்மையும் உடைய அடியாதலால் ''உன் அடி வளமையால்'' என்றும் குறிப்பிட் டார். ''வினைஎஞ்சு கிளவியும் வேறுபல் குறிய'' என்னும் இலக்கண விதியினுல், 'அமர அமர', 'வர வர' என்னும் வினையெச்சங்கள் 'அமர்க அமர்க' 'வருக வருக' என வியங்கோள் முற்று கப் பொருள்பயந்தன. அம்பிகையின் திருவடி களைத் தேவரெல்லாரும் தம் திருமுடி தோயத் தரையில் விழுந்து பணிந்து வணங்குகின்றனர் எனச் சிறந்தெடுத்துப் பெரிதும் புகழ்ந்து கூறுத லின், இது வீறுகோள் (உதாத்தம்) என்னும் அணியாகும். இஃது ஏவல் செய்வோர் கூறும் மங்கல மொழிகளைக் கூறியது. (29)

## 30. விமலையின் உரிமை :

உள்ளும் புறமும் அழுக்கின்மையைச் செய் பவளே! பசுபதியாகிய சிவபெருமான், தன் னுடைய ஆற்றலாகிய ஆணையைக் கொண்டு, அறுபத்து நான்காகிய பல கலைகள் அனைத்தை யும், வடு நீங்குமாறு நெடிய உலகத்தின் கண்ட தனது கருணையினுல் மாயையின் வாயிலாக விரவச் செய்தான். மேலும் அக் கலையினிட மாக வரும் பயன்களெல்லாம் புகழ் பெறும் படி செய்தான். அதுவும் அன்றிப் பின்னும் நின்னுடைய ஏவலினுல் அவ்வறுபத்து நான்கு கலையினிடமாக வரும் பயன்களெல்லாம் விரை வில் பெறும்படி, ஒப்பில்லாத உனது கலையை உண்டாக்கினுன். அப்பயன்களும் அன்றி எவ் வகைப்பட்ட பயனையும் இக்கலைதானே தரக் கொடுத்தான். இங்ஙனமெல்லாம் சிவபெரு மான் செய்ய வல்லவன் ஆயினது, உன்னை மனைவியாகப் பெற்ற உரிமையினுல் அன்றோ?

''பசுபதிதன் நீதிகொண்டு அறுபத்து நாலுபல
கலைஞானமும், கருணையால்
வசிவுஅற நெடும்புவனம் மாயையின் மயக்க,
அதன் வழிவரும் பெரும்பயன் எலாம்;
இசைபெறவிளைவித்ததுவும்,பின்னும்உனது ஏவலால்
இணையில் உனது ஆகமம் எலாம்,
விசைபெற விளைத்து, எவையும் இதுதர அளித்ததும்
விமலை உனது உரிமை அலவோ?''

இதனுல் அம்பிகையின் அருளால் அன்றி ஒரு சித்தியையும் பெறுதல் இயலாது என்பது வலியுறுத்தப் பெற்றது. பசுபதியின் அருள் மாயைக்குக் காரணம். மாயை கலைகளை விரவச் செய்வதற்குக் காரணம். அதனுல் ''கருணையால் வசிவுஅற நெடும்புவனம் மாயையின் மயக்கி'' என்றூர். அறுபத்து நான்கு கலையினுல் வரும் பயன் இம்மைக்கன்றி மறுமைக்கில்லை. இஃது இம்மைக்கும் மறுமைக்கும் பயன் தருதலால் ''இணையில் உனது ஆகமம் எலாம் விசைபெற விளைத்து, எவையும் இது தர அளித்ததும்'' என்று குறிப்பிட்டார். வசிவு—வடு. ஓகாரம், எதிர்மறை.

அறுபத்து நான்கு கலைகளாவன : மாயா சம்பிரதம், தத்துவ சம்பிரதம், யோகினி சாலம், மாலினி வித்தை, மகா சம்மோகனம், மனேபேதம், தந்திரபேதம், குய்ய தந்திரம், கலாவாதம், கலாசாரம், குண்டிகா மதம், அஞ்சன வித்தை, பாதுகை, பான பாத்திரம், பரகாயப் பிரவேசம், இரசவாதம் இவை முத லாயின. இவற்றுள் மாயா சம்பிரதம்—ஓரிடத் தில் ஊர் போலவும், வனம் போலவும், மலை போலவும், நதி போலவும் தோற்றுவித்தல். தத்துவ சம்பிரதம்—ஒரு பூதத்தில் ஒரு பூதம் தோற்றுவித்தல்; இதனை மகேந்திர சாலமென் றுஞ் சொல்வர். யோகினி சாலம்—மயானத் தில் உபாசித்து யோகினிகளைக் காண்பிப்பது. மாலினி வித்தை - சமுத்திரங் கடக்கச் செய்வது. மகா சம்மோகனம்—விழித்திருக்கின்றவர்களை மெய்ம்மறந்து நித்திரை கொள்ளச் செய்வது; மனேபேதம்—மனத்தைப் பேதிக்கச் செய்வது. தந்திர பேதம்—ஓரிடத்தும் வெளிப்படாத தந்திரத்தை வெளிப்படச் செய்வது. குய்ய தந்திரம்—வெளிப்பட்டதை மறைப்பிப்பது. கலாவாதம்—மன்மத வித்தை. கலா சாரம்— வருணத்தை அதிகப்படுத்துவது. குண்டிகாமதம் —குளிகையினுலே இளமை அடைவது. அஞ்சன வித்தை—மறைபட்ட பொருளைக் காண்பிப்பது. பாதுகை—செருப்பைத் தொட்டு நினைக்கில், நினைத்த இடத்தில் விடுவது. பான பாத்திரம் —ஒரு கரகத்தில் நினைத்த பானமெல்லாம் தருவது. பரகாயப் பிரவேசம்—பிராணனில் லாத உடம்பிலே புகுவது. இரச வாதம்— உலோகத்தைப் பேதிக்கச் செய்வது. இவ்வாறே அறுபத்துநான்கு கலைகளையும் அறிக.

அஃது அர்ச்சனை செய்யும் முறைமையா வன; மேருப் பிரத்தாரம், கைலாயப் பிரத்தா ரம், பூப்பிரத்தாரம் என மூவகையாம். சோடச நித்த தேவதைகள் தாமே சக்கரத்தினுடைய அங்கமாக வியாபித்திருப்பது மேருப் பிரத்தா ரம்.

சோடச நித்த தேவதைகள் அக்கர உருவ மாக இருப்பதனால், அவ்வக்கரங்கள் தாமே சக்க ரத்தினுடைய அங்கமாக வியாபித்திருப்பது, கைலாசப்பிரத்தாரம்.

வசனி முதல் எண்மரும், நித்த தேவதை கள் பதினறுவரும், யோகினிகள் பன்னிருவரும், ஆகருஷணிகள் நால்வரும், பாசமும் அங்குச மும் என்று சொல்லப்படும் தேவதைகள் சக்க ரத்தினுடைய அங்கமாக வியாபித்திருப்பது பூப் பிரத்தாரம்.

நித்த தேவதைகள் பதினறுவ ராவார் ; திரிபுரசுந்தரி, காமேசுவரி, நித்தியாநித்தியை, பசுமாலினி, நித்தியக் கிலினை, பேருண்டை, வன்னிவாசினி, மகாவித்தியேசுவரி, ரௌத்திரி, த்வரிதை, குளசுந்தரி, நித்தியானிலபதாகை, விசயை, சர்வமங்களை, சுவாலாமாலினிகை, சித்திரை என இவர்கள்.

யோகினிகள் பன்னிருவராவார்: வித்தியா யோகினி, ரேசிகாயோகினி, மோசிகா யோகினி, அமிர்தா யோகினி, தீவிகா யோகினி, விஞ்ஞான யோகினி, ஆப்பியா யோகினி, வியாப்பினி யோகினி, மேயா யோகினி, வியோமரூபா யோகினி, சித்தரூபா யோகினி, இலட்சுமி யோகினி என இவர்கள்.

ஆகருஷணிகள் நால்வராவார் : கந்தா கருஷணி, ரூபகாருஷணி, ரசாகருஷணி, பரி சாகருஷணி என இவர்கள்.

உருத்திர யாமளம் என்னும் நூலினுள் இச் சக்கரம் தேவர், கந்தருவர், இயக்கர், இராக் கதர், அசுரர் இவர்களாலே உபாசிக்கப்பட்ட தென்றும், நான்கு வருணத்துக்கும், நான்காசிர மத்துக்கும், உபாசிக்கத் தகுமென்றும், உபாசிக் கில் வாழ்நாளும் ,புகழும் நன்மக்களும் செல்வ மும் வசியமும், சுவர்க்கமும் என இவை முத லாயின நன்மைகளைத் தருமென்றும் கூறப்பட் டிருக்கின்றது. (30)

—தொடரும்.


# அருள்மிகு கண்ணம்மன் புது அம்மன் திருக்கோயில்

மேலவீரராகவபுரம், திருநெல்வேலி சந்திப்பு

அன்புடையீர்,

திக்கெல்லாம் புகழும் திருநெல்வேலி சந்திப்பில், நெல்லையப்பர் பெருவழி ஈரடுக்கு திருவள்ளுவர் மேம்பாலத்திற்கும் தெற்கே கோயில் கொண்டிருக்கும் அருள்மிகு கண்ணம் மனும்—புது அம்மனும் நம் நினைவிற்கெட்டாத காலந் தொட்டே, நம் இரு கண்களாக நிலை பெற்றிருக்கும் தெய்வத் திரு உருவங்களாகும்.

மேற்படி திருக்கோயில் திருப்பணி வேலைகள் செய்து விரைவில் மகா கும்பாபிஷேகம் நடைபெற இருப்பதால் பக்தர்கள் அனைவரும் நிதி உதவி செய்து அருள்மிகு கண்ணம்மன் —புது அம்மன் அருளுக்கு பாத்திரராகும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

திருப்பணி நிதியினை ''செயலாளர், மகா கும்பாபிஷேகக் கமிட்டி, அருள்மிகு கண் ணம்மன்—புது அம்மன் திருக்கோயில், திருநெல்வேலி சந்திப்பு'' என்ற முகவரியில் நேரிலோ, மணியார்டர் மூலமாகவோ அனுப்பி ரசீது பெற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஏ. மாடசுவாமி, பி.எஸ்ஸி.,
செயல் அலுவலர்.

**31-5-1975-ம் தேதி திரு சுவர்ணபுரீசுவரசுவாமி ஆலயத்தின் சார்பில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் ''கருணை இல்லம்'' திக்கற்ற இளஞ் சிறுர்களுக்கு சீருடை வழங்குதல்**



# அருள்திரு வரதராசப்பெருமாள் ஆலயம்,

## ஓகளூர் (அஞ்சல்) பேரம்பலூர் வட்டம்,

### திருச்சி மாவட்டம்

திருநெல்வேலி—சென்னை நெடுஞ்சாலையில் தொழுதூருக்கு வடமேற்கில் 5 மைல் தூரத்திலுள்ள ஆடுதுறை கிராமத்திற்கு அருகில் அமைந்துள்ள ஓகளூர் கிராமத்தில் எழுந்தருளியிருக்கும் அருள்திரு வரதராசப் பெருமாள் திருக்கோயில் மிகப் புராதனமானது. தினப்படி ஒருகாலைப் பூசை மட்டும் செய்விக்கப் பெறுகின்றது. கிராமச் சுற்றுப்புறம் வயல் காடுகளும், வாழை, கரும்புக் கொல்லைகளும் சூழப் பெற்ற அழகிய குக்கிராமமாகும்.

இத்திருக்கோயில் திருப்பணி செய்ய வேண்டிய அவசியத்திலுள்ளமையால் இவ்விளம்பரம் காணும் பேரருளாளர்கள், தங்களால் இயன்ற பொருளுதவியை மேற்படி ஆலயத்திற்கு வழங்கப் பெரிதும் வேண்டிக் கொள்ளப்படுகிறது.

பி. என். கந்தசாமி படையாச்சி,
அறங்காவலர்.

வி. சதாசிவன்,
நிர்வாக அதிகாரி.

# ஓம் நமச்சிவாய நமக

''உலகெலாம் உணர்ந்து ஓதுதற்கு அறியவன்
நிலவுலாவிய நீர்மலிவேணியன்
அலகில் சோதியன் அம்பலத்து ஆடுவான்
மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.''

கோவை மாவட்டம் தாராபுரம் அமராவதிக் கரையில் ஸ்ரீ அகஸ்தீஸ்வரரால் பிரதிஷ்டை செய்யப்பட்டது. ஆகவே அவர் பிடித்து வைத்து வணங்கிய மணலையே லிங்கமாக ஏற்றுக் கொண்டதால் அகஸ்தீஸ்வரர் என்று பெயர் வழங்கப்பட்டு வருகிறது.

முன் காலத்தில் உலக சஞ்சாரம் செய்வதற்காக அகஸ்தியர் தன் சிஷ்யர்களுடன் புறப்பட்டால், தன்னுடைய ஆத்மார்த்த பூசைகளைத் தினப்படி ஒவ்வொரு நாளும் தங்கும் ஊர்களில் நடத்தி வந்தார். அந்தச் சமயத்தில் தன்னுடைய பூசைக்குரிய சிவலிங்கத்தைக் காசியிலிருந்து சிஷ்யர்கள் கொண்டு வருவதற்குத் தாமதம் ஏற்பட்டுவிட்டபடியால் சிவ பூசையை முடிக்கத் தன்னுடைய திருக் கரங்களால் அமராவதி புனித நீரின் மணலைப் பிடித்து வைத்துப் பூசித்தார். ஆகவே அதற்கு அகஸ்தீஸ்வரர் எனப் பெயர் பெறல் ஆயிற்று. மேலும் சிஷ்யர்கள் காசியிலிருந்து லிங்கத்தை எடுத்து வந்தார்கள். அதைத் தான் தாமதப் பட்டுச் சிஷ்யர்கள் கொண்டு வந்ததால் தான் பிடித்து வைத்துப் பூசித்த மணலையே லிங்கமாகப் பிடித்து வைத்துப் பூசித்து விட்டதால் காசியில் இருந்து வந்த லிங்கத்தைத் தனது வலப் பக்கமாக வைத்துக் காசி விஸ்வநாதர் எனப் பெயர் சூட்டப்பட்டு காசி விஸ்வநாதர் என வணங்கப்படுகிறது. மேலும் இவ்வாலயத்தில் அகஸ்தியர் தாமதப்பட்டு பூசித்ததால் விசேடங்களோ மற்றும் திருமண காரியங்களோ குறிப்பிட்ட நேரத்தில் முடிக்க நினைத்தால் தாமதித்துத் தான் முடியும். மேலும் சில வருடங்களுக்கு முன்னல் வருண பகவான் பூசை செய்து சிவ பெருமானை அமராவதி புனிதத் தண்ணீரால் ஆயிரக்கணக்கான குடம் தண்ணீரால் அபிஷேகம் செய்தும், சிவபெருமானைத் தண்ணீரில் மூழ்க வைத்துப் பார்க்க இயலவில்லை. மேலும் இவ்வாலயத்தில் சித்ரா பௌர்ணமி, விசயதசமி, சூரசம்ஹாரம், திருவாதிரை, தைப்பூசம், சிவராத்திரி, பங்குனி உத்திரம் ஆகிய உற்சவங்கள் கொண்டாடப்படுகிறது. அகஸ்தீஸ்வரர் ஆலயத்தில் காசி விஸ்வநாதர், பாலதண்டாயுதபாணி, அகிலாண்டேஸ்வரி, ஆகிய சந்நிதிகள் உள்ளன.

அகஸ்தீஸ்வரர் ஆலயத்தில் சோமாஸ்கந்தர், சௌந்தர நாயகி, சிதம்பரேஸ்வரர், சிவகாமசுந்தரி, சுப்பிரமணியர், வள்ளி, தெய்வானை, வீரபாகு, சந்திரசேகரர், சௌந்திர நாயகி ஆகிய உற்சவ மூர்த்திகள் உள்ளன. மாதம் இருமுறை பிரதோஷ மூர்த்திக்கு அபிஷேக ஆராதனை செய்து கொண்டாடப்படுகிறது.

**திரு. நா. இராமகிருஷ்ணன்**

**திரு. சந்தானம்**

**அறங்காவலர்கள்.**

**அ. இராமசாமி,** பி.ஏ.,

**செயல் அலுவலர்.**

# கோயில்களில் வற்கடப்பணி



திரு. கீ. சீதரன், எம்.ஏ.,

''மாரியல்லது காரியம் இல்லை என்பது பழமொழி. இதனுல் தான் வள்ளுவர் 'வான் சிறப்பு' என்ற அதிகாரத்தில் மழையின் சிறப்பைப் பற்றிக் கூறியிருக்கின்ருர். இத் தகைய சிறப்பு வாய்ந்த பருவ மழை இவ்வருடம் தவறியதால், தமிழகத்தின் சில இடங்களில் வறட்சி நிலைமை ஏற்பட்டுள்ளது. இத்தகைய நிலைமை இதற்கு முன்பும் ஏற்பட் டிருக்கிறது. அவ்வறட்சிக் காலத்தில் ஏற் பட்ட துன்பத்தை நீக்கக் கோயில்கள் எவ் விதத்தில் உதவி புரிந்தன என்பது பற்றி, இலக்கிய, கல்வெட்டுச் சான்றுகளின் துணை கொண்டு அறியலாம்.

**இலக்கியம்:**

திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் திருவீழிமிழலை என்னும் திருத்தலத்தில் தங்கி இருந்த பொழுது பெரும் பஞ்சம் உண்டாயிற்று. பசியால் அடியார்கள் வருந்தினர். இறைவன், அடியார்களின் துன்பத்தை நீக்கும் பொருட்டுப் பஞ்சம் நீங்கும் வரை, இருவருக்கும் நாள் தோறும் பீடத்தின் கிழக்குப் பகுதியிலும் மேற்குப் பகுதியிலும் படிக்காசு ஒவ்வொன்று அளிப்பதாகக் கூறினர். அக்காசு கொண்டு இரு வரும் பஞ்சத்தின் வாட்டத்தைப் போக்கினர் கள்.

வையம் எங்கும் வற்கடமாய்ச்
 செல்ல, உலகோர் வருத்தமுற
நையும் நாளில், பிள்ளையார்
 தமக்கும், நாவுக் கரசருக்கும்,
கையில் மானும் மழுவுமுடன்
 காணக் கனவில் எழுந்தருளிச்
செய்ய சடையர் திருவீழி
 மிழலை யுடையார் அருள்செய்வார்! (1)

கால நிலைமை யால்உங்கள்
 கருத்தில் வாட்டம் உறீர்எனினும்,
ஏல உம்மை வழிபடுவார்க்கு
 அளிக்க அளிக்கின் ருேம்என்று,
கோலங் காண எழுந்தருளிக்
 குலவும் பெருமை இருவருக்கும்,
ஞாலம் அறியப் படிக்காசு
 வைத்தார் மிழலை நாயகனர்!- (2)

அல்லார் கண்டத் தண்டர்பிரான்
 அருளாற் பெற்ற படிக்காசு
பல்லா றியன்ற வளம்பெருகப்
 பரமன் அடியார் ஆனர்கள்
எல்லாம் எய்தி உண்கஎன
 இரண்டு பொழுதும் பறைநிகழ்த்திச்
சொல்லாற் சாற்றிச் சோறிட்டார்
 துயர்கூர் வறுமை தொலைத்திட்டார். (3)

திருச்சோற்றுத்துறை என்னும் தலம், தஞ்சை மாவட்டத்தில் உள்ளது. அங்கு அரு ளாளர் என்னும் அந்தண அன்பருக்கு இறைவன் ஓர் அட்சய பாத்திரத்தை அளித்து, பஞ்ச காலத்தில் அடியார்க்கு அன்னமிட்டுக் காத்தரு ளினர் என்பது வரலாறு.

சுந்தரமூர்த்தி சுவாமிகள், ஏயர்கோன் கலிக்காமருடன் திருப்புன்கூருக்குச் சென்று, இறைவனை வணங்கினர். அப்போது அவ்வூர் மக்கள் 'நெடுங்காலமாக மழையில்லாமல் வருந் துகின்ருேம்' என்று விண்ணப்பம் செய்தனர். அதற்குச் சுந்தரர் 'மழை பெய்தால் இறைவ னுக்கு நேர்த்திக் கடன் யாது தருவீர்கள்?' என்று அவ்வூராரை வினவினர். கோயிலுக்கு 12 வேலி நிலம் வழங்குகின்ருேம் என்றனர். சுந்தரர் இறைவனை மழை பெய்விக்க வேண்டித் திருப்பதிகம் பாடினர். அதனுல் பெருமழை பெய்தது. மழை மிகுதியாகப் பொழிதலைக் கண்ட மக்கள், 'மழையை நிற்கும்படி செய்தரு ளினல் மேலும் 12 வேலி நிலம் கோயிலுக்கு வழங்குவதாகத்' தெரிவித்தனர். சுந்தரர் மீண் டும் இறைவனை வேண்டித் திருப்பதிகம் பாடி னர். உடனே மழை நின்றது. திருப்புன்கூர் மக்களெலாம் பெரிதும் மகிழ்ந்து, இறைவனைத் துதித்துப் போற்றினர். தாம் கூறியபடியே கோயிலுக்கு 24 வேலி நிலம் வழங்கினர். இச் செய்தி, சுந்தரமூர்த்தி சுவாமிகளின் திருப் புன்கூர்த் திருப்பதிகத்திற் பின்வரும் பாடலின் வாயிலாக அறியப்படுகின்றது.

வையகம் முற்றும் மாமழை மறந்து
 வயலில் நீர் இலை மாநிலம் தருகோம்
உய்யக் கொள்க மற்றெங்களை என்ன
 ஒளிகொள் வெண்முகிலாய்ப் பரந்தெங்கும்
பெய்யும் மாமழைப் பெருவெள்ளம் தவிர்த்துப்
 பெயர்த்தும் பன்னிருவேலி கொண்டருளும்
செய்கை கண்டு நின் திருவடி அடைந்தேன்
 செழும் பொழில் திருப்புன்கூர் உளானே!

**கல்வெட்டுக்களில்:**

வறட்சி நிலைமை ஏற்பட்டு மக்கள் துன்பம் அடைந்ததாகச் சில கோயிற்கல்வெட்டுச் செய்தி களால் அறிய முடிகிறது. மழை பெய்யாமல் பஞ்சம் ஏற்பட்டு மக்கள் வாடியதாகக் கோயி லடி (தஞ்சை மாவட்டம்) சிவன் கோயிலில் உள்ள விக்கிரம சோழனது கல்வெட்டு ஒன்று கீழ்க்கண்டவாறு கூறுகின்றது.

''இவ்வூர் வடபிடாகை திருச்சடைமுடியுடைய மகா தேவர் கோயிலில் திருமண்டபத்தில் கூட்டம்

குறைவறக் கூடியிருந்து பண்ணின பரிசாவது காலம் பொல்லாததாய் நம்மூர் அழிந்து குடியோடிப் போய்க் கிடந்தமை.''

மழை அதிகமாகப் பெய்தாலும் துன்பம்தான்! இவ்வாறு அதிகமாகப் பெய்தால் ஏரிகள் உடைத்துக் கொண்டு நிலங்கள் அழிந்து பஞ்சம் ஏற்பட்டதாகத் திருவோத்தூர் (வட ஆற்காடு) திருவதிகை (தென் ஆற்காடு) ஆகிய கோயில் களின் கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

**பஞ்சக் கொடுமை:**

பஞ்சத்தினுல் ஏற்பட்ட கொடுமையைப் பற்றிச் சில கல்வெட்டுக்கள் கூறுகின்றன. பஞ்ச காலத்தில் காசுக்கு உழக்கு அரிசி விற்ற தாக மூன்றும் குலோத்துங்கச் சோழனின் திரு வண்ணுமலைக் கல்வெட்டு கூறுகின்றது. பஞ்சம் ஏற்பட்ட பொழுது வேளாளன் ஒருவன், தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த திருப்பாம்புரம் கோயில் மடத்துக்குத் தன் மகளிர் இருவருடன் தன்னை 110 காசுக்கு விற்றுக் கொண்டு அடிமை யாயினுன் என்று அக்கோயில் கல்வெட்டு கூறு கிறது.

**கோயிலின் உதவிகள்:**

இத்தகைய துன்பம் ஏற்பட்ட காலத்தில் அவற்றை நீக்கக் கோயில்கள் எவ்விதம் உதவி புரிந்தன? சோழ நாட்டில் பஞ்சம் ஏற்பட்ட பொழுது, ஆலங்குடி மக்கள் கோயில் பண்டா ரத்திலிருந்து 1,011 கழஞ்சு நிறையுள்ள பொன் நகைகளும், 464 பலம் நிறையுள்ள வெள்ளிப் பொருள்களும் கடனுகப் பெற்று உயிர் வாழ்ந் தனர் என்று ஆலங்குடி (தஞ்சை மாவட்டம்) கோயிற் கல்வெட்டு கூறுகிறது. கோயில்களுக்கு அக்காலத்தில் நிலங்கள் தானமாக அளிக்கப் பட்டன. நிலம் தானமாக அளித்தாலும் நிலம் அளித்தவர்கள் வரி கொடுக்க வேண்டும். ஆனுல் மழை பெய்யாமலும், பயிர் விளையாமலும் போனுல் வரித்தொகை அளிப்பதில் சலுகைகள் அளிக்கப் பெற்றதாகப் புதுக்கோட்டை மாவட் டத்தைச் சேர்ந்த மேலமலையில் உள்ள மாற வர்மன் சுந்தரபாண்டியன் காலத்துக் கல் வெட்டு ஒன்ருல் அறிய முடிகிறது.

இவ்வாறு பஞ்சம் ஏற்பட்டு மக்கள் துன் புற்ற பொழுது, கோயில்கள் தம்மால் இயன்ற உதவிகளைச் செய்து வந்ததைக் கல்வெட்டு மற்றும் இலக்கியச் சான்றுகளால் அறிய முடி கிறது.

*



திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி கோயில், திருக்குட நன்னீராட்டு விழாவில், தமிழக அரசின் தலைமைச் செயலர் திரு. பி. சபாநாயகம் I.A.S. அவர்களையும், அவர்தம் வாழ்க்கைத் துணைவியார் அவர்களையும், நிர்வாக அதிகாரி திரு. எஸ். சோமசுந்தரம் B.A.,B.L. அவர்கள் வரவேற்ற காட்சி.

# திருஞானசம்பந்தர் 

கவிஞர் திரு மனசை ப. கீரன் பி.ஏ., பி.டி.

‘இன்னிசையால் தமிழ்பரப்பும் சம்பந் தர்’ தாம்
எனப்புகழ்ந்து சுந்தரரே ஏத்தி யுள்ளார்!
தன்னிகரில் இறைவியவள் ஞானப் பாலைத்
தரஅருந்திக், கவிஞருளே தலைவர் ஆனார்!
முன்னிவரைச் சங்கரராம் முனிவர் தாமும்
‘முதிர்ந்தபெருங் கவிஞர், திரா விடசிசு’ என்றே
பன்னிமிகப் பாராட்டிப் புகழ்ந்தார் என்றால்,
பண்புயர்சம் பந்தர்புகழ் பகர்தற் காமோ? (1)

நாடரிய பெருஞ்சிறப்பின் நலங்கள் மிக்கு
நல்லறிஞர் அனைவருமே நயந்து போற்றத்
தோடுடைய செவியன்முதல் சிறந்த நல்ல
தூயதிருப் பதிகங்கள் அருளிச் செய்தார்!
‘கேடில்பெருங் கலைச்செல்வம்’என்று சான்றோர்
கீர்த்திமிகப் போற்றிமகிழ் கின்றார் என்றால்,
ஈடிணையில் சம்பந்தர் சிறப்பை எல்லாம்,
எடுத்துமிக ஆய்ந்துரைக்க யாரே வல்லார்? (2)

திருக்கோலக் காவினிலே கையால் தாளம்
சேர்த்திசைத்த திருப்பதிகம் ‘மடையில் வாளை!’
உருக்கமுறப் பாடியதால் அருளின் ஈசர்
உளம்மகிழ்ந்து பொற்றாளம் உவந்து தந்தார்!
திருத்தலங்கள் பரவிவரத் திருநெல் வாயில்
சீர்முத்துப் பல்லக்கும் சிறக்கப் பெற்றார்!
திருக்கடைக்காப்பு எனும்பெயரால் தெய்வப் பாக்கள்
செந்தமிழில் அளித்தஅவர் சிறப்பென் சொல்கேம்? (3)

பெருகுதிரு ஐந்தெழுத்தாம் நமசி வாயப்
பெருமைமிகு மந்திரமே தலையாம் என்றார்!
அருமைமிகு தந்தையார் வேள்விக் காக
ஆயிரம்பொன் பெற்றளித்தார் அன்பு மைந்தர்!
மருவு‘துணி வளர்திங்கள்’ பதிகம் பாடி,
வருத்திவந்த முயலகனும் நோயும் தீர்த்தார்!
அருளினிலும் அகவையினிலும் கனிந்த அப்பர்
அன்பின்இவர் சிவிகையினைச் சுமந்து (உ)வந்தார்! (4)

திருவீழி மிழலையிலே பஞ்சம் போக்கத்
திருவருளால் படிக்காசு பெற்றுத் தந்தார்!
பெருகுகின்ற பொதுமக்கள் பீழை தீர்த்தார்!
பேணரிய சமுதாயப் பணிகள் செய்தார்!
திருமறைக்காட் டுத்தலத்தின் கோயில் வாயில்
திறப்பதற்கு நாவரசர் பதிகம் பாட,
அருமைமிகச் ‘சதுரம்மறை’ப் பாடல் பாடி
அக்கதவைச் சம்பந்தர் அடைப்பித் திட்டார்! (5)

பாண்டியநன் னாட்டின்கண் தீங்கு பாற்றிப்
பரவுசைவம் நிலைநிறுத்தப் பாடு பட்டார்!
ஆண்டகையார் நாவரசர் பயணம் செய்ய
ஆகாத நாள் என்றே ஒன்றைச் சொல்ல,
ஈண்டிறைவன் அடியவர்க்கு நாளும் கோளும்
எனைத்தளவும் தடையாகா எனப்ப கர்ந்து,
வேண்டிநல்'வே யுறுதோளி பங்கன்' பாடி
வீரருக்குள் வீரர்என விளங்கி நின்றார்! (6)

தமிழரலாச் சமக்கர்சிலர் சூழ்ச்சி செய்தே
சைவர்கள்வாழ் திருமடத்தில் தீயை வைத்தே,
அமைவிலவாம் கொடுமைபல ஆற்றி நிற்க,
'அஞ்சாதீர்! இவர்க்கெளியன் அல்லேன்' என்றே,
இமையம்போல் தலைநிமிர்ந்து பெருமி தத்தோ
டிறையருளைத் துதித்திறைஞ்சி இடுக்கண் தீர்த்தார்!
தமிழ்மொழிதான் தெய்வமொழி! தழலால் நீரால்
சலியாதென் றுலகுணரக் காட்டி வென்றார்! (7)

காயாத ஆண்பனையை மாற்றி அன்று
காய்க்கின்ற பெண்பனையாய்க் கவினச் செய்தார்!
தீயாகத் தீய்த்துவிட்ட பெண்ணைச் சென்னைத்
திருமயிலைத் தலத்தினிலே உயிர்க்கச் செய்தார்!
ஓயாதே ஊர்ஊராய் உலாவிச் சென்றே
உயர்தமிழைப் பரப்பிமிக ஓங்கச் செய்தார்!
சேயாக இளம்பருவச் சிறுவ ராகத்
திகழ்ந்தும், அவர் செயற்றிறங்கட் கெல்லையுண்டோ? (8)

(வெண்பா)

வாழி திருஞான சம்பந்த வள்ளலார்!
வாழியவர் பாடுதிருத் தேவாரம்! — வாழியரோ
நம்மருமைச் செந்தமிழ் நன்மொழிதான் ,நாள்நாளும்
செம்மைபெற ஓங்கிச் செழித்து!

திருவல்லிக்கேணி அருள்திரு. பார்த்தசாரதிப் பெருமாள்
திருக்கோயில் திருக்குட நன்னீராட்டு விழாக் காட்சி
(23-3-75)



# வட திருமுல்லைவாயில் கல்வெட்டுக்கள்

திரு, ஏகாம்பரநாதன், எம்.ஏ.,

பண்டைத் தமிழகத்தை ஆண்ட சோழ மன்னர்கள் சோழநாட்டிலும், தொண்டை நாட்டிலும் இறைவனுக்கு ஏராளமான திருக் கோயில்கள் எடுப்பித்தனர். இவர்கள் கட்டிய கோயிலொன்று சென்னைக்கு மேற்கே 13 கல் தொலைவில் அம்பத்தூருக்கும், ஆவடிக்கும் இடையே உள்ள திருமுல்லைவாயில் என்னும் ஊரில் உள்ளது. இக்கோயில் சோழர்களின் கலைத்திறனை வெளிப்படுத்தும் வகையில் சிறந்த கட்டடக்கலை அமைப்புக்களையும், அழகிய சிற்பங்களையும் கொண்டிருப்பதோடல்லாமல், சுந்தரரால் பாடப்பெற்ற தலமாகவும் விளங்கு கின்றது.

சுந்தரர், தான் இழந்த கண்பார்வையினை மீண்டும் பெறலாம் எனும் நம்பிக்கையுடன் 'முருகு அமர்சோலை சூழ் திருமுல்லை வாயிலை' அடைந்து 'பரவிடும் அடியேன் படுதுயர் களை யாய்' என ஆற்றுமை தோன்ற இங்கெழுந்தரு ளியுள்ள இறைவனைப் பாடியுள்ளார். சுந்தரர் தம்முடைய பதிகத்தில் இத்தலத்து இறைவனை 'மாசிலாமணி ஈசுவரர்' என்றும், இறைவியைக் 'கொடியிடை உமையவள்' என்றும் பாடிப் பரவியுள்ளார்.

இக்கோயிலின் தலவரலாறு பற்றிச் சுவை யான செய்திகள் உள்ளன. தொண்டைமான் என்னும் மன்னன் வேட்டையாடச் சென்ற போது தனது யானையின் காலில் சிக்கிய முல்லைக் கொடிகளை வாளால் அகற்றும்போது, அங்கு லிங்கமொன்று காட்சியளிக்கவே மன்னன் அதனைப் பிரதிட்டை செய்து, இக்கோயிலைக் கட்டினுன் என்று கூறப்படுகிறது. இதுவன்றி இம்மன்னன் தன் பகைவர்களுடன் போர் செய்து தோற்றேடிய போது தனது யானையின் கால்களில் சுற்றிய முல்லைக் கொடிகளை வாளால் வெட்டவும், அப்போது வாள் முல்லைக்கொடி களால் மறைக்கப்பட்டிருந்த லிங்கத்தில் பட வும், அதனுல் மனம் புண்பட்ட மன்னனுக்கு இறைவன் காட்சி கொடுத்துத் தன் வாகன மாகிய நந்தியை அனுப்பி மன்னனது பகைவர் களை அழித்தான் எனவும், அவ்வெற்றியால் மகிழ்ந்த மன்னன் இக்கோயிலைக் கட்டினுன் என வும் மற்றெரு செய்தி கூறப்படுகிறது. இதனுல் தான் இக்கோயிலிலுள்ள நந்தி கருவறையை நோக்காமல் வழக்கத்திற்கு மாருகக் கொடிக் கம்பத்தை நோக்கியுள்ளதென்றும், மன்னனது வாளால் வெட்டுப்பட்ட காரணத்தால் லிங்கத் தின் மேற்பகுதி சிதைந்தது என்றும், அதை மறைத்தற் பொருட்டு லிங்கத்தில் எப்போதும் சந்தனம் பூசுகின்றனர் என்றும் கூறுவர்.

**கோயில் :**

தூங்கானை மாடக்கோயில் வகையைச் சார்ந்த இக்கோயில் கருவறை, அர்த்த மண்ட பம் ஆகிய பகுதிகளைக் கொண்டது. இவற்றைச் சுற்றி மூடப்பட்ட உள் திருச்சுற்றும், அதன் முன்னர் மகாமண்டபமும் காணப்படுகின்றன. கோயிலின் அடித்தளம், உபானம், உபபீடம், பத்மம், குமுதம், கண்டம், பட்டிகை ஆகிய பகுதிகளையுடையது. அர்த்த மண்டபத்தில் இரண்டு வெள்ளெருக்கந் தூண்களும், உள் திருச்சுற்றின் கீழ்ப்பகுதியில் ஏழு தூண்களும், மகாமண்டபத்தில் நான்கு தூண்களும் காணப் படுகின்றன. கருவறை, அர்த்த மண்டபம் முதலியவற்றின் புறச்சுவர்களை அரைத்தூண் கள், கும்பபஞ்சரங்கள், தேவகோட்டங்கள் முதலியன அழகு செய்கின்றன. தேவகோட் டத்தின் மேலுள்ள மகர தோரணங்கள் அழகிய செதுக்கு வேலைப்பாடுகளுடன், நடுவில் சிறிய சிற்பங்களைக் கொண்டுள்ளன. கொடுங்கையின் வெளிப்புறத்தில் கூடு அமைப்புகளுள்ளன. ஆனுல் கொடுங்கையின் கீழ்ப் பூதகணங்கள் வரி சையோ, மேற்பகுதியில் யாளி வரிசையோ காணப்படவில்லை.

கோயிலின் விமானம் மூன்று தளங்களைக் கொண்டது. முதலிரண்டு தளங்களிலும் சதுர வடிவ, நீண்ட சதுரவடிவ சிறு கோபுர அமைப் புக்கள் உள்ளன. சிகரம் கோயிலைப் போன்று தூங்கானைமாட வடிவையுடையது. இதன் நாற்புறங்களிலும் சிங்கமுக வளைவுகள் காணப் படுகின்றன. சிகரத்தின்மேல் ஐந்து கலசங்கள் உள்ளன.

இக்கோயிலின் தென்புறத்தில் இறைவிக் காகக் கட்டப்பட்ட தனிக்கோயில் ஒன்றுள் ளது. இதுவும் கருவறை, அர்த்தமண்டபம், உள்திருச்சுற்று, மகாமண்டபம் ஆகியவைகளைக் கொண்டது. மகாமண்டபம் பிற்காலத்தில் கட்டப்பட்டதாகும். கோயிலின் வெளித்திருச் சுற்றினுள் தென்புறத்தில் சிறிய விநாயகர் கோயிலும், வடபுறத்தில் முருகன் கோயிலும் காணப்படுகின்றன. விநாயகர் கோயிலின் முன் பகுதியை அமர்ந்த நிலையிலுள்ள சிங்கங்களை யுடைய தூண்கள் தாங்கி நிற்கின்றன. கோயி லின் கீழ்ப்புறத்தில் நந்தி பீடமும், கொடிக் கம்பமும் காணப்படுகின்றன. வெளித் திருச் சுற்றின் தென்புறத்தில் பிற்காலத்தில் கட்டப் பட்ட கோபுரவாயில் காணப்படுகிறது.

**கல்வெட்டுக்கள் :**

கோயிலின் அடித்தளத்திலும், மண்டபத்தின் தரைப்பகுதியிலுள்ள கற்பலகை சிலவற்றிலும், உள்திருச்சுற்றிலுள்ள தூண்களிலும், மகா மண்டபத்திலுள்ள தூண்களிலும் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. இவை பார்த்திவேந்திரன், உத்தமசோழன், முதலாம் ராஜேந்திரன், மூன்றும் குலோத்துங்கன், மூன்றும் ராஜராஜன், முதலாம் ஜடாவர்மன் சுந்தரபாண்டியன், மதுராந்தக பொத்தப்பிச் சோழன், விஜய நகர அரசர் ஆகியவர்கள் காலத்தவையாகும்.

பார்த்திவேந்திரனது 5-வது ஆட்சியாண்டு (கி.பி. 961) கல்வெட்டு, இக்கோயிலுக்குப் புழல் கோட்டத்தைச் சார்ந்த ஒரு ஊரைத் தேவதானமாகக் கொடுத்ததையும் (கல்வெட்டு ஆண்டறிக்கை—676—1904), 13-வது ஆண்டு கல்வெட்டு (கி.பி. 969) சிங்களவீரநாராயணன் என்பான் இக்கோயிலில் ஒரு நந்தா விளக்கெரிப்பதற்கு 90 ஆடுகளையும், புழல்கோட்டத்து வெள்ளையூர் நாட்டைச் சார்ந்த ஒரு ஊரைத் தானமாகக் கொடுத்ததையும் குறிக்கின்றன (68—1904).

உத்தம சோழனது 14-வது ஆட்சியாண்டில் (கி.பி. 984) கண்டராதித்தன்மனைவியாகிய செம்பியன்மாதேவியார் அம்பத்தூர் சபையிடமிருந்து 9,300 குழி நிலத்தை 80 கழஞ்சுபொன் கொடுத்து வாங்கி இக்கோயிலுக்குத்தானமாகக் கொடுத்துள்ளார் (669—1904). இக்கல்வெட்டிலுள்ள எழுத்துக்களின் அமைப்பு பிற்காலத்தைச் சார்ந்ததாகும். எனவே இது உத்தம சோழன் காலத்திலுள்ள வேறொரு கல்வெட்டின் நகலாக இருக்க வேண்டும்.

முதலாவது இராஜேந்திரனின் மூன்றுவது ஆட்சியாண்டில் (கி.பி. 1014), பராந்தக நல்லூரைச் சார்ந்த திருநல்லுழான் இசக்கன் அறிவாளன் என்பான், இக்கோயிலிலுள்ள மகா மண்டபத்தைக் கட்டினன் எனவும் (677—1904), இக்கோயிலிலுள்ள இறைவனுக்கு வழிபாடு நடத்த 1,200 குழி நிலத்தை வாங்கிக் கொடுத்தான் எனவும் (684—1904) கல்வெட்டுக்கள் கூறுகின்றன. மேலும் உகும்பில் என்ற ஊரைச் சார்ந்த நாகன்வெள்ளி என்பவன் கோயிலில் ஒரு நந்தா விளக்கெரிக்க 90 ஆடுகளைக் கொடுத்துள்ளான். இவ்வாடுகளைத் திருமுல்லைவாயில் ஊரார் சில இடையர்களிடம் ஒப்படைத்து அவர்களிடமிருந்து நந்தாவிளக்கு எரிக்கப் போதுமான நெய்யினைப் பெற்றுவந்தனர் (681-1904). இன்னும் இக்கோயிலுக்குத் தங்க நாணயங்கள், 44 மாணிக்கம், 8 மரகதம், 32 ரத்தினங்கள், 21 முத்துக்கள் ஆகியவற்றையும்; நெய்வேத்திய, அபிடேகச் செலவிற்கு 5 கழஞ்சு பொன் முதலியவற்றையும் கொடுத்ததாக மற்றொரு கல்வெட்டு குறிக்கிறது (678—1904). இராஜேந்திரனது ஏழாவது ஆட்சியாண்டில் (கி.பி. 1018) அம்பத்தூர் சபை இவ்வூரில் உள்ள 4,000 குழி நிலத்தை வில்லிப்பாக்கத்தைச்சார்ந்த வெள்ளன் என்பவனுக்கு விலைக்குக் கொடுத்ததையும், அவன் அந்நிலத்தை இக்கோயிலில் ஒரு நந்தா விளக்கெரிக்கக் கொடுத்தமையையும் அறிய வருகிறோம் (678—1904).

மூன்றும் குலோத்துங்கனது 21வது ஆட்சியாண்டில் (கி.பி. 1199) கோயம்பேட்டிலுள்ள சிவபூதன் மதுசூதனவானவர் நாயகன் என்பவன் இக்கோயிலில் இரு நந்தா விளக்கெரிக்க 24 புஜபலமாடை என்னும் நாணயங்களைக் கொடுத்துள்ளான் (667—1904). இம்மன்னனது 39-வது ஆண்டில் (கி.பி. 1217) இக்கோயிலுக்கு முதலைமேடு என்னும் ஊரிலுள்ள சில நிலங்கள் இறையிலியாகக் கொடுக்கப்பட்டன. இந்நிலங்களிலுள்ள வருவாய் கோயிலில் வழிபாட்டுச் செலவிற்கும், கோயிலைச் சார்ந்த, சிவதுவிஜன்தபஸ்ய காசியப்பன்ஜயங்கொண்ட சோழநம்பி என்பவனல் கட்டப்பட்ட திரிபுவன வீரன் மடத்துச் செலவிற்கும் பயன்படுத்தப்பட்டது (673—1904).

மூன்றும் இராஜராஜனது 16-வது ஆட்சியாண்டில் (கி.பி. 1231—32) கோழிப் பதாகை என்ற இடத்திலுள்ள சபை இக்கோயிலுக்காக 15 வேலி நிலத்தை 60 பழம் புள்ளிமாடை கொடுத்து வாங்கியது என்பதை ஒரு கல்வெட்டு கூறுகிறது (674—1904).

மதுராந்தகப் பொத்தப்பிச்சோழன் கோயில் தானத்தாருக்குச் சில வரிகளைக் கோயில் வழிபாட்டிற்குச் செலவிடுமாறும், கோயிலைப் பழுது பார்ப்பதற்குச் செலவிடுமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளான் (672—1904). மேலும் இம்மன்னன் திருமுல்லைவாயில் ஊரைக் கோயில் வழிபாட்டிற்கும், விஜயகண்டகோபாலன் சந்தி என்ற பூசைக்கும் சித்திரைத் திருவிழாச் செலவிற்கும் கொடுத்துள்ளான் (662—1904).

முதலாவது ஜடாவர்மன் சுந்தரபாண்டியனது 15-வது ஆட்சியாண்டில் (கி.பி.1265-66) ஊர்கடமைஆயம், மன்றுடிகள் பிரசாதவரி, புறக்கலனை முதலிய வரிகளைக் கொண்டு கோயிலைப் பழுதுபார்ப்பதற்குச் செலவிடப்பட்டுள்ளது (666—1904). இம்மன்னனது 18-வது ஆண்டில் இக்கோயிலில் விக்கிரம சோழவள நாட்டார் சந்தி என்ற பூசைக்கும், வைகாசித் திருவிழாவிற்கும் புழல்கோட்டத்தின் சபையால் வசூலிக்கப்பட்ட கடமை என்னும் வரியில் பாதியையும், ஒரு இறையிலி நிலத்தையும் கொடுத்துள்ளமையை அறிகிறோம் (670—1904). மேலும் இக்கோயிலுக்கு ஹரிஹரராயர், புக்கராயர், மல்லிகார்ச்சுனர் ஆகிய விசயநகர அரசர்கள் காலத்தில் பாத்திரங்கள், நிலங்கள், முதலியவை தானமாகக்கொடுக்கப்பட்டுள்ளன.

**கலைப்பாணி :**

இக்கோயிலின் புறச்சுவர்களிலுள்ள அரைத் தூண்கள் தடி, கும்பம், கலசம், கழுத்து, வட்ட வடிவ பலகை, போதிகை ஆகிய பகுதிகளைக்

கொண்டவை. போதிகையின் விளிம்பில் முக்கோண அமைப்பு காணப்படுகிறது. தேவகோட்டங்களின் மேலுள்ள தோரணங்கள் அழகிய செதுக்கு வேலைப்பாடுகளுடன், நடுவில் சிறிய சிற்பங்களைக் கொண்டு விளங்குகின்றன. மேற்கூறிய அமைப்புகள் அனைத்தும் சோழர் காலக் கோயில்களிலுள்ளவை போன்றுள்ளன. இவையன்றித் தேவ கோட்டங்களிலுள்ள சிற்பங்களனைத்தும் சோழர் காலச் சிற்பக்கலைப் பாணியில் உருவாக்கப்பட்டவையாகும்.

**காலம் :**

இக்கோயில் சுந்தரரால் பாடல் பெற்ற தலமாகையால் மிகப் பழைமைவாய்ந்ததென்று கூறலாம். கல்வெட்டுச் சான்றுகளைக் கொண்டு இங்கு கி.பி. 961-க்கு முன்னரே கோயில்கட்டப்பட்டிருக்க வேண்டும் என்பது தெளிவாகும். கோயிலின் அடித்தளத்திலுள்ள உத்தமசோழனது 14-வது ஆட்சி ஆண்டில் (கி.பி. 984) பொறிக்கப்பட்ட கல்வெட்டிலுள்ள எழுத்துக்கள் பிற்கால வரிவடிவம் பெற்றிருத்தலால், இது இக்கோயிலில் முன்பு காணப்பட்ட ஒரு கல்வெட்டின் நகலாக இருத்தல் வேண்டும். எனவே உத்தமசோழன் காலத்தில் இக்கோயிலின் அமைப்பு வேறு முறையில் இருந்திருக்க வேண்டும். மேலும் முதலாம் இராசேந்திரன் காலத்தில் மகாமண்டபம் கட்டப்பட்டதாகக் கல்வெட்டு கூறுகிறது. இம்மன்னனது கல்வெட்டுகளனைத்தும் மகாமண்டபத் தூண்களிலும், உள் திருச்சுற்றிலுள்ள தூண்களிலும்தான் காணப்படுகின்றனவேயன்றி, கோயிலின் அடித்தளத்தில் இல்லை. அடித்தளத்திலுள்ள கல்வெட்டுக்களில் பழமைமிக்கது (உத்தம சோழன் கல்வெட்டு நகலைத் தவிர) மூன்றுவது குலோத்துங்கன் கல்வெட்டாகும். அடித்தளக் கல்வெட்டுக்களிலுள்ள எழுத்துக்கள் நல்ல வரிவடிவம் பெற்றவையாக உள்ளன. எனவே தற்போதுள்ள கோயில் முதலாம் இராசேந்திரன் காலத்திற்குப்பின்னர்க்கட்டப்பெற்றிருக்க வேண்டும். ஆனல் குறிப்பாக எந்த அரசன் காலத்தில் கட்டப்பட்டது என்று கூறுவதற்குச் சான்றுகளில்லை.


## அருள்திரு சங்கரநாராயணசுவாமி திருக்கோயில்

**சங்கரநயினர் கோயில், திருநெல்வேலி மாவட்டம்**

பிற்காலப் பாண்டிய மன்னர்களில் ஒருவரான உக்கிர பாண்டியனுல் கட்டப்பெற்ற இத் திருக்கோயில் திருநெல்வேலி மாவட்டத்தில் ஒரு புகழ்பெற்ற பிரார்த்தனை ஸ்தலம். அன்னை கோமதியின் அருந்தவத்துக்கு இறங்கி மாநிலத்தோர் சிவன் வேறு, திருமால் வேறு என்று வேறுபடுத்துவது தவறு என்று உணரும் பொருட்டுச் சிவபிரான் பாதி சங்கரனும், பாதி நாராயணனுமாகக் காட்சிக் கொடுத்த தலம் இது ஒன்றே.

இருப்பிடம் : மதுரையிலிருந்து 80 மைல். குற்றாலத்திலிருந்து 30 மைல். திருநெல்வேலியிலிருந்து 35 மைல், விருதுநகர் தென்காசி குறுக்குப் பாதையில் உள்ளது.

விசேடம் : சங்கரநாராயணர் திருக்கோலம் உள்ள தலம். பொல்லாத பிணியனைத்தும் போக்கும் புற்று மருந்துள்ள புனித தலம். ஆன்ம சுகமளிக்கும் (பேய் பிசாசுகளிடமிருந்து விடுவிக்கும்) ஆவுடைத்தாய் அமர்ந்திருக்கும் கோயில்.

ஆண்டுக்கு இரு முறை சூரிய பூசை, சூரிய ஒளி சிவலிங்கத் திருமேனி மேல் விழுதல் இன்றும் நடைபெறுகின்றது.

இத்திருக்கோயிலில் 4.5 லட்சம் செலவில் திருப்பணி தொடங்கப் பெற்றுத் திருப்பணி வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. திருப்பணிக்குப் பக்தர்கள் தாராளமாக நன்கொடை வழங்கக் கேட்டுக் கொள்ளப்படுகிறுர்கள்.

அவசியம் ஒரு முறையேனும் தரிசிக்க வேண்டிய அற்புத தலம். யாத்திரிகர்கள் விடுதி வசதி உண்டு.

**திரு. பூ. உள்ளமுடையார் துரை,**
தலைவர், அறங்காவலர் குழு.

**ஈ. பிச்சையா, பி. ஏ.,**
செயல் அலுவலர்.

திரு. வெ. கீடற்கரை, திரு. கி. வெங்கட்ராமன்,
திருமதி அரு. குருவம்மாள், திரு. க. பழனிச்சாமி,

**அறங்காவலர்கள்**

ஓம் சக்தி துணை

# அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோயில்

## பண்ணாரி அஞ்சல், சத்தியமங்கலம் வட்டம், கோவை மாவட்டம்

அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் சத்தி—மைசூர் நெடுஞ்சாலையில் 12 கிலோ மீட்டர் தொலைவில் பண்ணாரி என்னும் திருத்தலத்தில் தாமரை மலரில் வீற்றிருந்து கோலத்தில் சாந்தசொரூபியாக வேண்டுவோர்க்கு வேண்டிய வரங்களை அள்ளி அள்ளி வாரி வழங்கும் கண்கண்ட தெய்வமாக எழுந்தருளி உள்ளாள். மூர்த்தி சுயம்புலிங்கமாகும். பங்குனி மாதத்தில் நடைபெறும் குண்டம் பெருந்திருவிழாவிற்குக் கோவை மாவட்டத்திலிருந்தும், தமிழகத்தின் ஏனைய பகுதிகளிலிருந்தும், கர்னாடகா, ஆந்திரா, கேரளா மாநிலங்களிலிருந்தும், மூன்று இலட்சத்துக்கு மேற்பட்ட பக்தர்கள் வந்து மேற்படி திருவிழாக் காட்சிகளைக் கண்டு களித்து, பிரார்த்தனைகளை உண்டியல்களில் செலுத்திச் செல்கின்றனர். ஆண்டு ஒன்றுக்குப் பிரார்த்தனை உண்டியல்கள், கடைகள் மூலம் இத்திருக்கோயிலுக்கு நான்கு இலட்ச ரூபாய் வருமானம் வருகிறது.

இம்மையில் செய்த பாவங்கள் நம்மை விட்டு விலக, பிணிகள் அகல, தொல்லைகள் நீங்க வேண்டிய வரங்களைப் பெற அருள்மிகு அன்னை பண்ணாரி மாரியம்மன் வந்து தரிசித்து அருள்பெற்று உய்யுமாறு வேண்டுகின்றோம்.

**சி. பி. வீரப்ப கவுடர்,**
அறங்காவலர் குழுத்தலைவர்.

**கு. சிதம்பரம்,** பி. ஏ.,
செயல் அலுவலர்.

**எஸ். ஜி. கண்ணப்பா, டி. என். ராமசாமி, வி. வெங்கட்ராமன்.**
**சி. டி, வெங்கட்ராம நாயுடு, என். பழனியப்ப கவுடர், வெ. வீரப்ப கவுடர்,**
**உ. இராமசாமி கவுடர், சி. ஆர். தங்கவேல்.**
பரம்பரை அறங்காவலர்கள்

# திருவித்துவக்கோட்டு அம்மான்

திரு. ந. சுப்புரெட்டியார், எம்.ஏ., பி.எச்.டி,

(முற்றொடர்ச்சி)

நோயாளி ஒருவன் மருத்துவனிடம் வருகின்றான். வாளால் அறுத்தும் சூடு போட்டும் அவனது நோயைப் போக்குகின்றான் மருத்துவன். நோய் நீங்கும் பொருட்டு நோயாளி அச்சிகிச்சைத் துன்பங்களைப் பொறுத்துக்கொள்கின்றான். இத்துன்பங்களை விளைவித்த மருத்துவனிடமும் நீங்காத அன்புடையவனாகவே இருக்கின்றான். இங்ஙனமே, துன்பங்களைக் கொடுத்தும் இறைவன் ஆன்மாக்களை உய்விப்பான் என்பது வைணவ சமயக் கொள்கை. இறைவனது கருணை வெள்ளம் துன்ப வடிவிலும் நம்மை வந்தடையும். இறைவனே அனைத்தையும் அருளிக் காப்பவன், என்ற துணிவு ஏற்பட்ட பின்னர் எல்லாத் துன்பங்களையும் பொறுத்துக் கொள்வதைத் தவிர நமக்கு வேறு வழி இல்லை. இந்த நினைவுடன்,

''வாளால் அறுத்துச்
சுடினும் மருத்துவன் பால்
மாளாத காதல் நோ
யாளன் போல் மாயத்தால்
மீளாத் துயர்தரினும்
வித்துவக்கோட்டு அம்மா! நீ
ஆள்ஆ உனதுஅருளே
பார்ப்பன் அடியேனே''.

(மாளாத—நீங்காத; காதல்—அன்பு; ஆள்ஆ(க)—அடிமை உண்டாக; பார்ப்பன்—நோக்கியிரா நின்றேன்).

என்ற ஆழ்வார் பாசுரத்தை வாய் விட்டுப் பாடுகின்றோம். இதனால் பரமான்மா சீவான்மாவுக்கு நன்மை செய்வதிலேயே ஊன்றியிருப்பதும், சீவான்மா பரமான்மாவிடம் நம்பிக்கை கொள்ள வேண்டியிருப்பதும் தெளிவாகின்றன.

மாக்கடலில் ஒரு கப்பல் புறப்படுகின்றது. அக் கப்பலின் பாய்மரத்தின் மீது ஒரு பறவை உள்ளது. கப்பல் நடுக்கடலுக்குச் சென்றவுடன் பறவை பறக்கத் தொடங்குகின்றது. நிலத்தினின்றும் கப்பல் மிகச் சேய்மையில் வந்து விட்டதால் பறவையால் மீண்டும் நிலத்திற்குச் செல்ல முடியவில்லை. கடலிலோ பறவை சென்று தங்குவதற்கு ஏற்ற இடமும் இல்லை. ஆகவே, பறவை மீண்டும் கப்பலின் பாய்மரத்திற்கே வந்து சேர்கின்றது. வாழ்க்கைக் கடலில் உள்ள நாமும் இறைவனாகிய கப்பலின் பாய்மரத்திலுள்ள பறவையின் நிலைமையில்தானே உள்ளோம்? எப்படி எப்படிப் பறந்தாலும் இறுதியில் இறைவனைத்தானே வந்தடைதல்வேண்டும்?

''எங்குப்போய் உய்கேன்உன்
இணையடியே அடையல்அல்லால்
எங்கும்போய்க் கரைகாணாது
எறிகடல்வாய் மீண்டேயும்
வங்கத்தின் கூம்பேறும்
மாப்பறவை போன்றேனே''

(எறி—(அலை) எறியும்; வங்கம்—மரக்கலம்; கூம்பு—பாய்மரம்).

என்ற பாசுரத்தைப் பக்தியுடன் பாடுகின்றோம். மரக்கலத்தின் நிலையில் எம்பெருமானும் பறவையின் நிலையில் நாமும் இருக்கின்றோம். சீவான்மா பரமான்மாவை விட்டு விலகிப் போக முடியாத நிலையையும், பின்னது முன்னதற்கு ஆதாரமாயிருக்கும் நிலையையும் உணர்கின்றோம்.

கதிரவனைக் கண்டு தாமரை மொட்டுக்கள் மலர்கின்றன என்பதை நாம் அறிவோம். செந்நிறமுடைய நெருப்பு, தாமரை மொட்டுக்களின் அருகில் வந்து வெப்பத்தைத் தந்தாலும் அந்த வெப்பத்தினால் தாமரை மலர்வதில்லை. நெருப்பின் வெப்பம் தாமரைக்கு ஒத்து வருவதில்லை. கதிரவனின் வெப்பமின்றிப் பிறிது ஒன்று அது மலர்வதற்குக் காரணமாகாது. அங்ஙனமே, தாம் அனுபவித்தே தீர வேண்டிய கொடிய பாவங்களை இறைவன் தீர்த்தருளாதொழியினும் அவனுடைய எல்லையில்லாத உத்தம குணங்களுக்கேயன்றி வேறொன்றுக்கும் தாம் நெஞ்சுருக முடியாத நிலையைக் குறிப்பிடுகின்றார் ஆழ்வார். இந்த உணர்வுடன் நாம்,

''செந்தழலே வந்து—அழலைச்
செய்திடினும் செங்கமலம்
அந்தரம்சேர் வெய்கதிரோற்(கு)
அல்லால் அலராவால்
வெந்துயர்வீட் டாவிடினும்
வித்துவக்கோட் (டு)அம்மா! உன்
அந்தமில்சீர்க்(கு) அல்லால்
அகங்குழைய மாட்டேனே''

(அழல்—நெருப்பு; கமலம்—தாமரை; அந்தரம்—வானம்; கதிரவன்—சூரியன்; அலர்தல்—மலர்தல்; துயர்—பாவம்; வீட்டாவிடினும்—தீர்த்தருளாதொழியினும்; அந்தம்இல்சீர்—எல்லையில்லாத உத்தம குணங்கள்; அகம்—நெஞ்சம் ; குழைதல்—உருகுதல்).

என்ற பாசுரத்தை நெஞ்சு நெக்குருகப் பாடிப் பரவசமடைகின்றோம். கதிரவன் நிலையில் எம்பெருமானையும் தாமரையின் நிலையில் தம்மையும் வைத்துக் கூறியதன் கருத்தினைச் சிந்திக்கின்றோம். பரமான்மா இன்பந்தருபவன் என்பதையும் சீவான்மா இன்பந் துய்ப்பவன் என்பதையும் அறிகின்றோம். இதில் நாயக—நாயகி பாவனை தொனிப்பதையும் கண்டு இன்புறுகின்றோம்.

எவ்வளவோ காலம் முகிற் கூட்டங்கள் மழை பொழியத் தவறினும் நிலத்திலுள்ள பைங் கூழ்கள் கருநிறங் கொண்ட அம் மேகங்களையே எதிர் நோக்கியிருக்கும். அப்பயிர்களைப் போலவே நாம் அநுபவிக்கும் துன்பங்களை

இறைவன் போக்காவிடினும் அவனது அடிமை களாகிய நாம் அந்த இறைவனிடத்திலேயே நம் மனத்தைச் செலுத்துகின்ருேம்.

''எத்தனையும் வான்வறந்த
காலத்தும் பைங்கூழ்கள்
வைத்துஎழுந்த மாமுகிலே
பார்த்திருக்கும் மற்றவைபோல்
மெய்த்துயர்வீட் டாவிடினும்
வித்துவக்கோட் டம்மா!என்
சித்தம்மிக உன்பாலே
வைப்பன் அடியேனே!''

(பைங்கூழ்கள்—பயிர்கள்; மைத்து—கருநிறங் கொண்டு; மெய்த்துயர்—தவருது அநுபவிக்கும் துன்பம்; சித்தம் — மனம்).

என்ற ஆழ்வார் பாசுரத்தை வாய் விட்டுப் பாடுகின்ருேம். உலகத்து உயிர்கட்கெல்லாம் பரமான்மாவே வாழ்வின் அடிப்படை என்ப தனை அறிந்து கொள்ளுகின்ருேம்.

கோயிலின் அருகில் ஓடும் ஆற்றின் காட்சி நம் மனத்தை விட்டு மறையவில்லை. இந்த ஆறும் இதனைப் போன்ற பல ஆறுகளும் பல இடங்களிலும் பரந்து ஓடி ஆழ்கடலில் சேருமே யன்றி வேறிடத்தே புகுந்து நில்லா. அந்த ஆறுகள் போலவே இறைவனுடைய அந்தந்தக் கல்யாண குணங்கள் தவிர மற்ருென்றை நம் மனம் அநுமதியாத நிலையை வேண்டி நிற்கின் ருேம். இந்த உணர்வுடன்

''தொக்கிலங்கி யாறெல்லாம்
பரந்தோடித் தொடுகடலே
புக்கன்றிப் புலம்நிற்க
மாட்டாத மற்றவைபோல் உன்
புக்கிலங்கு சீரல்லால்
புக்கிலன்கண் புண்ணியனே''

(தொக்கு—திரண்டு; தொடுகடல்—ஆழ்கடல்; சீர்—கல்யாண குணங்கள்).

என்ற பாசுரம் நம் வாயினின்றும் வெளிப்படு கின்றது. இதில் பரமான்மாவின் பெருமையும் சீவான்மாவின் சிறுமையும், இறுதியில் சீவான் மா பரமான்மாவை அடைதலும் புலனுகின்ற மையை அறிகின்ருேம்.

எம்பெருமானிடத்தில் அன்பைச் செலுத்தி அதனுல் செல்வத்தை வெறுக்கின்றவர்களிடம், அவர்களின் நல்வினைப் பயனுல் அச்செல்வம் அவர்களை விடாது விரும்பி வலியத் தொடர்ந்து சேர்தல் இயல்பு. இதனை நாம் அறிந்தாலும் இஃது இறைவனது திருவுள்ளப்படி அமைகின் றது என்பதை நாம் உணராமல் இல்லை. ஆன் மாக்கள் இறைவனுடைய உடைமை என்பதை நாம் அறிவோம். இந்த உடைமையை இறை வன் வெறுத்தொதுக்கினுலும் ஆன்மாக்கள் இறைவனையே பற்றி நிற்கும். இந்த உணர்வு எழும் நிலையில்,

''நின்னையே தான்வேண்டி
நீள்செல்வம் வேண்டாதான்
தன்னையே தான்வேண்டும்
செல்வம்போல் மாயத்தால்
மின்னையே சேர்திகிரி
வித்துவக்கோட் டம்மா!
நின்னையே தான்வேண்டி
நிற்பன் அடியேனே!''

(நீள்செல்வம்—அதிக செல்வம்; திகிரி—சக்க ராயுதம்).

என்ற பாசுரத்தை வாய்விட்டுப்பாடி உணர்ச்சிப் பெருக்கில் திளைக்கின்ருேம். இதில் 'சீவான்மா பரமான்மாவின் உடைமை' (ஸ்வஸ்வாமி பாவ சம்பந்தம்) என்ற உண்மை வெளிப்படுவதை அறிகின்ருேம்.

இந்த உணர்ச்சிப் பெருக்கில் மீண்டும் கோயிலை வலம் வந்து வித்துவக் கோட்டம்மா னிடம் பிரியா விடைபெற்று நம் இருப்பிடம் திரும்புகிருேம். இந்த அரிய பாசுரங்கள் பெரு மாள் திருமொழியில் ஐந்தாம் பதிகம் ஆகும். குலசேகர ஆழ்வாருக்குப் 'பெருமாள்' என்ற மற்ருெரு திருநாமம் உண்டு என்பதைச் சொல்ல மறந்துவிட்டேன். இவர் இராமாய ணத்தில் மிகவும் ஈடுபாடுடையவர்.

தில்லைநகர்த் திருச்சித்ர
கூடந் தன்னுள்
அரசுஅமர்ந்தான் அடிசூடும்
அரசை அல்லால்
அரசுஆக எண்ணேன்மற்(று)
அரசு தானே''

என்று கோவிந்த பாதாரவிந்தத்தைச் சிரமேற் கொள்ளுதலையே கிரீடாபிஷேகமாகப் பாவிக் கின்ற இவர், இராமபிரானது இன்பதுன்பங் களைத் தம் சுகதுக்கங்களாகக் கருதியதனுல் இவருக்குப் 'பெருமாள்' என்ற பெயர் வழங்கி வருகின்றது. அதனுல் இவர் திருமொழி 'பெரு மாள் திருமொழி' என்றே வழங்குகின்றது. சீவான்மா பரமான்மாவின் தொடர்பினைக் கூறும் வித்துவக்கோட்டம்மான் பதிகம்போன்ற ஒரு பதிகத்தை நாலாயிரம் எங்கும் தேடிக் காண்டல் அரிது. இதில் வரும் உவமைகள் பெரும்பாலும் சேர நாட்டு வாழ்க்கையை யொட்டியே அமைந்திருத்தல் குறிப்பிடத்தக் கது.

இந்த ஒப்புயர்வற்ற பதிகத்தை அவர் பாடிய சந்நிதியிலேயே நாமும் பாடி நன்கு அநுபவித்த நிலையில்,

''வாய்த்த கருமம்இனி
மற்றுஇல்லை நெஞ்சமே!
தோய்த்த தயிர்வெண்ணெய்
தொட்டுஉண்ட கூத்தன்
திருவிற்று வக்கோடு
சேர்ந்தால் பிறவிக்
கருவின் துவக்குஓடும் காண்''

(துவக்கு—கட்டு, பந்தம்).

என்ற திவ்விய கவி பிள்ளைப் பெருமாள் அய்யங் காரின் பாடல் நம் நினைவுக்கு வருகின்றது. நம்முடைய பிறவித் தளையே அறுபட்டுப்போன உணர்வினைப் பெறுகின்ருேம். ''கன்றுக்கு இரங்கிய தாய்ப்பசு தோற்கன்றுக்கும் இரங்கு மாப்போலே'' ஆழ்வார்கட்கு அருள் பாலித்த எம்பெருமான் நம் போலியர்களிடமும் கருணை காட்டுவான் என்ற நம்பிக்கை உணர்வுடன் திரும்பி நம் இருப்பிடத்தை அடைகின்ருேம். *

# பூம்புகார் கலைக்கூடம்

# காண வாரீர்!

- கல்லெல்லாம் கதை சொல்லும் சிலப்பதிகாரக் காட்சிகள்!
- புதையுண்ட பூம்புகார் புது வடிவம் பூண்டுள்ளது!
- சிந்தைக்கும் கண்ணுக்கும் தெவிட்டாத தமிழ் விருந்து!
- மனதைக் கவரும் மாதவியின் அழகுச் சிலை.

---

**இவற்றைக் காண பூம்புகார் சிலப்பதிகாரக் கலைக்கூடத்திற்கு வருகை தாரீர்!**

---

பூம்புகார் கலைக்கூடம், சீர்காழியிலிருந்து 21 கிலோ மீட்டர் தொலைவிலும், மாயவரத்திலிருந்து 29 கிலோ மீட்டர் தொலைவிலும் உள்ளது.

இயக்குநர்
**செய்தி, மக்கள் தொடர்புத் துறை, சென்னை-600009**



நெடுங்கல் மன்றம்



எழுநிலை மாடம்

# காதி கிராப்ட்

அளிக்கிறது சுவையும், வெண்மையும்.




ஆடைகள் பளிச்சிட கோபுரம் மார்க் சோப்.

ஆரோக்யம் தரும் சுத்தமான தேன், கதர்த்துணி, பட்டுப்புடவைகள், ரெடிமேட் ஆடைகள், சுத்தமான எண்ணெய், கலையழகு கொஞ்சும் கைவண்ணப் பொருள்கள், பொம்மைகள், பனை வெல்லப் பொருள் மற்றும் தரமேன்மையான பற்பல பொருட்களையும் வாங்கலாம்.

தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி மாநிலங்களில் 200க்கும் மேலான காதி கிராப்ட்கள் மக்களின் தேவைகளை பூர்த்தி செய்கின்றன.

| தொலைபேசி | சென்னை | திருச்சி | கோவை |
|---|---|---|---|
| | 29684 | 3814 | 35051 |
| | 81954 | | |





வெளியிடுபவர்; ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, சென்னை-600034.
ஆசிரியர் : ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.
அச்சிடுவோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.